
P.Yalini
எலிகள் கேட்டுச் சொன்ன
குறள்க் கதைகள் - 03

# எலிகள் கேட்டுச்சொன்ன குறள்க் கதைகள் - 03

## என்னுரை

திருக்குறளுக்குப் பல்வேறு இலக்கிய வடிவங்களை நான் கொடுத்துள்ளேன். உரையைத் தவிர வேறு எதையும் கண்டிராத திருக்குறளுக்கு நான் பல இலக்கிய வடிவங்களை கொடுத்துள்ளேன். இப்போது திருக்குறளின் உரையளவிற்கு கதையெழுதியுள்ளேன். திருக்குறளின் உரையைக் கூடச் சாதாரண மக்களால் அறிந்து கொள்ள முடியாது. எனது இப்புதிய இலக்கிய வடிவத்தை எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். விளங்கிக் கொள்ள முடியாத இலக்கியங்கள் காலகதியில் மரணித்து விடுகின்றன. இது சங்க காலம் தொட்டு நடைமுறையில் உள்ளது.

இந்நூலில் ஆயிரத்து எண்பது குறள்களுக்கான கதைகள் உள்ளன. வாசித்து விட்டு விமர்சியுங்கள். இந்த நூலுக்கு அழகான அட்டைப் படத்தை வடிவமைத்துத் தந்தும், கணனி மயப்படுத்தியும் தந்த ப.யாழினி அவர்களுக்கு நன்றி.

**தமிழறிஞர்**

**கே.வி.குணசேகரம்.**

**40. கல்வி**

**391. கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக.**

நமசிவாயகத்தின் மூத்த சகோதரனின் மகன் காண்டீபன். பட்டதாரி. சமீப காலமாக மதுவை அளவுக்கு அதிகமாக குடித்து விட்டுச் செய்யக் கூடாத செயல்கள் பலவற்றைச் செய்கிறான். அது நமசிவாயகத்திற்குப் பெருங்கவலை. பல முறை அவனைச் சந்தித்துப் புத்திமதிகள் கூறியும் அவன் கேட்டவில்லை. இன்று காலை கோவிலுக்கு வந்த காண்டீபனுக்கு நமசிவயாகம் சொன்னார், ‘‘மகனே கற்க வேண்டிய நூல்களையெல்லாம் தேடித் தேடித் தந்தேன். அவற்றையெல்லாம் நன்கு விளங்கிக் கற்றாய். அவற்றை மற்றவர்களுக்கும் உபதேசித்தாய். இன்று அவற்றை எல்லாம் மறந்து மிகமிகக் கீழ்த்தரமாக வாழ்கிறாய். கற்றவன் கற்றபடி வாழ விட்டால் கற்ற கல்வியால் என்ன பயன். கற்றவன் நல்லவற்றைச் செய்து முன்மாதிரியாக வாழ வேண்டும். நீ நான் சொல்வதைக் கேட்கிறாய் இல்லை. அதனால் துன்பங்கள் தான் வரும். மனதை மாற்று. மாற்றா விட்டால் உனக்கும் குடும்பத்திற்கும் பெருகேடு வரும்’’ என்று அழுததைக் கண்டேன். என்றது குமரன் எலி.

‘‘கற்ற பலர் கற்ற படியா வாழ்கின்றனர். பெரியவர்களின் சொல்லை அலட்சியப்படுத்துபவர்களை விட்டுத் துன்பங்கள் அகலாது’’ என்றது லட்சுமி எலி.

**392. எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்**

**கண்என்ப வாழும் உயிர்க்கு**

''மகனே எண்ணையும் எழுத்தையும் மனிதர்கள் தம் இரு கண்களாக கருதல் வேண்டும். நீ அப்படிக் கருதித்தான் வாழ்ந்தாய். இடையில் உனக்கு என்ன நிகழ்ந்தது. துன்பங்கள் துயரங்கள் இயல்பானவை. பகலும் இரவும் போல மாறி மாறி வரும். எண்ணையும் எழுத்தையும் நல்ல முறையில் கற்றவன் நீ. எண் பணம் சம்பாதிக்க உதவும். எழுத்து செல்வத்தையும் அறிவையும் விருத்தி செய்யும். இதை திரும்பத் திரும்பக் கூறுவதால் பிரயோசனம் இல்லை.

துன்பங்களை, பிரச்சினைகளைப் பேசித்தீர். அதற்கு எண்ணும் எழுத்தும் உதவி செய்யும். மனிதன் இன்பமாக வாழப் பிறந்தவன். சகல வசதிகளும் இருந்தும் நீ ஏன் துன்பப்படுகிறாய். உனது கண்களைப் போன்ற அறிவால் சிந்தி'' என்று நமசிவாயகம் அழுதார்'' என்றது குமரன் எலி.

''யாருடைய புத்திமதிகளையும் கேட்கமாட்டேன் என்று பிடிவாதமாக நிற்பவன் சிறிது சிறிதாக நல்வாழ்வை இழக்கிறான் என்று படித்தவனுக்குத் தெரியாதிருக்கிறது'' என்றது லட்சுமி எலி.

**393. கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்துஇரண்டு**

**புண்ணுடையர் கல்லா தவர்.**

''மகனே, கற்றவர்களே கண்ணுடையவர்கள் என்று பெரியவர்கள் சொல்வார்கள். கற்றவர்கள் தாம் பெற்ற அறிவால் உலகைப் புரிந்து தாமும் இன்பமாக வாழ்ந்து, மற்றவர்களையும் இன்பமாக வாழ வைப்பார்கள். கண்ணில்லாதவர்கள் வாழ இன்னொருவரின் உதவி தேவை. நீ கற்ற அறிவுக் கண்களை உடையவன். அறிவில்லாதவர்களின் முகத்தில் உள்ள புண்களைப் போல உனது கண்களும் புண்களாகி விட்டனவா…? பாடசாலைப் பக்கம் போகாத முட்டாள்களைப் போல வாழவா உன்னைக் கற்பித்தேன். பட்டதாரி என்று சொல்ல எனக்கு வெட்கமாக உள்ளது. கண்களிருந்தும் குருடனாக நீ வாழ்வதைப் பார்க்க எனக்கு வேதனையாக உள்ளது'' என்று நமசிவாயகம் அழுவதைப் பார்க்கத் துக்கமாக இருந்தது''. என்றது குமரன் எலி.

''இப்பகுத்தறிவையில் பலர் அப்படித்தான் நடக்கின்றனர். தாம் கற்றவர்கள் என்பதை எண்ணிப்பார்ப்பதேயில்லை'' என்றது லட்சுமி எலி.

**394. உவப்பத் தலைக்கூடி உள்ளப்பிரிதல்**

**அனைத்தே புலவர் தொழில்**

''மகனே, மகிழ்வுடன் உறவாடி இனி இவனை எப்போது காணப்போகிறேன் என்று கவலையுடன் நினைத்துப் பிரித்து செல்வது தான் கற்றவர்களின் பண்பாகும். செந்தூரன்

உனது நண்பன். ஆரம்ப வகுப்பிலிருந்து பல்கலைக் கழகக் கல்விவரை ஒன்றாகக் கற்றவன். மிகவும் நல்லவன். எனது அன்புக்குப் பாத்திரமானவன். அவன் உயர்கல்வி கற்க வெளிநாடு செல்கிறான். அதைச் சொல்ல உன்னிடம் அவன்வந்த போது நீ அவனைத் தேவையில்லாமல் அவமானப்படுத்திப் பேசக்கூடாதவார்த்தைகளைப் பேசியுள்ளாய். அவன் மிகுந்தவேதனையுடன் எனக்குச் சொன்னான். நீ ஏன் இப்படி மாறினாய் உனக்குள்ள பிரச்சினையைச் சொல். தீர்க்க முடியாத பிரச்சினைகள் எதுவும் உலகத்தில் இல்லை'' என்று நமசிவாயகம் மிகுந்த கவலையோடு சொல்ல அதைக்கேளாதவன் போலக் காண்டீபன் நின்றான்'' என்றது குமரன் எலி.

''குடித்துவிட்டால் கடவுள்வந்து சொன்னாலும் கேட்க மாட்டார்கள். பாவம் நமசிவாயகம். அன்பாக வளர்ந்தமையால் துன்பப்படுகிறார்'' என்பது லட்சுமி எலி.

**395. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரே கல்லா தவர்.**

''மகனே செல்வர்கள் முன் வறியவர்கள் ஒருபொருளுக்காக ஏங்கிநிற்பது போலக் கற்றவர்கள் முன்னே ஏங்கிப் பணிந்துநின்று கற்றவன் நீ. இன்று கல்லாதவர்கள் போல மிகவும் கீழ்த்தரமாக நடந்து கொள்கிறாய். எனக்குப்புரியவில்லை. நீயும் சொல்கிறாயில்லை. நீபெரிய பணக்காரனான கனகசபையின் மகள் நிவேதாவைக் காதலித்த போது கனகசபைக்கு உன்னைத்திருமணம் செய்யவிருப்பமில்லை. வைத்தியர், பொறியியலாளர் என்று மாப்பிளை தேடியவர். எனக்காகவும் கதிரேசனுக்காகவும் செய்து வைத்தவர். இப்போ அவரைக் கண்டதும் நான் மறைத்து விடுகிறேன். இது எனக்குத் தேவைதானா…? கற்றவர்கள் மற்றவர்களின் நலனைப் பாதிக்கவிடமாட்டார்கள் உனது செயல்களால் நான் மறைந்து வாழ்கிறேன்'' என்று அழுதார். எனக்கும் அழுகை வந்துவிட்டது'' என்றது குமரன் எலி.

''நல்லவர்களை வருத்துவோர் தண்டனைக்குள்ளவர்'' என்றது லட்சுமி எலி.

**396. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத்து ஊறும் அறிவு**

''மகனே, நிலத்தை எவ்வளவு ஆழமாகத் தோண்டுகின்றோமோ அந்த அளவிற்கு நீர் ஊறும். அதுபோல ஒருவன் எந்தளவிற்கு நூல்களைக் கற்கின்றானோ அந்த அளவிற்கு அறிவு மேம்படும் என்பார்கள். தேடித்தேடி அரியபல நூல்களைக் கற்ற நீ எதற்காக அறிவிலியைப்போல நடக்கிறாய். நிலத்தைத் தோண்டத்தோண்டநீர் வராத நிலையைப் போன்றதாகிவிட்டது உனது கல்வி. இதனால் ஊரவர்க்குப் பிரயோசனம் இல்லாவிட்டால் பரவாயில்லை. உனக்குமல்லவா பிரயோசனம் இல்லாதிருக்கிறது. இதைப்பற்றிப் யோசி. இன்னும் காலம் கடந்து விடவில்லை'' என்று அழுதார். காண்டீபன் மரத்தைப்போல நின்றான்'' என்றது குமரன்எலி.

''கற்றவன் தகாத செயல்களைச் செய்தால் அவன் மரம்தானே'' என்றது லட்சுமிஎலி.

**397. யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு.**

“மகனே, கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. முன்பு உனது பேச்சைக் கேட்க எவ்வளவு பேர் கூடுவார்கள். எத்தனை ஊர்களில் இருந்து பேச அழைப்பு வரும். கற்றவனின் அறிவு, உலகம் முழுவதற்கும் உரியது. அப்படி நீ வரவேண்டுமென்று நினைத்தேன். எனது நினைவு நிஜமானது. ஆனால் தற்போது நீ மனம் மாறியதால் கற்றவர்கள் வெறுக்கின்றனர். ஏசுகின்றனர், கேலி செய்கின்றனர். இது நல்லதற்கல்ல. அதனால் மகனே, மனிதரைச் சீரழிக்கும் மதுவைக் குடிப்பதை விடு” என்று நமசிவாயகம் கெஞ்சினார்” என்றது குமரன்எலி.

“குடிப்பவன் தானாக நினைத்துத் திருந்தவேண்டும். மற்றவர்களின் வற்புறுத்தலுக்காகத் திருத்தக்கூடாது” என்றது லட்சுமி எலி.

**398. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**

“மகனே, ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வி அப்பிறப்புக்கு மட்டும் உதவுவதில்லை. அவன் எடுக்கும் ஏழு பிறப்பிற்கும் உதவும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். ஒருவனை வாழ வைப்பது கல்வி, அவனை மதிக்கச் செய்வது கல்வி, அவனுக்குப் புகழைக்கொடுப்பது கல்வி. வாழ்வும், மதிப்பும், புகழும், கல்வியால் உனக்கிருந்தது. ஆனால் உனது துர்நடத்தையால் யாவும் அற்றுப்போய்விட்டது. தவறுகள் செய்வது மனித இயல்பு. அதை உணர்ந்து திருத்துவது கல்வியால் பெற்ற அறிவால் என்பதை உணர்ந்து கொள். பெரும்பெரும் முனிவர்கள் பெருந்தவறுகள் செய்துள்ளனர்.. பின்தாம் பெற்ற கல்வியால் அவை தவறென உணர்ந்து திருந்தி வாழ்ந்ததால் அவர்களது அறிவுரைகளை மக்கள் போற்றுகின்றனர். அவர்கள் பேராடும் புகழோடும் வாழ்கிறார்கள் என்பதை நீ அறியவில்லையா?” என்று நமசிவாயகம் துயரத்துடன் கூறினார் என்றது குமரன் எலி.

“அறிவை மது மறைத்துவிடும் பிறகு புத்திமதியால் எதுவும் நடவாது” என்றது லட்சுமி எலி.

**399. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

“மகனே, கற்றவர்கள் பலவழிகளாலும் மகிழ்ச்சியடையக் காரணமாக இருப்பது கல்வி என்று தெரிந்து, தம்மையும் மற்றவர்களையும் மகிழ்ச்சிப்படுத்துவதற்காக மேலும் மேலும் கற்பர். கற்கக் கற்க அறியாமை நீங்கி அறிவுபெருகி பெருமகிழ்வுண்டாகும் என்பதை அறிந்து மகிழ்வுடன் வாழ்வர். ஆனால் நீ இவற்றையெல்லாம் மறந்து அற்ப இன்பத்திற்காகச் செய்யக்கூடாத செயல்களைச் செய்கிறாய். கல்வி நல்லவற்றை மட்டும்தரும். எப்படி

உனக்குக் கல்வி தீயவற்றைத் தந்தது. அதை நினைக்க என் நெஞ்சே வெடித்து விடும்போலுள்ளது''. என்று அழுதார்'' என்றது குமரன்எலி''.

''குடித்தவனுக்கு எதுவும் தெரியாதென்பார்கள். நமசிவாயகம் சொன்னதா விளங்கும்'' என்றது லட்சுமி எலி.

**400. கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடுஅல்ல மற்றை யவை.**

''மகனே, கல்வியைப்போன்று சிறப்புக்கள் பலவற்றையும் தரும் செல்வம் வேறு எதுவும் இல்லை. இது தெரிந்த நீ கல்லாதவனைப்போலச் செயற்படுகிறாய். கற்ற அம்பலவாணரை மக்கள் மதிக்கிறார்கள், அரசும் மதிக்கிறது, பெரியார்களும் மதிக்கின்றனர். அவரைப்போல வாழ்ந்த நீ இன்று கற்காத பேதைகளை விடக் கீழானவனாகிவிட்டாய். அதனால் உனது பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு மதிப்பு மிக்கவனாகமாறு. அது தான் எனது இறுதி விருப்பம்'' என்று துயரத்துடன் கூறினார்'' என்றது குமரன் எலி.

''மதுபானம் பெரியவர்களின் தொடர்புகளையெல்லாம் சீரழித்துக் கேவலப்படுத்தும் என்று காண்டீபன் உணர்கிறானில்லை'' என்றது லட்சுமி எலி.

**41. கல்லாமை.**

**401. அரங்குஇன்றி வட்டாடி அற்றே நிரம்பிய**
**நூல்இன்றிக் கோட்டி கொளல் .**

''காண்டீபனது நண்பன் நகுலன். அவன் அதிகம் படிக்கவில்லை. ஆனால் காண்டீபன் மேடைகளில் ஏறிப் பேசும் போது கேட்பான். அதனால் அறிவை வளர்த்துக் கொண்டவன். காண்டீபன் குடிப்பதால் அவனை யாரும் பேச்சுக்கு அழைப்பதில்லை. அது நகுலனுக்கு கவலை அளித்தது. அத்துடன் தான் பேசினால் என்ன என்ற எண்ணமும் மனதில் எழுந்தது. அதனால் அவன் நமசிவாயகத்திடம் சென்று தான் மேடைகளில் பேசப்போவதாக கூறினான். அதைக் கேட்ட நமசிவாயகம் சொன்னார்; ''நகுலா, மேடையில் பேசுவதென்பது சாதரண விடயமல்ல. கற்ற பலர் கேட்க வருவார்கள். அதனால் அறிவுதரக் கூடிய நூல்களை விளங்கிப் படி. படிக்கப் படிக்க அறிவு மேம்படும். அதை விட்டு விட்டு நல்ல நூல்களைப் படிக்காது பேசுவதென்பது, ஆடுவதற்குரிய இடத்தை உண்டாக்காது சூதாடுவதைப் போன்றதாகும். அதனால் நல்ல நூல்களை ஆசிரியரின் உதவியோடு கல்.'' என்றவர் என்றது குமரன் எலி.

''கம்பனது வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும் என்று சொல்வார்கள். நமசிவாயகத்தின் சொற்படி நடந்தால் பேசலாம் என்றது லட்சுமி எலி.

**402. கல்லாதான் சொல்கா முறுதல் முலைஇரண்டும்**

**இல்லாதாள் பெண்காமுற் றற்று.**

"மகனே கற்றவர் நிறைந்த சபையில் கல்லாதவன் ஒன்றைச் சொல்ல விரும்புவது மார்பகங்கள் இரண்டும் இல்லாத ஒரு பெண் குழந்தைக்குப் பாலூட்ட விரும்புவது போன்றது. காண்டீபன் பண்டிதர் வீரகத்தியிடம் பல வருடங்கள் இலக்கணம் கற்றவன்.அத்துடன் நீதி நூல்கள் பலவற்றையும் கற்றவன். முயற்சியுடையவன் மலையையும் தூக்குவான். அதனால் முதலில் கல். பின் பேச நினை" என்று நமசிவாயகம் நகுலனுக்குச் சொன்னவர். என்றது குமரன் எலி

"பேச விரும்பினால் கற்கத்தானே வேண்டும்" என்றது லட்சுமி எலி.

**403. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**

**சொல்லா திருக்கப் பெறின்.**

"மகனே நீ அறிவுள்ளவனாக வர வேண்டுமானால் முதலில் அறிவு நிரம்பிய நூல்களைக் கற்க வேண்டும். அத்துடன் அறிவு வரும் வரை கற்றவர்களுடன் கூடியிருக்க வேண்டும். அவையில் அவர்களின் பேச்சைக் கேட்க வேண்டுமே தவிர அவர்களுடன் உரையாடக் கூடாது. அப்படி இருந்தாயேயானால் நீயும் கற்றவனாவாய். நிரம்பக் கல். கற்றவர்களை மதி. அவர்களுடன் விவாதம் செய்யாதே. அப்படி வாழ்ந்தாயேயானால் நீயும் கற்றவனாவாய். என்று நமசிவாயகம் சொல்ல நகுலன் அதை ஏற்றுக் கொண்டான்." என்றது குமரன் எலி.

"அப்ப அவன் நாளடைவில் கல்விமானாவான்." என்றது லட்சுமி எலி.

**404. கல்லாதான் ஒட்பம் கழியநன்று ஆயினும்**

**கொள்ளார் அறிவுடை யார்.**

"கல்வியறிவில்லாத மார்க்கண்டு சில விடயங்களை மனனஞ் செய்து பேசிவருகிறான். அது பாமரமக்களுக்குச் சரி. அறிஞர்கள் அது பற்றி விவாதித்தால் அவன் தனக்கு வேறு வேலை இருக்கிறது என்று கூறி அவ்விடத்தை விட்டுச் சென்று விடுவான். அது அல்ல அறிவு. மக்களின் ஐயத்தை தீர்க்க வேண்டும். அறிஞர்களின் பாராட்டைப் பெற வேண்டும். கல்வியறிவில்லாத ஒருவன் சில வேளைகளில் சிறப்பாகத் தனது அறிவைக் காட்டிக் கொண்டாலும், கற்றவர்கள் அதனை அறிவுடைமை என ஏற்கார். அதனால் நன்றாகக் கல்" என்று நமசிவாயகம் நகுலனுக்குக் கூறினார். என்றது குமரன் எலி.

"ஆர்வமுள்ளவன் பெரியவர்களின் பேச்சைக் கேட்டால் முன்னேறுவான்" என்றது லட்சுமி எலி.

**405. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**

**சொல்லாடச் சோர்வு படும்.**

‘‘நகுலா கல்லாத ஒருவன் தன்னை அறிவுடையவன் எனக் காட்டிக்கொள்ளும் தன்மை, அவன் கற்றவர் முன் வாய் திறந்து பேசும்போது வெளிப்பட்டு விடும் மார்க்கண்டன் தான் தவசியென்றும் நீதிநூல்களையும் வேத உபநிடதங்களையும் கற்றவன் என்றும் சொன்னதால் அயலூரில் அவனைப்பேச அழைத்தனர்.

அவன் கொடுத்த தைப்பிற்குத் தொடர்பில்லாது உழறியதால் அங்குள்ள பெரியவர்கள் அவனை அவ்வூருக்கு விடக் கூடாதெனக் கட்டளையிட்டனர். அதனால் நன்றாகக்கற்ற பின்பு பேசத் தொடங்கு’’ என்று நமசிவாயகம் சொன்னார்’’ என்றது குமரன் எலி.

‘‘அதைக்கேட்டு நடந்தால் போற்றப்படுவான். இல்லையென்றால் அடிதான் வாங்குவான்’’ என்றது லட்சுமி எலி.

**406. உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களர் அனையர் கல்லா தவர்.**

‘‘நகுலா, கல்லாத ஒருவன் களர்நிலத்திற்குச் சமமானவன். களர்நிலத்தில் எந்தப்பயிரும் வளராது. அவர்கள் கையைக் காலை அசைப்பதால் உயிரோடு இருக்கிறார்கள் என்றுதான் எண்ணத்தோன்றும். கல்லாதவர்கள் பயனில்லாதவர்கள். எதையும் செய்யமுடியாதவர்கள். அதனால் நீபடி. மேடைகளில் பேசமுடியாவிட்டாலும் கற்றகல்வியைக் கொண்டு இன்பமாக வாழலாம். கல்விதான் தேடமுடியாத செல்வம் தேடினால் அழியாத செல்வம். அது பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும்’’ என்று நமசிவாயகம் கூறினார்’’ என்றது குமரன் எலி.

‘‘அழகாகச் சொல்லியிருக்கிறார். கேட்டால் பயனடையலாம்’’ என்றது லட்சுமி எலி.

**407. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**

**மண்மான் புனைபாவை அற்று.**

‘‘நகுலா, நீ நல்ல அழகன். தைரியசாலி. ஆனால் கற்காதவன். மண்பொம்மையைச் செய்பவன் விற்பனைக்காக அதை அழகாகச் செய்துள்ளான். அதை எல்லோரும் விரும்புவார்கள். அந்த அழகான மண்பொம்மை போன்றவன் தான் நீ. கடவுள் உன்னை அழகாகவும் தைரியவானாகவும் படைத்துள்ளார். அவர் தந்த மூளையைக் கொண்டு கல்வி மூலம் அறிவைத் தேடுபவன் தான் கல்விமான். அவன் தான் அழகன். பலசாலி, புத்தியுள்ளவன்.

எனவே சோம்பியினது கற்று முன்னேறு'' என்று நமசிவாயகம் கூறினான்'' என்றது குமரன் எலி.
''அவர் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லிவிட்டார். கேட்டால் நன்மை'' என்றது லட்சுமி எலி.

**408. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**

**கல்லார்கண் பட்ட திரு.**

''நகுலா, உனது தந்தை தனவந்தர். அவர் உன்னைக் கற்பிக்க எவ்வளவோாா சிரமப்பட்டார். நீபடிக்க விரும்பாது ஊர்சுற்றினாய். உனது தந்தை கற்றவர். அதனால் பல்வேறு விதமான தொழில்களைச் செய்து சம்பாதித்தோடு அப்பணத்தைத் தருமகாரியங்களுக்குச் செலவு செய்தவர். அச்செல்வம் உனது தகப்பனாரின் பின் உன்னை வந்தடையும். அதை நீ நல்லமுறையில் பாதுகாப்பாயா..? கல்லாதவர்களிடம் சேர்ந்துள்ள செல்வமானது, நல்லவர்களிடம் உள்ள வறுமையை விடக்கொடியது என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதைப் பாதுகாக்கவென்றாலும்படி'' என்று நமசிவாயகம் கூறியவர்''என்றது குமரன் எலி.
''நகுலன், இப்பவே செலவாளி. பணம் வந்தால் பலரும் சேர்வர். அதன்பின் ஓரிரு வருடங்களில் முழுப்பணமும் கரைந்துவிடும்''. என்றது லட்சுமி எலி.

**409. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**

**கற்றார் அனைத்துஇலர் பாடு.**

''நகுலா, கல்லாதவர்கள் உன்னைப்போல உயர்ந்த குடியில் பிறந்திருந்தாலும் மேன்மக்கள் மதிக்க மாட்டார்கள். அதுபோலக் கற்றவர்கள் தாழ்ந்த குடியில் பிறந்தாலும் மேன்மக்களால் மதிக்கப்படுவர். சென்றவருடம் எமது ஊருக்குவந்த கல்வி அசைச்சர் ஊரில் உள்ள கற்றவர்களை அழைத்துப்பேசினார். கல்லாதவர்களும் பணக்காரர்களும் அவரைப்பார்க்க முண்டியடித்தனர். அவர்களால் பார்க்க முடியவில்லை. உயர்குடிப்பிறப்போ பணமோ மதிக்கப்படுவதில்லை. கற்றவர்களே மதிக்கப்படுவார்கள். அதனால்படி'' என்று நமசிவாயகம் கூறினார் என்றது குமரன் எலி.
''பணக்காரர்கள் மாலைகளுடன் வரிசையாக நின்றவர்களாம். அமைச்சர் சந்திக்கவில்லையாம்'' என்றது லட்சுமி எலி.

**410.** விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர்.

''இதிலிருந்து நீ என்ன நினைக்கிறாய்? அறிவு மிகுந்த நூல்களைக் கற்றவர்களே மக்களாலும் கற்றவர்களாலும் மந்திரி பிரதானிகளாலும் மதிக்கப்படுவர். கல்லாதவர்கள் மிருகங்களுக்குச் சமமானவராவர். அத்துடன் நீ உனது பணத்தைக் காப்பாற்ற வேண்டும். உனது பரம்பரையினர் செய்த தானதர்மங்களைச் செய்தல்வேண்டும். உன்னை மக்கள் மதிக்கவேண்டும். இதற்காக நீ கற்கவேண்டும்'' என்று நமசிவாயகம்கூற நகுலன் அவரின் காலைத்தொட்டு வணங்கிவிட்டு ''கட்டாயம் படிப்பேன் என்றான்'' என்றது குமரன் எலி.

“நகுலன் படிக்கிறதாய் முடிவெடுத்துவிட்டான். ஆனால் படிக்கவேண்டும்” என்பது லட்சுமி எலி.

**அதிகாரம் - 42 கேள்வி**

**411. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**

**செல்வத்துள் எல்லாம் தலை.**

“இன்றுகாலை நகுலனின் தந்தை கோவிலுக்கு வந்து சுவாமியைத்தரிசனம் செய்துவிட்டு வந்து மிகுந்த துயரத்துடன் நமசிவாயகத்திற்குச் சொன்னார், “எனது மகள் அஞ்சலி நல்ல அழகி. கற்றவள். அவளின் அருகே யுத்தத்தின் போது செல்விழுந்தமையால் அவளது செவிப்பாறைகள் பாதிப்புக்குள்ளாகின. அதனால் அவளால் கேட்கமுடியாது. பேசிவரும் சம்பந்தங்கள் குழம்புகின்றன. நேற்று ஒரு திருமணம் பேசி வந்தது. அஞ்சலிக்குக் காது கேட்காது என்றதும் எழுந்து சென்றுவிட்டனர். செவியால் கேட்பது பெரும் செல்வமாகும். அது ஏனைய செல்வங்கள் அனைத்தையும் விட மேலானது. அதனால் உங்கள் மகளைத்திருமணம் செய்யமாட்டோம் என்று பலர் நேரடியாகக் கூறிவிட்டனர். நான் கடவுளுக்கு என்ன குறைவிட்டேன்” என்று அழுத போது என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை” என்றது குமரன் எலி.

“மனிதர்கள் காசுக்காக எப்படியான பொண்ணையும் திருமணம் செய்வார்கள். சென்றவாரம் செல்தாக்கி ஒரு கண்ணை இழந்தபெண்ணுக்கு ஒருகோடி ரூபா சீதனமாகக் கொடுத்தார்களாம். தங்கைக்கு ஐம்பது இலட்சம் கொடுக்கப்பட்டதாம்” என்றது லட்சுமி எலி.

**412. செவிக்குஉணவு இல்லாத போழ்து சிறிது**

**வயிற்றுக்கும் ஈயப் படும்.**

“செவிக்கு உணவு இல்லாத போது சிறிதளவு உணவு வயிற்றுக்கும் தரப்படும். என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். இப்போ பலர் அதைக் கடைப்பிடிக்கிறார்கள். ரீவிக்கு முன்னால் இரவும் பகலும் இருப்பதால் கச்சேரிகளுக்கும், மேடைநாடகங்களுக்கும் நாட்டிய நிகழ்வுகளுக்கும் யாரும் செல்வதில்லை. கோவிலில் சாமி காவவே ஆள் இல்லை. மிகவும் கேவலமான நிகழ்வுகளைத் தானே கேட்டறிதல் மூலம் செவிக்கு உணவு கொடுக்கிறார்கள்” என்றது லட்சுமி எலி.

“ம் - நீ சொல்வதும் சரிதான்” என்றது குமரன் எலி.

**413. செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்**

**ஆன்றாரொடு ஒப்பர் நிலத்து**

“சென்றவாரம் ஒரு திருமணம் அஞ்சலிக்குப் பேசி வந்த தாம் மாப்பிளையின் தகப்பன், செவிக்கு உணவான கேள்வி அறிவை உடையவர்கள் பூமியில் வாழ்ந்தாலும் அவர்கள் விண்ணுலகில் அமிர்தத்தை உண்ணும் தேவர்களுக்கு இணையானவர்கள்” என்று கூறி விட்டுச் சென்றாராம். மறுநாள் கல்யாணத்தரகன் வந்து தான் மாப்பிளையின் தந்தையை ஒப்புக்கொள்ளவைக்கிறேன். எனக்கு ஐந்து இலட்சம் ரூபா தரகுப்பணமாகத் தாருங்கள்” என்று கேட்டவனாம். தவரத்தினம் அதற்கு ஒப்புக்கொண்டவராம்” என்று நமசிவாயகம் சொன்னவர் என்றது குமரன் எலி.

“பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும். காசிருந்தால் மனிதனுக்கு எதுவும் தேவையில்லை.” என்றது லட்சுமி எலி.

**414.** கற்றிலன் ஆயினும் கேட்க அ.்.துஒருவற்கு

ஒற்கத்தின் ஊற்றாம் துணை.

“மறு நாள் மாப்பிள்ளையின் தந்தை வந்து தவரத்தினத்திற்குச் சொன்னாராம்; “ஐயா ஒருவன் கற்காவிட்டால், கற்றவர்களிடம் கேட்டுக் கற்கலாம்.அது அவனுக்கு உயர்ந்த தகுதியைக் கொடுக்கும். ஆனால் கற்றவர்களானலும் அதை வெளிப்படுத்தக் கேட்டல் திறன் வேண்டும். அது உமது மகளிடம் இல்லை. உம்மைப் பார்க்க பாவமாக உள்ளது. என்றவராம். தவரத்தினம் பாவம். என்று நமசிவாயகம் சொன்னவர்.” என்றது குமரன் எலி.

“பாவம் பார்ப்பவர் அஞ்சலியை மருமகளாக ஏற்கலாம் தானே. தரகரின் பேச்சும் மாப்பிளையின் தந்தையின் பேச்சும் காசைமையப்படுத்தியுள்ளது. அவர்கள் செய்வார்கள்” என்றது லட்சுமி எலி.

**415. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**

**ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.**

“இவற்றைக் கேள்விப்பட்ட நமசிவாயகம் தவரத்தினத்திற்குச் சொன்னார்; “தவம், ஒழுக்கம் உடையார்களின் வாய்ச் சொற்கள் வழுக்கின்ற சேற்று நிலத்தில் நடப்போர்க்கு ஊன்றுகோல் போல உதவும். ஆனால் ஒழுக்கமில்லாதவர்களின் வாய்ச்சொற்கள் சுய நலம் மிகுந்ததாக இருக்கும். உன்னிடம் அதிக பணத்தை எதிர் பார்க்கிறார்கள். அதனால் அவதானமாக இரு என்று நமசிவாயகம் கூறிய போது தவரத்தினத்தின் கண்கள் கலங்கியதைக் கண்டேன்.” என்றது குமரன் எலி. “மனிதர்கள் பெண்ணைப் படுத்துற பாடு, பாவம் தவரத்தினம்.” என்றது லட்சுமி எலி.

**416.** எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்

ஆன்ற பெருமை தரும்.

“நமசிவாயகம், மாப்பிள்ளையின் தகப்பன் தனது மகனை வைத்துப் பேரம் பேசுகிறான். படிக்காவிட்டாலும் நாம் பேசும் நல்ல சொற்களை கேட்க வேண்டும். கேட்ட அளவிற்கு அவை நல்ல பயனைக் கொடுக்கும். அந்த நிலை உமது மகளுக்கு இல்லை என்று சொன்னான் என்று அழுத தவரத்தினத்திற்கு நமசிவாயகம் சொன்னார்; “அஞ்சலிக்குக் காது கேளாது என்று தெரிந்த பின்பு ஏன் இப்படிப் பேசுகிறார்கள். அதுவும் திரும்பத் திரும்ப வந்து. விருப்பமில்லா விட்டால் விட்டு விடுவதை விட்டு விட்டுத் தினமும் வந்து ஏன் சித்திரவதை செய்ய வேண்டும். தவம் மிகமிக அவதானமாக இரு. பணத்திற்கு ஆசைப்படுவோர் பாவங்களை அஞ்சாமல் செய்வார் என்றவர்” என்றது குமரன் எலி.

அவர்களுக்குப் பணத்தின் மீது ஆசை உள்ளது. சாட்டுக்களைச் சொல்லிப் பணத்தை அபகரிக்க நினைப்பார்களே தவிரப் பெண்ணைக் கவனிப்பார்கள் என்று எவ்வாறு நம்புவது.” என்றது லட்சுமி எலி.

**417. பிழைத்துஉணர்ந்தும் பேதைமை சொல்லார்**

**இழைத்துஉணர்ந்து**

**ஈண்டிய கேள்வி யவர்.**

தவரத்தினம் கல்யாணத் தரகருக்குச் சொன்னார்; “நமசிவாயகம் நல்லவர். ஊருக்கு நல்லவற்றைச் செய்பவர். நுட்பமான கேள்வி ஞானத்தை உடையவர்.சில சமயம் இரக்கம் காரணமாக தவறான முடிவை அவர் எடுத்தாலும் பேதைமையான எதையும் பேச மாட்டார். அவர் சொன்னார். காசுக்காசைப்படுவோர் பெண்ணை நல்ல முறையில் வாழ விடமாட்டார்கள். நீ கடவுள் மீது பாரத்தைப் போடு எல்லாம் நல்லபடி நடக்கும் என்றவர். எனவே தயவு செய்து திருமண விடயமாக என்னுடன் இனிக் கதையாதீர்கள் என்று சொன்னதைக் கேட்டேன்.”என்றது குமரன் எலி.

“பணத்தில் ஆசை உள்ளவர்கள் பணத்தை விரும்புவார்களே தவிர பெண்ணை வாழவைக்க மாட்டார்கள்.” என்றது லட்சுமி எலி.

**418. கேட்பினும் கேளாத் தகையவே வேள்வியால்**

**தோட்கப் படாத செவி**

தவரத்தினம் மாப்பிளையின் தகப்பனுக்குச் சொன்னார்; “ஐயா நீங்கள் அடிக்கடி வந்து என்னைத் துன்புறுத்துகிறீர்கள் இந்த நாட்டில் நடைபெற்ற கொடிய யுத்தத்தை அறியாதவர் போலவும் கதைக்கிறீர்கள். யுத்தத்தின் போது செல் அருகில் விழுந்தமையால் தான்

அஞ்சலியின் காதுகள் பாதிக்கப்பட்டன. பெரியவர்களின் அறிவுரைகளைக் கேட்காதவர்களின் காதுகள், கேட்கும் தன்மை உடையனவாக இருந்தாலும் கூட, அவை கேட்கும் சக்தி இல்லாத காதுகள் என்று சொல்லப்படுகிறது. எனது மகளுக்குக் காதே கேட்காது. அதன் பின் எப்படிப் பெரியவர்களின் அறிவுரைகளைக் கேட்பது. கற்ற நீங்கள் சிந்திக்கத் தெரியாதவராக இருக்கிறீர்கள் என்று கூறிய போது மாப்பிள்ளையின் தகப்பனின் முகம் கறுப்பானதைக் கண்டேன்'' என்றது குமரன் எலி.

''நாளைந்து முறை சொல்லியும் கேளாது திரும்பத் திரும்பத் வருபவரை அடித்து விரட்ட வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**419. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய**

**வாயின ராதல் அரிது**

''நல்லவர்கள் எப்போதும் நல்லவர்களாகத்தான் வாழ்வார்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளும் நுட்பமான அறிவுடையவர்கள் அல்லாதவர்கள் பணிவுடைய சொற்களைப் பேச மாட்டார்கள் என்பது உண்மை. இது தீயவர்களுக்குத் தான் பொருந்தும். அந்த வகையில் உங்களுக்கும் பொருந்தும் நல்லவர்கள் தீயவற்றைச் செய்ய மாட்டார்கள். அவர்களுக்குக் கேட்கும் சக்தி இல்லா விட்டாலும் வாசித்துத் தெரிந்து கொள்ளும் சக்தி உண்டு. உங்களைப் போன்றவர்களுக்குக் கேட்கும் சக்தி இருப்பதால் என்ன பயன்?'' என்று தவரத்தினம் கேட்ட போது மாப்பிளையின் முகம் மாறுபட்டது என்றது குமரன் எலி.

''எதைக் கேட்டாலும் சிலருக்கு ரோசம் வராது'' என்றது லட்சுமி எலி.

**420. செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்.**

''நமசிவாயகம், மாப்பிள்ளையின் தகப்பனுக்குச் சொன்னார்; ''ஐயா செவியால் கேள்விச் சுவையை உண்ணலாம். வாயால் உண்ணும் உணவின் சுவையை மட்டும் உணர்வோர் தீயவர்களிலும் தீயவர்கள் ஆவார். செவியால் கேட்டவற்றை மனதில் நிறுத்தி உண்மை நிலையை ஆராய்ந்து துன்பப்படும் உயிர்களது துன்பத்தைப்போக்காது திரும்பத் திரும்ப வந்து மனச்சாட்சியில்லாமல் பேசும் நீங்கள் சுவைக்காக உணவை உண்பவர்கள். இத்தகையோர் இருப்பதும், இறப்பதும் ஒன்றுதான்'' என்று கோபமாகச் சொன்னபோது மாப்பிளையின் தகப்பனுக்கும் கோபம் வந்தது'' என்றது குமரன் எலி.

''கோபம் வந்து என்ன பயன்? ரோசம்வரவேண்டும்'' என்றது லட்சுமி எலி.

## அதிகாரம் 43 அறிவு உடைமை

**421. அறிவு அற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்**
**உள்ளகழிக்கல் ஆகா அரண்.**

''காண்டீபன் சமீபகாலமாக வேலைக்குச் செல்வதில்லை. வீதிகளில் அலைந்து திரிவதும் கோவிலில் இருப்பதுமாக இருந்தான். அது காண்டீபனின் மனைவி கார்த்திகாவின் தந்தையான நாகலிங்கத்திற்குப் பெருங்கவலையைக் கொடுத்தது. அவள் கோவிலுக்கு வந்து நமசிவாயகத்திற்குச் சொன்னார்,

''ஐயா, உங்களின் அண்ணனின் மகன் என்பதற்காகத்தான் நான் எனது மகளைக் காண்டீபனுக்குத் திருமணம் செய்யச் சம்மதித்தேன். மகள் காதலித்து விட்டாள் என்பதும் ஒரு காரணம். அவன் பட்டதாரி. நல்ல குடும்பத்தில் பிறந்தவன். அறிவு அழிவுவராமல் காக்கும் கருவிமட்டுமல்ல வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய வழிவகைகளையும் காட்டும் உளக்கோட்டையாரும்.. ஆனால் பரந்த அறிவுள்ள காண்டீபனுக்கு இது ஏன் தெரியவில்லை.

ஏன் இவர் இவ்வாறு நடக்கிறார். காரணத்தைச் சொன்னால் தீர்த்து வைக்கலாம்'' என்று கவலைப்பட்டவர்'' என்றது குமரன் எலி.

''காலம் சரியில்லையென்று தாய் சொல்ல, கதிரேசன் படித்த படிப்புத் தான் சரியில்லை'' என்றவராம்'' என்றது லட்சுமி எலி.

422. **சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு**

''மனதை அது போனவழியில் போகவிடாமல் தீமைகளில் இருந்து விலக்கி நல்ல வழியில் வாழச் செய்வது தான் அறிவு என்று கற்றவர்கள் சொல்வார்கள். ஆனால் காண்டீபன் தன்னைக்கட்டுப்படுத்த முடியாமல் மனதின் போக்கிற்கேற்ப நடக்கிறார். சொன்னாலும் கேட்கிறார் இல்லை. காலம் சரியில்லை'' என்று நாகலிங்கம் சொல்ல நமசிவாயகம் சொன்னார், ''காலத்தைக் கணிப்பதும் காலத்தை அனுசரித்து தமது வாழ்வை மேம்படச் செய்வதும் அறிவு. காதலித்துத் திருமணம் செய்த பெண்ணைக் கண்கலங்காது வாழவைப்பதும் அறிவு. அவனை வைத்தியரிடம் கொண்டு செல்லவேண்டும்'' என்றவர். என்றது குமரன் எலி.

''அறிவுள்ளவரானாலும் மனம் குழம்பினால் அறிவின்படி நடக்கமாட்டார். வைத்தியரிடம் செல்வது தான் நல்லது'' என்றது லட்சுமி எலி.

**423. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.**

‘‘நாகலிங்கம் யோசித்துக்கொண்டிருந்தார். எதை ஒருவர் சொன்னாலும் அதை அப்படியே ஏற்காது அதன் உண்மைப் பொருளை அறிந்து கொள்வது தான் அறிவு. அதனால் வெட்கத்தைப் பாராது காண்டீபனை வைத்தியரிடம் அழைத்துச் சென்று ஆலோசனை கேட்டல் வேண்டும்.. சிலநேரங்களில் நமசிவாயகம் சொல்வதுபோல காண்டீபனுக்கு மனநோயாகவும் இருக்கலாம் என்று மனைவிக்குக் கூறிய நாகலிங்கம் கண்டீபனை வைத்தியரிடம் அழைத்துச் செல்வோம் என்றார்’’ என்றது குமரன் எலி.

வைத்தியரிடம் சென்றால் குணமாகாத வியாதிகள் இல்லை’’ என்றது லட்சுமி எலி.

**424. எண்பொருள ஆகச் செலச் சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்பது அறிவு.**

காண்டீபனை நமசிவாயகமும் நாகலிங்கமும் மனநோய் வைத்தியசாலை நிபுணரிடம் அழைத்துச் சென்றனர். வைத்தியர் காண்டீபனை சோதித்து விட்டு மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பேசினவராம். பிரச்சினையை அன்பாக சொன்னவராம். தாம் பிறருக்கு சொல்லும் போது, அது அவர்களுக்குப் புரியும் படியும் மனதில் படியும் படியும் சொல்ல வேண்டும். பிறரிடம் கேட்கும் போது அதில் உள்ள கருத்துக்களை ஆராய்ந்து அறிய வேண்டும் என்று பெரியவர்கள் சொல்வார்களாம். வைத்தியர் அன்பாகவும், தெளிவாகவும் புரியும் படியும் கூறினார் என்றும், கண்டீபனின் கதைகளைப் பொறுமையுடன் கேட்டவர். என்றும் அதன் பின் காண்டீபனின் போக்கில் மாறுபாடு தோன்ற ஆரம்பித்தது. என்றும் நாகலிங்கம் நமசிவாயகத்திற்குச் சொல்லும் போது கேட்டேன்’’ என்றது குமரன் எலி.

‘‘நாலைந்து முறை வைத்தியரிடம் சொன்றால் நோய் குணமாகி விடும்’’ என்றது லட்சுமி எலி.

**425. உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்**
**கூம்பலும் இல்லது அறிவு.**

கோவிலுக்கு வந்த நகுலனுக்கு நமசிவாயகம் சொன்னார்; ‘‘நீ ஒரு பணக்காரனின் மகன். இளமையில் படிக்காது இருந்து விட்டாய். இப்போ பண்டிதர் வீரகத்தியிடம் சென்று படிக்கிறாய். வயது சென்றாலும் கற்கலாம். உலகத்தில் உயர்ந்தவர்களை நட்பாக ஆக்கிக் கொள்வது அறிவு. அந்த அறிவு விரிவடைய வேண்டும். சுருங்கக் கூடாது. பண்டிதரைத் தெய்வமாக மதித்துப் படி. உனது நண்பனான காண்டீபன் குணமாகி விட்டான். சேரக் கூடாதவர்களோடு சேர்ந்தமையால் அவனது மனம் குழம்பியதை நமசிவாயகம் கண்டு கொண்டார். அதனால் அவன் சுகமடைந்து விட்டான். பண்டிதரிடம் அவனையும் கூட்டிச் செல். என்றவர்’’ என்றது குமரன் எலி

‘‘பட்டுத் தெளிந்தவன் கவனமாக இருப்பான்’’ என்றது லட்சுமி எலி.

**426. எவ்வது உறைவது உலகம் உலகத்தோட**
**அவ்வது உறைவது அறிவு.**

“மகனே, உலகத்தில் நல்லவர்கள் எப்படி வாழ்கிறார்களோ அவர்களைப் பின்பற்றி வாழ்பவன் தான் அறிவுடையவன். பண்டிதர் வீரகத்தி ஒழுக்கசீலர். நேர்மையானவர், கடமை உணர்வுள்ளவர், யாருக்கும் பாகுபாடுகாட்டாது கற்பிப்பவர். அவரிடம் தான் காண்டீபன் கல்வி கற்றான். கதிரேசனைப்போல வாழ வேண்டும் என்பான். ஆனால் திடீரென்று உருத்திரகுமாரனோடு சேர்ந்ததால் தீயவற்றைச் செய்யத்தொடங்கி விட்டான். உயர்ந்தவர்களோடு பழகுவோர் எக்காரணம் கொண்டும் தீயவர்களோடு பழகக்கூடாது” என்று நகுலனுக்கு நமசிவாயகம் கூறினார்” என்றது குமரன் எலி.

“எப்படித்தான் கவனமாக இருந்தாலும் விபத்து நடப்பது போலக் காண்டீபனின் வாழ்வும் மாறி விட்டது. இனிச்சரியாகும்” என்றது லட்சுமி எலி.

**427. அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
**அஃதுஅறி கல்லா தவர்.**

அறிவுள்ளவர்கள் பின்பு நடக்க இருக்கின்றவற்றை முன்பே அறிந்துக் கொள்ளக்கூடியவர்கள். அறிவில்லாதவர்கள் அறிய முடியாது அல்லற்படுவர். காண்டீபன் அறிவுள்ளவன். அவன் உருத்திரகுமாரனின் நண்பன். காண்டீபன் உருத்திரகுமாரனது வீட்டுக்குச் சென்றால் குளிர்பானத்தில் மதுவைக்கலந்து அவன் உருத்திரகுமாரன் கொடுப்பான். அதன் சுவை, அதனால் வரும் மயக்கம் என்பன காண்டீபனுக்குத் தேவைப்பட்டது. அதனால் தான் இவ்வளவும் நடந்தது. அதனால் நீ எக்காரணம் கொண்டும் தீயவர்களுடன் சேராதே” என்று நகுலனுக்கு நமசிவாயகம் சொன்னார்” என்றது குமரன்எலி.

“அவன் காண்டீபனைக் கெடுக்கவேண்டும் என்று திட்டமிட்டுத் தான் செய்தவன். உரிய நேரத்தில் நமசிவாயகம் கணடுபிடித்ததால் தப்பி விட்டான்” என்றது லட்சுமி எலி.

**428. அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது**
**அஞ்சல் அறிவார் தொழில்**

“மகனே, அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சவேண்டும். அஞ்சக் கூடாதவற்றிக்குக் அஞ்சக்கூடாது. அது தான் அறிவாளிகளின் தன்மை. காண்டீபன் மதுவைக் கண்டு அஞ்சுபவன். குளிர்பானத்துடன் சேர்த்துக்குடித்தால், அதன் சுவை அவனைக் கவர்ந்து விட்டது. பின் வைத்தியர் விபரமாக கூறியதன்பின் இப்போ அவன் யாருடனும் சேருவதில்லை. வேலைக்குச் செல்லும்போது தனக்குத் தேவையானவற்றைக் கொண்டு செல்கிறான். நீ அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சு. அஞ்சக் கூடாதவற்றிற்கு அஞ்சாதே. இதை ஏன் சொல்கிறேன் என்றால் நீநேற்று உருத்திரகுமாரனுக்கு அடித்துள்ளாய். தீயவர்கள் திருந்தமாட்டார்கள் அவர்களுடன் கதைக்கக் கூடாது . நீ நேற்றுச் சாதாரணமாகக் கதைக்க அது சண்டையாக மாறிவிட்டது. தீயவர்களுக்குப் புத்தி சொல்ல அஞ்சு. நல்லவர்களின் கோபத்திற்கு அஞ்சாதே” என்று நகுலனுக்குச் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“உருத்திர குமாரன் திட்டமிட்டுச் செயலாற்றுவதில் வல்லவன்” என்றது லட்சுமி எலி.

**429. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை**

**அதிர வருவதோர் நோய்.**

“பின்பு வரப்போவதை முன்னே அறிந்துகொள்ளக் கூடிய அறிவாளிகளுக்குப் பெரிதாக ஒரு துன்பமும் வராது. உருத்திர குமாரனைப் பற்றி இவ்வூரவர்கள் முழுப்பேருக்கும் தெரியும். பிச்சைக்காரர்கள் கூட அவன் கொடுக்க மாட்டான். என்று அவனது வீட்டுக்குச் செல்வதில்லை. கோவில் நிதிக்குக்கூட போவதில்லை. அவன் இலவசமாகக் கற்பிப்பதாகக் கூறியும் யாரும் செல்லவில்லை. ஒரு நாளைக்குக் கூலி வேலை செய்பவன் மறுநாள் செல்லமாட்டான். சென்றால் துன்பங்கள் வருமென்று தெரியும். இருந்தும் கண்டீபன் இதையறியாது சென்றதால் தான் துன்பப்பட்டான். தீயவர்களுடன் சேர்ந்தால் துன்பம் வரும் என்று நகுலனுக்கு நமசிவாயகம் கூறினார்.” என்றது குமரன் எலி.

“உருத்திக் குமரன் கோவிலில் திருவிழாச் செய்தால் சுவாமி தூக்கவே ஆளிராது” என்றது லட்சுமி எலி.

**430. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்**

**என்னுடைய ரேனும் இலர்.**

“அறிவுடையவர்களிடம் எதுவும் இல்லாது இருந்தாலும் தேவையானபோது எல்லாம் வந்து சேரும். அறிவில்லாதவர்கள் எல்லாம் உடையவராக இருந்தாலும் தேவைக்கு எதுவும் இராது என்பார்கள். நான் பரதேசியைப் போல் வாழ்கிறேன். சென்ற வாரம் வீசிய புயற்காற்றால் பாடசாலை மண்டபத்தின் மீது மரம் சாய்ந்து விட்டது. நான் அதை மக்களிடம் சென்று சொன்ன போது கிராமத்தவர்கள் அனைவரும் கத்தி கோடாரி மண்வெட்டியுடன்வந்து அதைச் சீராக்கினர். உருத்திர குமரானது வீட்டின் மீது மரம் சாய்ந்து விட்டது. இரண்டு வாரம் ஆகியும் அகற்றப்படாததால் நான் சென்று மக்களிடம் சொல்லி அகற்றுவித்தேன் என்று நகுலனுக்கு நமசிவாயகம் கூறினார்” என்றது குமரன் எலி.

“அதனால் நமசிவாயகத்தைப் பலர் ஏசினார்” என்றது லட்சுமி எலி.

44 குற்றம் கடிதல்

**431 செருக்கும் சினமம் சிறுமையும் இல்லார்**

**பெருக்கம் பெருமித நீர்த்து.**

“பண்டிதர் வீரகத்தியுடன் காண்டீபன் கோவிலுக்கு வந்தான். அப்போது அவர் சொன்னார்;

“கண்டீபா, உனது சித்தப்பா இருபத்தெட்டு வயதில் தனது மனைவியை இழந்தவர். மாமனார் தனது இளைய மகளைத் திருமணம் செய்யும்படி வற்புறுத்திய போது மறுத்தவர். கர்வம் என்ற திமிர் இல்லாதவர். எல்லோருடனும் அன்பாகப் பழகுபவர். கோபம் கொள்ளாதவர்.

அவரின் வளர்ப்பில் வளர்ந்த நீ சேரக் கூடாதவர்களுடன் சேர்ந்ததால் தான் துன்பப்பட்டாய். இனிக் கௌரவத்துடன் வாழ். உன்னால் நமசிவாயகத்திற்குப் பெருங்கவலை. இறக்கும் நேரத்தில் இப்படி ஒரு துன்பம். எனக் கவலைப்பட்டவர். மனிதர்கள் கர்வம், சினம், காமம் இல்லாமல் வாழுந்தால் தான் மேன்மையடையலாமென்றவர்.'' என்றது குமரன் எலி.

''நல்லமாதிரி வாழ்ந்தவனைத் திட்டமிட்டுக் கொடுத்து விட்டான்'' என்றது லட்சுமி எலி.

**432. இவறலும் மாண்புஇறந்த மானமும் மாணா**
**உவகையும் ஏதம் இறைக்கு**

''பொருள் கொடுத்து உதவாத தன்மையும், பெருமை இல்லாத தன்மானமும், தகுதி இல்லாத மகிழ்ச்சியும் நாட்டை ஆளுகின்றவர்களுக்கு ம்ட்டுமல்ல சாதாரண மக்களுக்கும் குற்றங்களாகும். உருத்திர குமரானிடம் தருமக் காரியங்களுக்குக் கூடப் பொருள் பெற முடியாது. குற்றங்களை அஞ்சாது செய்து கொண்டுதான் உயர்ந்தவன் என்று பெருமைப்படுவதும், தீய செயல்களைச் செய்து விட்டு அவைநல்ல செயல்கள் என்று மகிழ்வடைவதையும் வழக்கமாகக் கொண்ட உருத்திர குமாரனை நம்பி ஏமாந்து விட்டாய். இனிமேலாவது கவனமாக இரு என்று காண்டீபனுக்குப் பண்டிதர் கூறியவர்.'' என்றது குமரன் எலி.

''இதெல்லாம் காண்டீபனுக்கு தெரியாதா என்ன .? அப்படி இருந்தும் ஏன் அவனுடன் சேர்ந்தான்'' என்றது லட்சுமி எலி.

**433. தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பழிநாணு வார்.**

''காண்டீபா, சில தினங்களுக்கு முன்பு நமசிவாயகம் கோபப் பட்டு மார்க்கண்டுவுக்கு அடித்துவிட்டார். கண நேரக்கோபம் தன்னை மிருகமாக்கி விட்டது என்று கவலைப்படுகிறார். உத்தமரான கதிரேசனுக்கு மார்க்கண்டு செல்லத்துரையை ஏவி அடிப்பித்தான். வயோதிபரான அவரை அடித்தது மகா தவறு அதனால் கவலைப்படாதே என்று பலர் கூறியும் நமசிவாயகம் அமைதி கொள்ளாது தவிக்கிறார் பழிக்கு அஞ்சுகின்ற பெரியவர்கள் தினையளவு குற்றம் செய்தாலும் அதைப் பனையளவாக நினைத்து வருந்துவர். அத்துடன் இன்னொரு முறை அக்குற்றத்தைச் செய்யமாட்டார். அப்படியான நான் ஏன் தீயவனான மார்க்கண்டுவுக்கு அடித்தேன் என்று நமசிவாயகம் கவலைப்படுகிறார்'' என்றது குமரன் எலி.

''படித்தவர்கள் பலர் பொருளாசையால் பாமராகி விடுகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**434. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே**

**அற்றம் தரூஉம் பகை.**

''மகனே குற்றமே ஒருவனை அழிக்கும் பகையாகும். அதனால் குற்றங்களைச் செய்யாதிருக்க வேண்டும். குற்றங்கள் மன மயக்கத்தால் தான் செய்யப்படுகின்றன. மனதை மயக்குவது மதுவும் மாதுவும் நல்ல வேளை நீ மதுவுடன் நிறுத்திக் கொண்டாய். மது அருந்தினால் மனம் நல்லவற்றைச் சிந்திக்காது. நல்லவற்றைச் சிந்திக்க மது விடாது. உனது பரம்பரையில் இல்லாத பழக்கத்தை எப்படி ஏன் பழகினாய்...? தயவுசெய்து அப் பழக்கத்தை இனிமேல் விட்டுவிடு என்று பண்டிதர் கெஞ்சியவர்''என்றது குமரன் எலி.

''இப்ப ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து குடிக்கிரார்கள் பண்டிதர் பழைய ஆசிரியர். அர்ப்பணிப்புள்ளவர்.'' என்றது லட்சுமி எலி.

**435. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்.**

''எதுவும் வரும் என்று நினைத்து அவதானமாக வாழதவனின் வாழ்க்கை நெருப்பின் அருகே வைக்கப்பட்ட வைக்கோல் போன்றது. மக்கள் கற்பது தம்மை அழிவுகளில் இருந்து காப்பாற்ற. கல்வி அறிவைக் கொடுக்கும். அறிவு உலகைப் புரிய வைக்கும் உருத்திர குமாரன் கெட்டவன். அது தெரிந்தும் ஏன் அவனோடு தொடர்பு வைத்தாய். நீ கற்ற கல்வி அவனைத் தீயவனாக உணர்த்த வில்லையா... ஆராயாது செயல்களைச் செய்துவிட்டு அதற்குப் பல்வேறு காரணங்களைக் கூறி மனதைச் சமாதானப்படுத்துவது அறிவல்ல மடைமை. தீயின் அருகே வைத்த வைக்கோலைப் போல நீ எரிந்து அழிந்து இருப்பாய். நமசிவாயகத்தின் அறிவு உன்னைக் காப்பாற்றியது. என்று பண்டிதர் காண்டீபனுக்கு கூறியவர்.'' என்றது குமரன் எலி.

''படித்தவைக்குத் தான் இப்படிப் புத்திமதிகள் சொல்ல வேண்டி இருக்கு. படியாதவன் ஒழுக்கமாக வாழ்கிறான்.'' என்றது லட்சுமி எலி.

**436. தன்குற்றம் நீங்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்**
**என்குற்றம் ஆகும் இறைக்கு?**

''காண்டீபா ஒவ்வொரு வரும் பிறரின் மீது தான் குற்றம் கண்டு பிடிக்கிறார்கள் நீ தீயவனான உருத்திர குமாரன் மீது நட்புப் பூண்டது தான் தவறு. அவன் மதுவைக் கலந்து தந்த குளிர்பானத்தைக் குடித்தது தான் முதல் தவறு. கற்ற உனக்கு குளிர்பானத்தில் போதை இருக்கிறது என்பதை உணர முடியவில்லையா? ஒவ்வொரு வரும் தன்னில் குற்றத்தை வைத்துக் கொண்டு அதற்குக் காரணம் பிறர் என்கிறார்கள். இது சரியா. உன்னில் உள்ள குற்றத்தை நீக்கினால், நீ பிறரிடம் குற்றம் காண முடியாதென்பது உனக்குத் தெரியாதா? என்று கோபமாகக் கேட்டார் பண்டிதர்'' என்றது குமரன் எலி.

''கோபப்பட்டாலென்ன, மகிழ்வுடன் சொன்னால் என்ன அறிவுள்ளவனே பிழை விட்டால் என்ன செய்ய முடியும்'' என்று கேட்டது லட்சுமி எலி.

**437. செயற்பால செய்யாது இவறியான் செல்வம்**
**உயற்பாலது அன்றிக் கெடும்.**

நற்செயல்களைச் செய்ய முடியாதவனது கல்வி அறிவும் , செய்ய முடிந்த நன்மைகளை கூடச் செய்யாது சேர்த்து வைத்திருப்பவனது செல்வமும் அழிப்பாறின்றியே அழிந்து விடும். உருத்திரகுமாரன் பட்டதாரி ஆசிரியன். எந்தத் தான தர்மமும் செய்யாது செல்வத்தைப் பாதுகாத்து வைத்துள்ளான். அவனது அறிவால் என்ன பயன். அவனது செல்வத்தால் என்ன பயன். ஒரே ஒரு பொம்பிளைப் பிள்ளை. அதற்குத் திருமணம் செய்ய அவன் சேர்த்த பொருள் உதவவில்லையே. அதனால் உனது அறிவைப் பன்படுத்தி நல்லவற்றைச் செய்.நல்லவர்களோடு சேர்ந்து வாழ். என்று உருக்கமாகச் சொன்னவர்.'' என்றது குமரன் எலி.

பண்டிதரிடம் படித்தவர்கள் ஒழுக்கமில்லாது வாழ்ந்ததில்லை. காண்டீபன் பட்டதாரியின் மாணவன் என்று பெருமையாகக் கூற முடியுமா?'' என்றது லட்சுமி எலி.

**438. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்**
**எண்ணப் படுவதொன்று அன்று**

''மகனே, பொருட்கள் மீது அளவுக்கதிகமான பற்று வைத்து அதைக் கொடுக்காத உலோபித்தனம் எல்லாப் பாவங்களையும் செய்ய வைக்கும். மனித நேயத்தை அழிக்கும். நட்பை வேறறுக்கும். இப்படிப் பலவற்றைச் சொல்லாம். அப்படியானவர்களுடன் சேர்ந்தால் அவர்கள் உன்னையும் உலோபியாக்கி விடுவார்கள். நீ கால் முடமான நடராசாவின் கல்விச் செலவை ஏற்றனி.கடந்த மூன்று மாதங்களாக நீ அதை கொடுக்கவில்லை. நடராசா உன்னை வந்து கேளாமலே உதவி செய்தவன் நீ. இப்போது உனது நண்பன் தன்னைப் போல உன்னை மாற்ற நினைக்கிறான். அதற்கு இடங்கொடாதே என்று வீரகத்தி காண்டீபனுக்குச் சொன்னவர்.'' என்றது குமரன் எலி.

''தனக்குத் துணையாக ஆளைத் தேடுகிறான். என்று காண்டீபனுக்குத் தெரியவில்லை'' என்றது லட்சுமி எலி.

**439. வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க**
**நன்றி பயவா வினை.**

''ஒருவன் தன்னைப் பெரிதாக எண்ணக் கூடாது அத்துடன் தீய செயல்களை ஒரு போதும் விரும்பக் கூடாது. உருத்திர குமாரன் தற்பெருமை கொண்டவன். தீய செயல்களை அஞ்சாது செய்பவன். அவன் நடராசாவுக்கு இனிமேல் காண்டீபன் பணம் தர மாட்டான். தன்னை நம்பியே இவர் பிள்ளையைப் பெற்றவர். என்று கூறினானாம். நீ அப்படிச் சொல்லியிருக்கமாட்டாய். இருந்தும் நடராசா கவலைப்பட்டான். தானே வலியவந்து தந்து விட்டு நான் தன்னிடம் இரப்பதாகக் கூறுகிறார்'' என்று கவலைப்பட்டான். தீயவர்கள் தம்மை உயர்வாகக் காட்ட எதையும் செய்வார்கள்'' என்று பண்டிதர் சொல்லக் காண்டீபன் எதுவும் பேசாமல் நின்றான்''. என்றது குமரன் எலி.

‘‘தற்பெருமைக்காகச் செய்வோர் யோசிக்காமல் எதையும் கதைப்பார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**440. காதல காதல் அறியாமை உய்கிற்பின்**
**ஏதில ஏதிலார் நூல்**

‘‘தான் செய்யும் நல்ல காரியங்களை யாரும் அறியாதபடி வாழ்பவர்களிடம் பகைவர்களது சூழ்ச்சிகள் எவையும் பலியாது. நீ உதவி செய்பவர்களைப் பற்றி உருத்திர குமரனுக்குச் சொல்ல அவன் உன்னைப் பற்றித்தரக்குறைவாகப் பேசி வருகிறான். நடராசாவின் மூத்தமகள் போரின்போது கணவனை இழந்தவள். அவளில் உள்ள மோகத்தால் தான் நீ உதவுவதாகவும், இப்போ அவள் இன்னொருவனோடு தொடர்பு கொண்டமையால் தான் நீ பணத்தைக் கொடுக்காது விட்டதாகவும் உருத்திரகுமாரன் சொன்னதாக நடராசா கவலைப்பட்டான்’’ என்று பண்டிதர் கூறும்போது காண்டீபன் விக்கிவிக்கி அழுதான்’’ என்றது குமரன் எலி.

‘‘உருத்திரகுமாரன் அப்பொண்ணின் மீது ஆசைப்பட்டவன். அது நடக்காததால் அப் பெண்ணைப்பற்றிக் கேவலமாகக் கதைக்கிறான்’’ என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 45 பெரியாரைத் துணைக்கோடல்**

**441. அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை**
**திறன் அறிந்து தேர்ந்து கொளல்**

‘‘மகனே, அறம் உணர்ந்தவராய்த், தம்மை விட மூத்தவராய், அறிவுமிக்கவராய் உள்ளவரின் நட்பையே நாம் விரும்புதல் வேண்டும். இத்தகைய பண்புகளைடைய, திருநாவுக்கரசுநமசிவாயகம், தணிகாசலம், கதிரேசன் போன்றவர்களின் நட்பையே மக்கள் விரும்புகின்றனர். தீயவர்கள் தமது தீய எண்ணங்களை நிறைவேற்ற நல்லவர்களுடன் நட்பும் பூண முயல்வர். அதை அறிந்து நல்லவர்கள் அவர்களை விலக்கி வைப்பர். அப்படி நீ விலக்கி வைக்காமையால் தான் உனக்குப் பெண்பழி சூழ்ந்தது. அப்பெண்ணுக்கும் கெட்ட பெயர் உண்டானது’’ என்று பண்டிதர் காண்டீபனுக்குக் கூறினார்’’ என்றது குமரன் எலி.

‘‘தன்னுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்யவிட்டால் பழி சுமத்துவது மனிதரின் இயல்பு’’ என்றது லட்சுமி எலி.

**442. உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**
**பெற்றியார்ப் பேணிக் கொளல்.**

‘‘நீபடித்தவன். பண்பான பரம்பரையில் பிறந்தவன். அப்படியானவன் வந்துள்ள துன்பத்தைப்போக்கி இனித் துன்பம் வராதவாறு முன்னதாகவே தெரிந்து காக்கின்ற பெரியார்களைவிட்டு விட்டு திட்டமிட்டுச் செயலாற்றி மனிதரைக் கெடுக்கும் உருத்திரகுமாரனை

நண்பனாகத் தெரிவு செய்த பின்பு தானே உனக்குப் பல துன்பங்கள் வந்தன. உனது கல்வி இதைக்கூட அறிய முடியாது செய்து விட்டதா? ஒரு பண்புள்ளவரின் வளர்ப்பு ஏன் பிழைத்தது? உனது ஆராயாத தன்மையால் தான் இவை ஏற்பட்டன. இனியாவது நல்லவர்களின் நட்பை நாடு'' என்று பண்டிதர் காண்டீபனுக்குச் சொன்னார்'' என்றது குமரன் எலி.

''பன்றியோடு கூடினால் பசுவும் மலம் உண்ணுமாம். அது தான் நடந்தது'' என்றது லட்சுமி எலி.

**443. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்**

''நல்லவர்களைச் சேர்ந்திருப்பவர்கள் என்றும் இன்பமாக இருப்பார்கள். அது தான் ஒருவனுக்குச் சிறப்பைத்தரும். நீ கவனித்துப்பார் நல்லவர்களும் அவர்களோடு சேர்ந்திருப்பவர்களும் எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். உருத்திர குமாரன் போன்ற தீயவர்கள் என்றும் பிரச்சினைகளுடன் வாழ்கின்றனர். இது தெரியாதவனா நீ? நல்லவர்களோடு சேர்ந்திருப்பவர்களுக்குத் துன்பம் வந்தால் அதை அவர்ககள் நீக்கி விடுவார்கள். தீயவர்கள் சிறிய பிரச்சினைகளையும் பெருப்பித்து விடுவார்கள். அது நடராசாவின் பிரச்சினையில் இருந்து உனக்குப் புரிந்திருக்கும்'' என்றார் பண்டிதர் வீரகத்தி'' என்றது குமரன் எலி.

''தீயவனோடு சேர்ந்தவன் திருத்துவது கடினம். பண்டிதர் புத்தி சொல்ல உருத்திரகுமாரன் மதுவைக் கொடுத்தால் எப்படி இருக்கும்'' என்று கேட்டது. லட்சுமி எலி.

**444. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையுள் எல்லாம் தலை.**

''நேற்று நகுலன் சந்தைக்குச் சென்று பொருட்களை வாங்கிக்கொண்டு சென்றான். ஒருபோதும் வீட்டுவேலைகளைச் செய்யாத எனது மகன் தம்மை விட அறிவில் ஆற்றலில் மேம்பட்டவர்களைத் தமதாக்கி அவர்களைப் பின்பற்றி வாழவேண்டும் என்பதற்காக பண்டிதர் வீரகத்திக்கு கொண்டு சென்றான். இது எனக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது. கற்கும் காலத்தில் நண்பர்களுடன் விளையாடியவன் இப்போ பொறுப்புள்ளவனாக மாறியது. எனக்கு நிம்மதியைத் தருகிறது. அவன் இப்போ படிக்கிறான். என்று தவரத்தினம் சொன்னார். நீபடிக்கும் போது விளையாடியவன் இப்போ நீ தீயவர்களுடன் சேர்ந்திருக்கும் போது பெரியவர்களை நாடிச்செல்கிறான். இதைப்பற்றிச் சிந்திந்துப்பார்'' என்று திருநாவுக்கரசு காண்டீபனுக்குச் சொன்னவர்'' என்றது குமரன்எலி.

''காலமும் நேரமும் கூடிவந்தால் இப்படிப் பலவும் நடக்கும்'' என்றது லட்சுமி எலி.

**445. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்**
**சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்**

“அரசனாக இருந்தலென்ன ஆண்டியாக இருந்தாலென்ன நல்ல முறையில் வாழும் வகைகளைச் சொல்வோர் ஒளி தரும் கண்களைப்போன்றாவர். அத்தகையவர்களைத் தனக்குச் சுற்றமாக்கிக் கொள்வோர் வாழ்வில் எந்தக் குறைகளையும் காணமாட்டார். அதனால் பண்டிதர் ஐயாவின் வேலைகளைச் செய்து கொடுக்கிறேன். அவர் வயதானவர். பிள்ளைகள் வெளி நாட்டில் வாழ்கின்றனர். அவரைச் சுற்றமாக்கிக்கொண்டபின் என்னை எல்லோரும் மதிக்கிறார்கள். என்னை மேடையிற் பேசுமாறு அழைக்கின்றனர். பண்டிதர் நான் அதற்குத் தகுதியானவன் என்று சொன்னதும்” பேசுவேன்” என்று நகுலன் திருநாவுக்கரசுவுக்குச் சொன்னதாகத் திருநாவுக்கரசு நமசிவாயகத்திற்குச் சொன்னார்” என்றது குமரன் எலி.

“முயற்சித்தால் எதையும் செய்யலாம் என்று இப்போ தான் நகுலன் உணர்ந்திருக்கிறான்” என்றது லட்சுமி எலி.

**446. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்.**

“என்னையும் பண்டிதரையும் பிரிக்கப்பார்க்கிறார்கள்நான் பண்டிதருடன் சேர்ந்தபின்பு கற்கிறேன். மது அருந்துவதை விட்டுவிட்டேன். அப்பாவுக்கு உதவியாக வியாபாரம் செய்கிறேன். சிரமதானங்கள் செய்கிறேன். அத்துடன் தீய நண்பர்களை விலக்கி விட்டேன். அவர்கள் என்னைப்பற்றித் தவறாகப் பண்டிதருக்குக் கூறியபோதும் அவர் நம்பவில்லை. நல்லவர்களுடன் சேர்ந்து அவரின் சொற்படி நடப்பவர்களைப் பகைவர்களால் எதுவும் செய்ய முடியாது. எனது நடைமுறைகளைப் பண்டிதர் ஏற்றுவிட்டார்.” என்று சொல்லத் தயங்கிய நகுலன் எதையோ பின் திருநாவுக்கரசுவிற்குச் சொன்னான், “இப்போ காண்டீபன் என்னைப்பற்றித் தவறாகக் கதைக்கிறான். ஆனால் அதைப்பண்டிதர் நம்பவில்லை” என்று கூறியதைக் கேட்டேன்” என்றது குமரன் எலி.

“தன்னோடு குடித்துக்கொண்டு திரிந்தவன் இப்போ திருந்திப் பெரியவர்களின் பாராட்டைப் பெற்றால் அது பிடியாது தானே” என்றது லட்சுமி எலி.

**447. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்**

“அரசனாக இருந்தாலும் அவன்தவறு செய்யும் போது அவனைக் கண்டித்துத்திருந்தும் பெரியோர் இருப்பார்களேயானால் அரசனும் தவறு செய்யமாட்டான் என்பார்கள். நான் சில தினங்களுக்கு முன்பு காண்டீபனுடன் கதைத்தேன். அவனின் வற்புறுதலுக்காக மதுவும் குடித்தேன். அதைப் பண்டிதர் அறிந்து விட்டார். நான் அவரின் வீட்டுக்குச் சென்றபோது மிகவும் கோபத்துடன் சொன்னார், “குடிகாரர்கள் எனது வீட்டுக்குவரக்கூடாது. வெளியேபோ” என்றார். நான் இனிமேல் குடிக்க மாட்டேன் என்று பலமுறை சத்தியம் பண்ணிய பின்புதான் அவரது கோபம் தணிந்தது. இன்னொரு முறை இவ்வாறு நடந்தால் உன்னை நான்

அடித்துக்கலைப்பேன் என்றவர்'' என்று நகுலன் திருநாவுக்கரசுவிற்குச் சொன்னான் என்றது குமரன் எலி.

''கலியாணம் கட்டிப்பிள்ளைகளைப் பெற்ற பின்பும் தவறு செய்தால் கண்டிக்கும் ஆசிரியர்கள் முன்பு இருந்தவையாம். அதனால் தான் அப்போதய சமூகம் ஒழுக்கமுள்ளதாக இருந்தது'' என்றது லட்சுமி எலி.

**448. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பார் இலானும் கெடும்.**

''மகனே, கண்டித்து அறிவுரைகூறக்கூடிய பெரியவர்கள் இல்லாத அரசனைக் கூட கெடுக்கப் பகைவர்கள் இல்லாவிட்டாலும் தானே கெடுவான் என்பார்கள். நீ சாதாரணமனிதன் பண்டிதர் வீரகத்தி உன்னைப்பற்றிக் கண்டித்துச் சொன்னார். நீ திருந்திவிட்டாய் என்று மகிழ்ந்திருந்தேன். இப்போ பழையபடி நீ வாழமுற்பட்டதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வீரகத்திமிகவும் கண்டிப்பானவர். தன்னுடன் சேர்ப்பவர்கள் ஒழுக்கமில்லாதவர்களாக இருந்தால் விலக்கி விடுவார். தயவு செய்து அவரிடம் சென்று மன்னிப்புக்கேள்'' என்று நகுலனை அழைத்துக் கொண்டு பண்டிதரின் வீட்டுக்குத் தவரத்தினம் சென்றதாகத் திருநாவுக்கரசு நமசிவாயகத்திற்குச் சொன்னார்'' என்றது குமரன் எலி.

''நகுலன் தறுதலையைாகத்திரிந்தவன் பின் மனம்மாறி நல்லபடி வாழ்ந்தவன் அதனால் நகுலன் திருந்தவேண்டும் என்பதற்காகத் தவரத்தினம் எதையும் செய்வார்'' என்றது லட்சுமி எலி.

**449. முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்**
**சார்புஇலார்க்கு இல்லை நிலை.**

''கோவிலடிக்குவந்த நகுலன் திருநாவுக்கரசுவிற்குச் சொன்னான், ''ஐயா, எனது தந்தையார் சொன்னார், ''மகனே, மூலதனம் இல்லாத வியாபாரிக்கு வருவாயில்லை. தன்னைத் தக்கதருணத்தில் தாங்கிக் காப்பாற்றத்துணை இல்லாத அரசனுக்கு ஆட்சி நிலையாது. உன்னிடம் மூலதனம் உண்டு. உன்னைத் தாங்கிக் காப்பாற்ற பண்டிதரும் நானும் ஊர்ப் பெரியவர்களும் இருக்கிறோம். இனிமேல் நல்லபடி வாழ்'' என்றவர் என்று கூறினான் என்றது குமரன் எலி.

''எல்லோரும் உண்மை நிலையை உணர்ந்தால் நல்லபடி வாழலாம்'' என்றது லட்சுமி எலி.

**450. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே**
**நல்லார் தொடர்கை விடல்.**

''நல்லது மகனே, அறிவிற் சிறந்த பெரியவர்களின் தொடங்கிய விட்டுவிடுவது, பலரது பகையைத் தேடிக்கொள்வதை விடப் பத்து மடங்கு தீங்கானது. நீ நல்ல படி திருந்திவிட்டாய். காண்டீபன் திருந்தவில்லையென்று நமசிவாயகம் துக்கப்படுகிறார். அவனையும் திருத்தவேண்டும்'' என்று திருநாவுக்கரசு கூறினார்'' என்றது குமரன் எலி.

''திருத்தவேண்டும் என்று நினைத்தால் போதாது. செயலிலும் காட்ட வேண்டும். காண்டீபன் மதுவைச் சுவைத்து மகிழ்ந்து விட்டான். இதைத் திருத்துவது கஷ்ட்டம்'' என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 46 சிற்றினம் சேராமை**

**451. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்**
**சுற்றமாச் சூழ்ந்து விடும்.**

''காலையில் கோவிலுக்கு வந்த திருநாவுக்கரசும் நமசிவாயகமும் சுவாமியைத் தரிசித்து விட்டு வெளியே நின்ற கஜேந்திரனைக் கண்டனர். திருநாவுக்கரசு கேட்டார், '' இராசையாவின் மனைவி இறந்து மூன்று நாளாகிறது. பிள்ளைகள் ஐந்தும் வெளிநாட்டால் வந்து விட்டார்களா, ''ஓம் ஐயா, பதினொரு மணிக்குப் பிரேதத்தை எடுக்கிறார்கள். மேளதாளம் வெடிகள் ஒழுங்குபடுத்தியிருக்கு. சாராயப் போத்தல்கள் வாகனத்தில் வந்து இறக்கப்பட்டுள்ளன. பத்துமணிக்குப் பிறகு இராசையாவும் நண்பர்களும் தலைகீழாக நிற்பார்கள். ஒருவருடத்திற்கு முன்னம் ஒருவருடத்திற்கு முன்னம் இராசையாவின் தாயார் இறந்த போது வெளிநாட்டிலிருந்து வந்த இராசையாவின் மச்சான் சாராயம் வாங்கிக் கொடுக்க துரை வெடி கொழுத்தினது. அது மணியத்தின் காலில் விழ பெரிய சண்டையாகிவிட்டது. பாடையை இறக்கி வைத்து விட்டு அடிபட்டனர்.சனம் எல்லாம் பயத்திலை ஓடிற்றுது. வாகனத்தில் பிரதேத்தைக் கொண்டு சென்றமையால் பிரேதம் பத்திரமாகச் சுடலையை அடைந்தது. நானே போகவில்லை'' என்றான். அதைக்கேட்ட திருநாவுக்கரசு ''நமசிவாயகம் வா இப்பவே போயிட்டுவருவம்'' என்று கூறினார் என்றது குமரன் எலி.

''தீயவர்களிடம் பணம் சேர்த்தால் தீயவர்களுக்குக் கொண்டாட்டம். நல்லவர்கள் ஒதுங்கி விடுவார்கள்'' என்றது லட்சுமி எலி.

**452. நிலத்து இயல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு**
**இனத்தியல்பது ஆகும் அறிவு.**

''திருநாவுக்கரசு, மழை பெய்யும் போது நீரானது நிலத்தின் தன்மைக்கேற்ப மாறுபாடு அடையும். அது போல் மக்கள் சேரும் மனிதருக்கேற்ப மாறுபடுவர். நல்லவர்களோடு சேர்ந்தவர்கள் நல்லவர்களாக மாறி நல்லபடி வாழ்வார்கள். தீயவர்களுடன் சேர்ந்தவர்கள் தீயவர்களாக மாறிவிடுவர். இப்போ கஜேந்திரன் மாறிவிட்டான். ஆனால் காண்டீபன்

உருத்திரகுமாரனோடு சேர்ந்து நேற்றுச் செத்தவீட்டில் குடித்து விட்டுக் கலகம் செய்தவனாம்''. கவலையுடன் சொன்னார் நமசிவாயகம்.'' என்றது குமரன் எலி.

''என்ன செய்வது நமசிவாயகம் மதிப்போடு வாழ்ந்தவர்'' என்றது லட்சுமி எலி.

**453. மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தான்ஆம்**
**இன்னான் எனப்படும் சொல்.**

''திருநா, மக்களுக்கு இயல்பாக உள்ள அறிவு அவர்களது மனத்தால் உண்டாகும். அதுபோல மதிக்கும் அறிவு அவன்சேரும் இனத்தால் உண்டாகும் என்பார்கள். காண்டீபன் என்னோடு இருக்கும்போது எனது கண்டிப்புக் காரணமாகவும் என்னோடு சேர்ந்திருந்தாலும் ஒழுக்கமாக வாழ்ந்தான். பின் உருத்திர குமாரனுடன் சேர்ந்த பின் அவனது குணங்கள் இவனைப்பற்றிப் பிடித்து விட்டன. இனி அவன் தனது இயல்பை உணர்ந்து நல்லவர்களோடு உறவாடினால் தான் நல்லவனாக மாறுவான்'' என்றார் நமசிவாயகம் என்றது குமரன் எலி.

''குழந்தைகள் தான் பார்த்ததை செய்யுமென்பார்கள். பிள்களைப் பெற்ற காண்டீபனுமா அவற்றைச் செய்கிறான்.'' என்றது லட்சுமி எலி.

**454. மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு**
**இனத்துஉள தாகும் அறிவு.**

''திருநா, ஒருவனது சிறப்பறிவு அவனது சொந்த அறிவு போலத் தோன்றும். ஆனால் ஆராய்ந்து பார்த்தால் அவ்வறிவு அவன் சேர்ந்த இனத்தின் அறிவாகும். இப்போ பண்டிதர் வீரகத்தியுடன் சேர்ந்த நகுலன் நன்றாகப் பிரசங்கம் செய்கிறான். தமிழ் நூல்களையும், சமய நூல்களையும் ஆராய்ந்து நூல்களை வெளியிடுகிறான். நகுலன் நல்ல அறிவாளி என்று பலரும் புகழ்ந்திருக்கிறார்கள். அந்த அறிவு பண்டிதரின் அறிவு. அவர் கூறுவதைக் கிரகித்துத் தனது கருத்தையும் சேத்ர்து செல்கிறான். அதற்கும் அறிவு வேண்டும். என்று நமசிவாயகம் கூறியவர்.'' என்றது குமரன் எலி.

''இருக்குமிடத்தில் இருந்தால் எல்லாம் கிடைக்கும்.''என்றது லட்சுமி எலி.

**455. மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்**
**இனம்தூய்மை தூவா வரும்.**

''மனத் தூய்மையானது ஒருவனது செயலின் தூய்மையையும், அவன் சேர்ந்த இனத்தின் தன்மையும் பொறுத்தே அமையும். திருநா நகுலனைப் பார். பண்டிதருடன் சேர்ந்த பின் பண்டிதராகவே மாறிவிட்டான். உருத்திர குமாரனுடன் சேர்ந்த காண்டீபன் உருத்திர குமாரன் ஆகிவிட்டான். பன்றியோடு சேர்ந்தால் பசுவும் பன்றியாகும். யானையோடு சேர்ந்தால் நரியும் யானையாகும். இது உலகத்தின் இயல்பு. அதனால் பிள்ளைகளை நல்லவர்களுடன் மட்டும் சேர விடவேண்டும். என்றார் நமசிவாயகம்''

''அப்படியானால் மனிதர்களுக்கு ஏன் ஆறாம் அறிவு? ஏன்கல்வி கற்கின்றார்கள்?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**456. மனம்தூயார்க்கு எச்சம்நன்று ஆகும் இனம்தூயார்க்கு**
**இல்லைநன்று ஆகா வினை.**

“திருநா, மனத்தூய்மை உடையவர்களுக்கு புகழ், கௌரவம் முதலியன என்றும் நல்லவையாய் அமையும். நல்லவர்களோடு தொடர்பு கொண்டவர்களுக்கு வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்கள் அனைத்தும் நல்லவையாய் அமையும் என்று காண்டீபனுக்குப் பலமுறை கூறி நல்லவர்களாக வாழ்வோரின் வாழ்க்கைமுறைகள் பற்றியும், அவர்களை மக்கள் மதிக்கும் முறை பற்றியும் கூறியும் அவன் கேட்கவில்லை என்று நமசிவாயகம் கவலையோடு திருநாவுக்கரசுக்கு கூறினார்’’ என்றது குமரன் எலி.

“சாகிறவன் மருந்து குடியான். கெடுகுடி சொற்கேளாது’’ என்று முன்பே பெரியவர்கள் கூறிவிட்டனர்’’ என்றது லட்சுமி எலி.

**457. மனநலம் மன்உயிர்க்கு ஆக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்.**

“சிலர் நல்லமனிதர்களாக வாழ்வதால் தான் உலகில் பலர் மகிழ்வுடன் வாழ்கின்றனர். ஒருவன் நல்லவர்களோடு சேர்ந்து வாழ்ந்தால் அவன் செய்யும் தொழில் சிறக்கும் , பிள்ளைகள் சிறப்பாக வாழ்வார்கள். புகழும் கிடைக்கும். கதிரேசன் மிக மிக நல்லவர். மிக்க மகிழ்வுடன் வாழ்கிறார். பிறருக்கு உதவி செய்கிறார். அவரது பிள்ளைகள் தொழிலில் இருப்பதோடு புகழ்பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். அதனால் நீயும் நல்லவர்களுடன் சேர்ந்து வாழ் என்று கூறியும் காண்டீபன் கேட்கிறான் இல்லை’’. என்று கவலைப்பட்டவர் நமசிவாயகம் என்றது குமரன் எலி.

“மனம் நல்லவற்றைச் செய்யாது. தீயவற்றை செய்து பழக்கப்பட்டால் எதைச் சொன்னாலும் மாறாது’’ என்றது லட்சுமி எலி.

**458. மனநலம் நன்குஉடையர் ஆயினும் சான்றோர்க்கு**
**இனநலம் ஏமாப்பு உடைத்து.**

“நமசிவாயகம், நீங்கள் இயல்பாகவே நல்லமனம் படைத்தவர். அதனால் தான் உங்களது நிலங்களை விற்று மக்களுக்கு உதவி செய்து வருகிறீர்கள். அத்துடன் பெருமையில்லாது வாழ்கிறீர்கள். நல்லவர்களை உறவாக்கி உள்ளீர்கள். அப்படிப்பட்ட நீங்கள் வருந்துவது முறையில்லை. விதிவசத்தால் காண்டீபன் அறிவு கெட்டு அலைகிறான். அவன் ஒரு நாள் திருந்துவான். சகலதும் அறிந்த உங்களுக்கு நாம் எதுவும் சொல்லத்தேவையில்லை என்று கூறும் போது நமசிவாயகம் குறுக்கிட்டு சொன்னார்; எனக்கு சான்றோரின் உறவு தான்

காவலாக இருந்து காப்பாற்றுகிறது. உங்களைப் போன்றவர்களின் துணையில்லாவிட்டால் எனது வாழ்வு அழிந்துவிடும் என்று கூறினார்'' என்றது குமரன் எலி.

''துன்பப்படும்போது ஆன்றோரின் வாய்ச்சொற்கள் துன்பத்தை போக்கும்'' என்றது லட்சுமி எலி.

**459. மனநலத்தின் ஆகும் மறுமைமற்று அ்.்தும்**
**இனநலத்தின் ஏமாப்பு உடைத்து.**

''திருநா, மனமகிழ்வுடன் வாழ்வோர் மறபிறவிகளிலும் மனமகிழ்வுடன் வாழ்வர். அவர்கள் அங்கும் மற்றவர்களை மகிழ்வித்து மகிழ்வுடன் வாழ்வர் என்று நூல்கள் கூறுகின்றன. அதனால் எனக்கு வரும் துன்பங்களை அது முன் வினை என்று கருதி மகிழ்வுடன் வாழப்பழகிவிட்டேன். இருந்தும் காண்டீபன் நான் வளர்த்தபையன் என்று கூறும்போது திருநாவுக்கரசு சொன்னார் ; ''இவ்வூர்ப்பிள்ளைகள் அனைத்தையும் உங்கள் பிள்ளைககளாகவே கருதி வளர்த்தீர்கள். பலர் இயல்புகாரணமாகவும், பழக்கதோஷம்காரணமாகவும் நெறிதவறி வாழ்கின்றனர். அதற்காக கவலைப்பட்டீர்களா? என்று கேட்டார் திருநாவுக்கரசு'' என்றது குமரன் எலி.

''அதுதானே நமசிவாயகத்திடம் கடமைப்படாதவர் யார்?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**460. நல்லினத்தின் ஊங்கும் துணைஇல்லை தீயினத்தின்**
**அல்லற் படுப்பதூஉம் இல்.**

''உண்மைதான். கஜேந்திரன், உருத்திரகுமரன் கூட எனது கட்டுப்பாட்டுடன் தான் வளர்ந்தவரகள் தான். எல்லாம் அவரவர் இயல்பு. எல்லோரும் நல்லவர்களாக வாழமுடியாது. அதுபோல எல்லோரும் கெட்டவர்களும் அல்ல. நல்லவர்களோடு சேர்ந்தவர்கள் நல்லவாழ்வு பெறுவர். தீயவர்களோடு சேர்ந்தவர்கள் கெட்டழிந்து போவார். இது உலக நடப்பு. இதை மாற்ற முடியாது. அதற்காக கவலைப்பட்டு நாம் நோயாளியாவது தான் மிச்சம். என்று நமசிவாயகம் கூறினார்'' என்றது குமரன் எலி.

''என்ன செய்வது? எதோ ஒருவழியில் மனதிற்கு சமாதானம் கூறினால் தான் மகிழ்வாக இருக்க முடியும்'' என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 47 தெரிந்து செயல்வகை**

**461.** அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்

‘‘காலையில் பண்டிதர் வீரகத்தி கதிரேசனையும் திருநாவுக்கரசையும் நமசிவாயகத்தையும் கோவிலடியில் சந்தித்து சொன்னார்; ‘‘மிகவும் வெட்கக்கேடான நிலை. க.பொ.உ/த வகுப்பிற்குத் தமிழ் பாடம் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லையாம். தமிழ்ப் பட்டதாரிகள் தமிழைச் சரியாகக் கற்பிக்கிறார்கள் இல்லையாம். அதனால் தமிழ்ப் பாடத்தை எமது பாடசாலையில் யாரும் படிக்க முன்வரவில்லையாம். அதனால் ஆசிரியர்களுக்குப் பண்டிதர் வகுப்பை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன். என்று கூறத் திருநாவுக்கரசு சொன்னார்; ‘‘உங்களிடம் திறமை இருக்கிறது. ஒரு செயலைத் தொடங்கு முன் அதனால் வரும் அழிவையும், அதன் பின் வரும் ஆக்கத்தையும், செய்து முடித்த பின்வரும் பயன்களையும் எண்ணிப் பார்த்த பின்பே செய்தல் வேண்டும்’’ என்று பெரியவர்கள் சொல்வார்கள்’’ என்றார். அதற்கு நமசிவாயகம் சொன்னார்; ‘‘பண்டிதர் சகல திறமைகளும் உடையவர். அவரால் ஆகாத விடயம் எதுவும் இல்லை. தமிழைப் படிப்பதற்கு ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் தமிழைப் படிக்கத் தயங்குகின்றனர். அதனால் பண்டிதரின் யோசனை சரியானது’’ என்றது குமரன் எலி.

‘‘இதென்ன புதுக்கதை. பல்கலைக்கழகத்தில் எதைப் படிப்பிக்கினை? எதைப் படிக்கினை?’’ என்று கேட்டது லட்சுமி எலி.

**462. தெரிந்த இனத்தொடு தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு**
**அரும்பொருள் யாதொன்றும் இல்.**

‘‘ஒரு செயலைத் திறமையாகச் செய்யத் தெரிந்தவர்களுடன் நன்கு ஆலோசித்து நாமும் நன்கு சிந்தித்துச் செயற்பட்டால் செய்ய முடியாத செயல்கள் எவையும் இல்லை. செயல் வீரர்களான உங்களோடு ஆலோசித்துள்ளேன். அதனால் பணம் பொருளுக்குக் கஷ்டமில்லை. என்னுடன் பண்டிதர் வகுப்பில் கற்ற ஐவரைத் துணையாக்கி விட்டேன். இனி வகுப்பைத் தொடக்க வேண்டியது தான். ஆனால் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களும் க.பொ.த உயர்தரம் படித்த மாணவர்களையும் வகுப்பிற்கு வரச்செய்தல்வேண்டும். ஆசிரியர்கள் வராவிட்டால் மாணவர்களுக்குக் கற்பிப்போம்’’. என்று பண்டிதர் சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

‘‘மாணவர்களைக் கொண்டு உயர்தர வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்தால் வாத்திமார் திருந்துவினையே..? வேடிக்கை பார்ப்பினை’’ என்றது லட்சுமி எலி.

**463. ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை**
**ஊக்கார் அறிவுடை யார்.**

‘‘வரவிருக்கும் நன்மையைக் கருதி நீங்கள் செயற்படுவதைக் கல்வியாளர்கள் விரும்பாவிட்டால் என்ன செய்வீர்கள்?’’ என்று திருநாவுக்கரசு கேட்கப் பண்டிதர் சொன்னார்; ‘‘எமது காலத்தில் பரீட்சைப்பெறுபேற்றைப் பார்த்துத்தான் சம்பள உயர்வு வழங்கப்படும். இப்ப சம்பள உயர்வும், மாணவர்களது வகுப்பேற்றமும் தங்குதடையின்றி நடைபெறுகிறது. அது பிழை. வரவிருக்கும்

நன்மையைக் கருத்திற்கொண்டு தற்போதய நிலையைக் குழப்பும் செயலைச் செய்யக்கூடாது. படிப்படியாகச் செய்ய வேண்டும்'' என்று பண்டிதர் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''முன்னைய முகாமைத்துவம் போல இயங்கும் சில பாடசாலைகள் முன்பு போல இயங்குகின்றன. சம்பள ஏற்றத்தைப் பெறுபேறுகளின் அடிப்படையில் வழங்குவது தான் நல்லது'' என்றது லட்சுமி எலி.

**464. தெளிவு இலதனைத் தொடங்கார் இளிவுஎன்னும்**
**ஏதப்பாடு அஞ்சு பவர்.**

''தமக்கு இழிவேற்படக்கூடாது என்று விரும்புவார்கள் தாம் தெளிவாக அறிந்து கொள்ளாத எந்தச் செயலையும் செய்யமாட்டார்கள். உங்கள் செயலால் பாடத்தில் குழப்பமேற்படாதா..?'' என்று கேட்டார் திருநாவுக்கரசு; ''இனிக் குழப்பமேற்பட வாய்ப்பில்லை. ஏனென்றால் இப்போது மேல்வகுப்பு மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாது தனியார் கல்வி நிலையங்களுக்கே செல்கின்றனர். அந்தளவில் மாணவருக்கும், பெற்றோருக்கும் பாடசாலையில் நம்பிக்கையில்லை. அரச பாடசாலைகளில் தான் அரசு நடத்தும் பரீட்சையை எடுக்கலாம். ஆனால் எங்கையும் படிக்கலாம்'' என்று பண்டிதர் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''அப்பேன் பாடசாலை…? அரச பரீட்சைகளையும் ரியூற்றறியில் வைக்கவேண்டியது தானே''. என்றது லட்சுமி எலி.

**465. வகைஅறச் சூழாது எழுதல் பகைவரைப்**
**பாத்திப் படுப்பதோர் ஆறு.**

''திருநா, ஒரு செயலின் தன்மையை நன்கு ஆராயாமல் செயற்படுவதென்பது பகைவரை வளர்த்து நிலை பெறச் செய்வது போன்றது என்று எனக்குத் தெரியும். பாடசாலை அதிபரும், பெற்றோரும், பழைய மாணவர்களும் எமக்குத் துணையாக இருக்கின்றனர். வேண்டுமானால் கைச் செலவுக்கு தாம் பணம் தருகிறோமெனப் பழைய மாணவர் சங்கத்தினர் கூறுகின்றனர். கல்வித் திணைக்களம் எம்மைத் தடை. செய்வதானால் நாட்டில் உள்ள அனைத்து ரியூட்டறிகளையும் தடைசெய்ய வேண்டும்'' என்று பண்டிதர் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''அப்பநோட்ஸ்,ஸ்கீம்றைக்கோட்டை எழுதிக் கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்குக் காட்டுவது தான் ஆசிரியப்பணியோ..? என்றது லட்சுமி எலி.

**466. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்.**

''ஒருவன் செய்யக்கூடாதவற்றைச் செய்வதும், செய்ய வேண்டியவற்றைச் செய்யாது விடுவதும் மிகப்பெரிய தவறு, பாடசாலைகளில் அர்ப்பணிப்புடன் கற்பிக்காததும் பின் பெறுபேறுகளுக்கு உரிமை கொண்டாடுவதும் தவறு. பரீட்சைப் பெறுபேறுகளுக்கு வந்த

மறுநாள் பிள்ளைகளின் பெறுபேறுகளுக்குத் தாம் தாம் காரணமென்று பாடசாலையைத் தவிரவேறு நிறுனங்கள் உரிமை கொண்டாடுகின்றன. அதைப் பாடசாலைகள் தடுக்காமல் விடுவதும் தவறு. அதனால் தான் உண்மையான பெறுபேறுகளுக்கு அவர்களே உரிமை கொண்டாடுகின்றனர். அதைப்பாடசாலைகள் தடுக்காமல் விடுவது தவறு. அதனால் பெறுபேறுகளுக்கு அவர்களே உரிமையாளராகின்றனர்'' என்று பண்டிதர் சொன்னார்'' என்றது குமரன் எலி.

**467. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு**

''பண்டிதர் எண்ணித் துணிந்து விட்டார். இனியோசிக்கமாட்டார். முடிவு முடிவு தான். இனிநாம் அவருக்கு உதவியாகச் செயற்பட்டால் சரி. இலவசமாக வகுப்பு நடத்தினால் தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் தான் எதிர்பார்ப்பார்கள். அதுவும் வலுவில்லாதவர்களையே அவர்களால் எதிர்க்க முடியும். பின் இலவசமாக நடத்துவோர் சில நாட்களில் விட்டு விடுவார்கள் என்றும் எண்ணுவர். எனது பண்டித நண்பர்கள் ஓய்வூதியர்கள். பொறுப்பில்லாதவர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவார்கள்'' என்று பண்டிதர் கூறினார்'' என்றது குமரன் எலி.

''இப்ப அரசாங்கம் நல்ல சம்பளம் கொடுப்பதாலும் பாடசாலையில் பொழுதைப் போக்கலாம். என்பதற்காகவும் பட்டதாரிகள் வேறு வேலைகளை விட்டு விட்டு ஆசிரியராகச் சேர்கின்றனர்'' என்றது லட்சுமி எலி.

**468. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று**
**போற்றினும் பொத்துப் படும்.**

''அர்ப்பணிப்பில்லாத எந்தச் செயலையும் பலபேர் சேர்ந்து செய்தாலும் செய்து முடிக்க மாட்டார்கள். எமது பாடசாலையில் போர்க்காலத்தில் ஆயிரம் பிள்ளைகள் கற்ற போது இருபத்தைந்து ஆசிரியர்கள் கற்பித்தனர். அப்போ ஒரு வசதியும் இல்லை. இப்போ சகல வசதிகளும் இருக்கு அறுநூறு பிள்ளைகள் கற்கிறார்கள். நாற்பத்தைந்து ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். முன்பு வந்த பெறுபேற்றில் பத்தில் ஒரு பங்கு கூட இப்ப இல்லை. அதனால் பிள்ளைகள் பாடசாலையை விட்டு விலகுகிறார்கள். இதைத் தடுக்க வேண்டும்'' என்று பண்டிதர் உணர்ச்சி வசப்பட்டவர் என்றது குமரன் எலி.

''பாடசாலையை கட்டிக்காத்தவர்களுக்கு கோபம் வரத்தான் செய்யும்'' என்றது லட்சுமி எலி.

**469. நன்றுஆற்றல் உள்ளும் தவறுஉண்டு அவரவர்**
**பண்புஅறிந்து ஆற்றாக் கடை**

''ஒருவரது பண்புகளை ஆராயாது அவரோடு உறவாடுவது எப்போதும் தீமையைத் தான் தரும். இதைப்பற்றி நான் அதிபரோடு கதைத்தபோது உற்சாகமாக ஏற்றுக்கொண்டு தன்னாலான உதவிகளைச் செய்வேன் என்ற அதிபர் இப்போது தயங்குகிறார். தனக்குக் கல்வித் திணைக்களத்தால் பிரச்சினைகள் வரும் என்று சொல்கிறார். முதுகெலும்பு இல்லாதவர்கள்

எப்போதும் தமது சுயநலத்தையே பார்ப்பார்கள். தமது நன்மைக்காகத் தான் கதைப்பார்கள் என்று எனக்குத் தெரியும். அவர் அதிபர் என்ற வகையில் சொன்னேன். அவரை நான் பெரிதாக மதிக்கவில்லையென்று பண்டிதர் சொன்னார் என்றது குமரன் எலி.

''தரம் இல்லாத அதிபர்மார்தேவைக்கேற்றபடி மாறித் தமது பதவியைக் காப்பாற்றத் தானே வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**470. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு**
**கொள்ளாத கொள்ளாது உலகு.**

''தமக்குப் பொருந்தாது எச் செயல்களையும் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அதைப் புரியாது செய்தால் இகழ்ச்சியும், தீமைகளும் தான் வரும். இதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஏனென்றால் பாடசாலையை நம்பாததால் தான் மக்கள் தம்பிள்ளைகளைத் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்புகின்றனர். அத்துடன் பாடசாலை வேளைகளிலோ, தனியார் கல்வி நிலையத்திற்குகென்று ஒதுங்கிய வேளைகளையோ நாம் பாவிக்கவில்லை. அதனால் பிரச்சினைகள் வராது'' என்று பண்டிதர் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''வாலையில் ஆடிய தேவடியாள் வயது போனாலும் காலைக்காலை ஆட்டுவாளாம். பண்டிதரும் அப்படியானவர் என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 48 வலி அறிதல்**

**471. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்**

''பண்டிதர் வகுப்பிற்கு அறுபது மாணவர்கள் வந்துள்ளனர். இது போதும். மூன்று வருடங்களாவது கற்பிக்க வேண்டும். நான் தயாராக இருக்கின்றேன். ஏனென்றால் நான் மேற்கொண்ட செயலின் வலிமை மிகப்பெரியது. அதைத் தாங்கக் கூடிய சக்தி எனக்குண்டு. இதற்குப் பகைவர்கள் சிலர் இருக்கிறார்கள். என்னோடு நீங்களும் ஊர்ப்பிரமுகர்களும், மக்களும் இருக்கிறார்கள். அதனால் நான் மேற்கொண்ட செயல் மிகவும் எளிதாக நிறைவேறும்'' என்று பண்டிதர் திருநாவுக்கரசுவிற்கும், நமசிவாயகத்திற்கும், கதிரேசனுக்கும் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''ஆரம்பிக்கும்போது, உருத்திரகுமாரன் போன்ற பலமில்லாதவர்கள் எதிர்பார்ப்பார்கள். அதுவும் இரகசியமாக. வெளிப்படையாக மோதினால் பிரச்சினை என்று எல்லோருக்கும் தெரியும்'' என்றது லட்சுமி எலி.

**472. ஒல்வது அறிவது அறிந்துஅதன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்.**

'' நகுலன் பற்குணத்திற்குச் சொன்னான், ''இன்று மாலை பவித்திராவைப் பெண் பார்க்க வருகிறார்களாம். கட்டாயம் இத்திருமணம் நடக்கும். அதனால் என்னை அழைத்துச் செல்லுங்கள் என்கிறாள். நீதான் உதவி செய்யவேண்டும்'' அதற்குப் பற்குணம் சொன்னான்; அவள் காவல்துறைஅதிகாரி தாமோதரனின் ஒரே மகள். அந்தாள் பொல்லாதமனிதன்; அதற்காக அவளை விட்டுவிட முடியுமா என்ன? அவளில்லாமல் என்னால் வாழமுடியாது. அவளும் இறந்து போவாள். அதனால் கட்டாயம் அழைத்து வரல்வேண்டும். தன்னால் என்ன செய்ய முடியும் என்பதையும் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதையும் அறிந்து முயற்சித்தால் வெற்றி கிடைக்கும். எல்லா ஆயத்தங்களையும் செய்து விட்டேன். நீ கூடவந்தால் சரி'' என்று நகுலன் சொன்னவன்'' என்றது குமரன்எலி.

''வாலிபமிடுக்கலை சொல்லுவினை கூட்டிவந்தாப்பிறகு சீதனத்தைக் கொண்டா என்பினை. இல்லாட்டில் வேறொரு பெம்பிளை சிரித்தால் அவளுக்குப் பின்னால் போயிடுவினை'' என்றது லட்சுமி எலி.

**473. உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்.**

''பவித்திராவை முன்பு சிவகரன் காதலித்தவன். அவளுக்கு விருப்பம் இருந்தோ தெரியாது. அதைத் தாமோதரன் அறிந்து சிவகரனைக் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று அடித்து எச்சரித்தவர்'' என்று பற்குணம் கூறும்போது நகுலன் குறுக்கிட்டுச் சொன்னான்;

''தன்னுடைய வலிமையைச் சரிவர அறியாத பலவீனர்கள் செயலில் ஈடுபட்டால் மிரட்டல்களுக்குப் பயப்பட்டுச் செயலைக் கைவிடுவார்கள். நான் அப்படியல்ல. என்னிடம் பணம் இருக்கு. ஆள்பலம் இருக்கு அதனால் வெற்றி கிட்டும்'' என்றவன். என்றது குமரன்எலி.

''காதலிக்கும் போது கண்தெரியாது. கூட்டிச்சென்று ஒருமாதம் கழிந்தால் மோகம் போய்விடும். பிறகு அடிபுடிதான்'' என்றது லட்சுமி எலி.

**474. அமைந்தாங்கு ஒழுகான் அளவறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்.**

''பற்குணம், நீ ஆற்றல் மிக்கவன். அறிவாளி. உன்னுடைய உதவியிருந்தால் விடியப்பவித்திரா எனது கைக்குள். உன்னுடைய ஆற்றலுடன் என்னுடைய வலிமையும் சேர்ந்தால் தாமோதரனால் எதுவும் செய்ய முடியாது. சிவகரன் கோளை தன்னுடைய ஆற்றலை அறியாது தான் பெரியவன், தன்னால் எதையும் செய்ய முடியும் என்ற நினைப்புடன் வல்லமை உள்ளவர்களின் உதவியையும் நாடாமல் தான் விரும்பினானே தவிரப் பவித்திரா விரும்பவில்லை. அதனால் அவள் தகப்பனுக்குச் சொல்லிவிட்டால். இப்போ பவித்திரா என்னுடன் வரச் சம்மதித்து விட்டாள். இனி என்ன பிரச்சனை'' என்று நகுலன் பற்குணத்திற்குச் சொன்னவன்'' என்றது குமரன்எலி.

“இனித்தானே பிரச்சினை. காண்டீபனும் உவரை விடத் தீவிரமாகக் காதலித்தவன். இப்ப அவளைத்தேடுவதே இல்லை. பாவம் அவள்’’ என்றது லட்சுமி எலி.

**475. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.**

“நகுலா, மிக மெல்லிய மயில் இறகைக்கூட அளவுக்கதிகமாக வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்துவிடும். அதனால் கவனமாக இரு. உனது பெற்றோருக்கு உனது காதல் விஷயம் தெரியுமா..? அவர்கள் ஒத்துக் கொள்வார்களா…? உனக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். உனது நடத்தையால் அவளது வாழ்க்கை பாதிக்கப்படாதா?” என்று பற் குணம் கேட்டதற்கு நகுலன் சொன்னான்; “பிரச்சினைகள் வரும் தான். வரும் போது பார்ப்போம். என்றவன்’’ என்றது குமரன் எலி.

“இப்ப அவைக்கு எதுவும் புரியாது. பிரச்சினைகள் வந்த பிறகு விட்டுட்டுப் போவினை சண்டை பிடிப்பினை என்றது’’ லட்சுமி எலி.

**476. நுனிக்கொம்பர் ஏறினார் அ∴திறந்து ஊக்கின்
உயிர்க்குஇறுதி யாகி விடும்.**

“நகுலா, மரத்தின் உச்சிக் கிளை மீது ஏறியவர் மேலே ஏறலாமா என ஆராயாது மேலும் ஏறினால் அவர் உயிருக்கு அது ஆபத்தாகலாம். அதனால் உனது குடும்பத்திற்காவது உனது காதலை வெளிப்படுத்துவது நல்லது’’ என்று நகுலன் சொன்னபோது ; “அப்படிச் செய்ய முடியாது. அப்பா தனது தங்கையின் மகளைச் செய்யுமாறு சொல்லிக் கொண்டிருக்கிறார். என்றான்’’ இது பெரும் பிரச்சினையில் தான் முடியும். இதில் என்னை ஈடுபடுத்தாதே’’ என்று பற்குணம் சொன்னவன் என்றது குமரன் எலி.

“தவரத்தினத்தார் காசோடு சாகிறவர். தாமோதரம் சட்டம் கதைப்பவர். நன்றாகத் தான் இருக்கப்போகிறது என்றது லட்சுமிஎலி.

**477. ஆற்றின் அளவிறந்த ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.**

“நகுலா, உனக்கு இப்போது வருவாய் இல்லை. தானதர்மம் செய்வதாக இருந்தாலும் தனது வருவாய்க்கு ஏற்றபடி தான் செய்தல் வேண்டும். இப்போ பவித்திராவைக் கூட்டிவந்தால் தாலிகட்ட வேண்டும். செலவு ஏராளமாக வரும். அதற்கு என்ன செய்யப்போகிறாய்’’ என்று பற்குணம் கேட்க நகுலன் சொன்னான்; “என்னிடம் ஒரு தங்கச் சங்கிலி உண்டு. கொஞ்சக்காசும் இருக்கு. சமாளிக்கலாம்’’ என்றவன் என்றது குமரன்எலி.

“உழைப்புப் பிழைப்பு இல்லாதவனை நம்பிவந்து அவள் என்ன செய்யப்போகிறாள்? வசதியாக வாழ்ந்தவள்'' என்றது லட்சுமி எலி.

**478. ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை**

“நகுலா, வருவாய் சிறிதாக இருந்தாலும் செலவைக்குறைத்தால் துன்பங்கள் வராது என்பார்கள். உனக்கு வருவாய் இல்லை. செலவு எக்கச்சக்கமாக வரப்போகிறது. என்ன செய்வாய்?'' என்று பற்குணம் கேட்க நகுலன் சொன்னான்;'' அதையெல்லாம் பிறகு பார்ப்பம். இல்லாவிட்டால் பவித்திராவை இழக்க வேண்டிவரும்'' என்றவன் என்றது குமரன் எலி.

“இப்படியானவர்களால் தான் சமூகம் சீரழிந்து போகுது. பெண்ணை இரு வீட்டாரும் ஏற்காவிட்டால் என்னகதி…? அடிபாடு குத்துச்சண்டை தான்'' என்றது லட்சுமி எலி.

**479. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்.**

“தனது வருவாயை அறிந்து செலவு செய்யாதவனின் வாழ்க்கை சிறப்பாக இருப்பது போலத் தோன்றினாலும் காலப்போக்கில் அது அழிந்து விடும் என்பார்கள். ஆனால் வருாயில்லாதவனின் வாழ்க்கை என்னவாகும் என்பதை நினைத்துப்பார். நீ வசதியாக வாழ்ந்தவன். கூலி வேலை செய்வாயா…? அது உனக்கு மதிப்பைத் தருமா…? அதனால் பவித்திராவின் மேல் கொண்ட காதலை விட்டு விடு என்றவன்'' என்றது குமரன் எலி.

“நல்ல யோசனை. எதையும் ஆராயமல் வாழ்கிறவையாலை தான் சமூகச் சீர்கேடுகள் உண்டாகின்றன'' என்றது லட்சுமி எலி.

**480. உளவரைத் தூக்காத ஒப்புர வாண்மை**
**வளவரை வல்லைக் கெடும்.**

“தன்னிடமுள்ள பொருளின் அளவைத் தெரிந்து கொள்ளாமல் மற்றவர்களுக்கு உதவுபவர்களின் பொருள் விரைவில் அழித்து விடும் என்பார்கள். பொருளில்லாத நீ எப்படி மற்றவர்களுக்கு உதவ முடியும். பவித்திராவின் தேவைகளை எப்படிப் பூர்த்தி செய்ய முடியும். காதல் என்பது மனதில் இருக்கும் தீராத மோகத்தைத் தணிக்கும்வரை தான் இனிக்கும். அதன்பின் பொருள் இருந்தால் தான் சிறக்கும். பக்கத்து வீட்டுப் பெண் வசதியாக இருந்தால் அவ்வசதி உனது மனைவிக்கும் தேவைப்படும். அது கிடைக்காவிட்டால் வாழ்வுநரகமாகி விடும்'' என்று நகுலனுக்குப் பற்குணம் சொன்னவன்.'' என்றது குமரன் எலி.

“பக்கத்து வீட்டுப் பெண்போடும் நகை, உடுத்தும் உடுப்பு இவை தானே வாழ்வைச் சிறப்பிப்பது. அவையில்லாவிட்டால் ஏதேதோ நடக்கும்” என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 49 காலம் அறிதல்**

**481. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**
**வேந்தர்க்கு வேண்டும் பொழுது.**

“நகுலா, எந்தச் செயலுக்கும் காலம் ஒத்துழைக்க வேண்டும். பகல்வேளைகளில் வலிமையற்ற காக்கை வலிமையான கோட்டானை வென்றுவிடும். அரசர்களுக்குக் கூட காலம் நன்றாக இருந்தால் தான் பகைவரை வெல்லலாம். உன்னிடம் பணமும் இல்லை. அத்துடன் பெண்பகுதியினரோ அல்லது உனது வீட்டாரோ ஆதரவு வழங்கமாட்டார்கள். முதலில் உனக்கென ஒரு தொழிலைத்தேடு. பணத்தைச் சம்பாதி. பணம் சேர்ந்தால் காலம் நல்லபடி உதவும். இப்போ பவித்திராவைப் பெண்பார்க்கத் தானே வருகிறார்கள். அவர்கள் விரும்பினாலும் உடனே திருமணம் நடக்காது. அதனால் பொறுத்திரு என்று பற்குணம் கூறினான்” என்றது குமரன் எலி.

“பெண்ணைப்பார்த்தவுடன் கலியாணம் முடிந்து விடுமா என்ன…? காசைத் தேடாமல் கலியாணம் செய்வது தற்கொலைக்குச் சமமானது” என்றது லட்சுமி எலி.

**482. பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்**
**தீராமை ஆர்க்கும் கயிறு.**

“காலம்தான் வாழ்வைச் சிறப்பிப்பது. அதனால் காலம் கை கூடும் வரை பொறுத்திருத்தல் வேண்டும். பறவைகள் விலங்குகள் கூடத்தமக்குச் சாதகமான நிலை தோன்றும் வரை இரையைக் கூடத் தாக்காது. ஒருவன் காலத்திற்கு ஏற்றபடி நடந்து கொள்வது என்பது செல்வம் அவனை விட்டு நீங்காமல் கட்டிக்காக்கும் கயிறு போன்றது என்று பெரியார்கள் சொல்வார்கள். அதனால் பொறுமையாக இருந்து நிலமையை ஆராய். பெண்கள் அவசரப்படுவார்கள். காதலால் துடிதுடிப்பார்கள். பின் வசதியான வாழ்வு கிடைக்காவிட்டால் அவதிப்படுவார்கள்” என்று நகுலனுக்குப் பற்குணம் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“வாலிபமிடுக்கு அதைக்கேட்காது மிடுக்கு அடங்கினால் துடிப்பும் அடங்கும்” என்றது லட்சுமி எலி.

**483. அருவினை என்ப உளவோ கருவியான்**
**காலம் அறிந்து செயின்.**

“செயல்களை முடிப்பதற்கு உரிய கருவிகளோடு காலத்தையும் அறிந்து செயற்பட்டால், ஈடுபடும் செயல்கள் அனைத்தும் வெற்றி பெறும். இப்போ உனது செயலுக்குரிய முக்கிய கருவி பணம். பணம் இருந்தால் அவளுக்குத் திருமணம் முற்றுப் பெற்றால் காலம் கை கூடி விட்டதென்று நினைத்து அவளை அழைத்து வராலம். அதனால் வாழ்வு சிறக்கும். அவளை அழைத்து வந்த பின் பற்றாக்குறை வரும் போது சீர்வரிசைக் கேடடுத் துன்புறுத்தக் கூடாது. என்று நகுலனுக்குப் பற்குணம் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“புத்திமதிகள் அந்தந்த நேரம் தான் மன ஆறுதலைத் தரும். துன்பங்கள் வந்தால் புத்திமதிகள் மட்டும் அல்ல
கற்ற கல்வியும் மறந்து போகும்”என்றது லட்சுமி எலி.

**484. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தாற் செயின்**

“நகுலா, செய்வதற்குரிய காலத்தையும், இடத்தையும் அறிந்து செயற்பட்டால் முழு உலகையும் அடைய வேண்டும் என்று விரும்பினாலும் அதை அடையலாம். இப்போ அவளைக் கூட்டிவருவதற்கான காலம் அமையவில்லை. அதைவிட அவளைக் கூட்டி வந்தால் எங்கே தங்க வைக்கப் போகிறாய்? அதைத் தீர்மானித்தாயா…? புதிதாக வாழ்க்கையைத் தொடங்குவோர் மற்றவர்களின் தொல்லைகள் இல்லாத இடத்தில் குடியிருக்க வேண்டும். அதற்காக ஒரு வீட்டை வாடகைக்கு எடு. என்று பற்குணம் கூறியவன்” என்றது குமரன் எலி.

“யாரையும் நம்பி அவர்களின் வீட்டில் குடியிருந்தால் அதனால் பல்வேறு பட்ட பிரச்சினைகள் உருவாகலாம்” என்றது லட்சுமி எலி.

**485. காலம் கருதி இருப்பர் கலங்காது**
**ஞாலம் கருது பவர்.**

“நகுலா, ஒருவன் தனது எண்ணத்தைப் பூர்த்தி செய்ய விரும்பினால் அதற்கான தகுந்த காலத்தை எதிர்பார்த்திருத்தல் வேண்டும். நீ உடனே தேவையான பணத்தையும் குடியிருக்க வீட்டையும் ஒழுங்கு செய். அதன் பின் பெண் பார்க்க வந்தவர்களின் முடிவைக் கருத்திற் கொண்டு செயற்படலாம் என்று பற்குனம் கூறியவன்” என்றது குமரன் எலி.

“பெண்ணைக் கூட்டி வந்து தனது ஆசையை பூர்த்தி செய்ய நினைப்பவன் உதைக் கேட்பானா?” என்றது லட்சுமி எலி.

**486. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்**
**தாக்கற்குப் பேரும் தகைத்து.**

“நகுலா, ஊக்கமுடைய செயல் வீரன் எதற்கும் அஞ்சாது அமைதியாக இருப்பது, சண்டையிடும் ஆட்டுக் கடா எதிரியைத் தாக்குவதற்குரிய வேகத்தைப் பெறுவதற்காகப் பின்னால் செல்வதைப் போன்றது. அதனால் அவசரப்படாது அமைதியாக இருந்து காரியமாற்று. அவசரப்படுவது செயலினைப் பின்னடைவு அடையச் செய்யும். அமைதியாக

இருந்து எடுக்கும் முடிவுகள் தான் வெற்றியைத் தரும். அதனால் பவித்திராவை அழைத்து வரவேண்டும். என்ற நினைவை மாற்று. அமைதியாக இரு. காலம் பதில் தரும். என்று பற்குணம் சொன்னவன்''என்றது குமரன் எலி.

''நல்ல யோசனை. துடிப்போடு இருப்பவன். கேட்க வேண்டுமே'' என்றது லட்சுமி எலி.

**487. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து**
**உள்பேர்ப்பர் ஒள்ளி யவர்.**

''நகுலா, அறிவாளிகள் பகைவர்கள் தீங்கு செய்தால் கூட உடனே செயற்படாது காலம் கனியும் வரை காத்திருப்பார்கள். அதுவரை கொண்ட எண்ணத்தை மறவாது அடக்கி வைத்திருப்பார்கள். உனது செயலுக்கான காலம் இன்னும் வரவில்லை. இப்போ பெண்களைப் பார்க்கிறார்கள். அவற்றைப் பிடிக்க வேண்டும். பிடித்தால் திருமணத்தை உடனே செய்ய முடியாது. அதற்குப் பெருந்தொகையான பணம் தேவை மண்டபம் தேவை. நீ அவளின் நினைவோடு அடங்கி இரு. செயற்படும் நேரம் வரும் போது செயற்படலாம். என்று பற்குணம் கூறினான்'' என்றது குமரன் எலி.

''பொறுத்தார் அரசாள்வார் என்பார்கள். இந்த விஷயத்திலை மனம் அடங்குமா என்ன…?'' என்றது லட்சுமி எலி.

**488. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை**
**காணின் கிழக்காம் தலை.**

''உனக்குப் பொருத்தமான காலம் வரும் வரை பொறுமையாக அவளின் நினைவோடு இரு. நகுலா, காலம் வரும் போது அவள் தானகவே வருவாள். அரசன் கூட தான் வெல்லும் காலம் வரும் வரை, பகைவரைக் கண்டாலும் பொறுமையாக இருப்பான். பகைவருக்கு அழிவு காலம் வரும் போது அவர்களது தலை தானே தரையில் விழும் என்பது அவனுக்குத் தெரியும். நீ பவித்திராவைக் காணும் போது அழைத்துச் செல்லும் கதையைக் கதையாதே. வேறுகதைகளைக் கதை. அழைத்துச் செல்லும் காலம் வந்தால் நீயே வருவாய் என்று சொல்லு என்றவன் பற்குணம்'' என்றது குமரன் எலி.

''காலம் வந்தால் வாழ்வு வரும்'' என்றது லட்சுமி எலி.

**489. எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற்கு அரிய செயல்.**

''செய்ய வேண்டிய காலம் வரும் போது அதைக் காலதாமதமின்றிச் செய்து முடித்தல் வேண்டும். உனக்கு இன்னும் அக்காலம் வரவில்லை. திருமணம் முற்றாகித் திகதி

குறிக்கப்பட்டால் உடனே நான் அவளை அழைத்து வருவேன். அதுவரை பொறுத்திரு இப்போ அழைத்து வந்து துன்பப்படாதே. இப்போ பொண்பார்க்க வருபவர்களுக்கு அவளைப் பிடிக்கா விட்டால், இன்னொருவன் வர இரண்டு மூன்று ஆண்டுகள் கூடச் செல்லலாம். அதற்குள் வேண்டிய பணத்தைத் தேடு. என்று நகுலனுக்குப் பற்குணம் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''பற்குணத்தின் ஆலோசனைகள் சிறப்பானவை. அதைக் கைக் கொண்டால் நல்லது'' என்றது லட்சுமி எலி.

**490. கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்துஒக்க சீர்த்த இடத்து.**

''ஐந்தறிவுள்ள கொக்கு கூட பெரிய மீன் வரும்வரை காத்திருக்குமாம். பெரிய மீனைக் கண்டதும் கூத்தில் பிடிக்குமாம். கொக்குக் கூட உரிய காலம் வரும் வரை பொறுத்திருக்கிறது. மனிதனான உன்னால் பொறுத்திருக்க முடியாதா? அவசரப் பட்டால் சிறிய மீன்களைப் தான் பிடிக்க முடியும். பொறுமையாக இருந்தால் பெரிய மீன்களைப் பிடிக்கலாம். என்று கொக்கு நினைப்பதைப் போல நீயும் நினை. நீயும் பொறுமையாக இருந்து பெருந்தொகைப் பணைத்தைத் தேடு. என்று பற்குணம் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''அந்தரப்படுபவர் உதைக் கேட்பாரோ? அவசரப் பட்டு அவளைக் கூட்டி வந்து அவளது வாழ்க்கையைக் கெடுக்காது விட்டால் சரி. சில சமயம் அவள் அவசரப்படுத்துவாள்'' என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 50 இடன் அறிதல்**

**491. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
**இடங்கண்ட பின்அல் லது.**

''பவித்திரா தனது தோழியான சாரதாவுக்குச் சொன்னால்; ''என்னைப்பெண் பார்க்க வருகிறார்கள் என்று கூறியும் அவர் வந்து என்னை அழைத்துச் செல்லவில்லை. மாப்பிளை வீட்டாருக்கு என்னைப்பிடித்து விட்டது. தற்செயலாக திருமணத் திகதி குறிக்கப்பட்டால் நான் தற்கொலை செய்வேன்'' என்றபோது சாரதா சொன்னாள்; ''நீ எதற்கும் அவசரப்படுவாய். ஒரு செயலில் ஈடுபட்டால் வெற்றி வாய்ப்பு ஏற்படும் வரை பொறுத்திருத்தல் வேண்டும். அவர் உன்னை அழைத்துச் சொல்வதற்கான ஆயத்தங்களைச் செய்கிறார். அது வரை பொருத்திரு. உனது தந்தை வலிமையானவர். செல்வாக்குள்ளவர். ஆட்பலம் உள்ளவர். அதனால் அவரை எளிதாக எண்ணக் கூடாது என்றவர். இப்ப என்ன கலியாணமா முடிந்தது? அவர்களுக்கு உன்னை பிடித்திருக்கு. இனிச் சீதனப் பேச்சு சரிவர வேணுமே''. என்று சாரதா சென்னவள்'' என்றது குமரன் எலி.

“அது தானே மடப் பெட்டை. இப்ப கலியானத்திலை. பெற்றோரின் பின்னாள்ச் செலவு, சகோதரியின் நாள்ச் சீகம் எல்லாம் பெண் வீட்டார் தானே கொடுக்க வேண்டும்’’ என்றது லட்சுமி எலி.

**492. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்துஆம்**
**ஆக்கம் பலவும் தரும்.**

“பவித்திரா, வலிமை மிக்க மனத்தை உடையவர்களுக்கும் பாதுகாப்பு என்ற பக்கத் துணை இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் செயலில் வெற்றி பெறுவது கஷ்டம். உனது தந்தை காவல் துறை அதிகாரி. அதிகாரம் மிக்கவர். அவரிற் பார்க்க மேலான துணை வேண்டும். அதனால் தான் நகுலன் யோசிக்கிறார். தீடீரென்று உனக்குத் திருமணம் பேசப்படுகிறது. அதை அவர் எதிர்பார்க்கவில்லை. அதனால் பொறுமையாக இரு. கவலைப்படாதை, அழாதை. ஏதாவது சிக்கல் வந்தால் நானே அழைத்துச் சென்று அவரிடம் ஒப்படைக்கிறேன். என்று சாரதா பவித்திராவிற்குச் சொன்னவள்’’ என்றது குமரன் எலி.

“காதலிக்கும் போது உள்ள அவசரமும் வேகமும் கலியாணத்திற்குப் பின்பும் இருக்க வேண்டும். பலருக்கு அது இல்லாததால் தான் பிரச்சினை’’ என்றது லட்சுமி எலி.

**493 ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து**
**போற்றார்கண் போற்றிச் செயின்**

“வெற்றி பெறுவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டு, தனக்கு எதிரியாக உள்ளவரின் வலிமையையும் சரியாக அறிந்து, அதற்கேற்றபடி செயற்பட்டால் வலிமை இல்லாதவனும் வெற்றி பெறுவான் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். நகுலன் படித்தவர். பலசாலி. பணக்காரர். இவ்வளவும் இருந்தும் என்னைப் பற்றிய சிந்தனை இல்லாதிருக்கிறாறென்றால் நான் எப்படி அவனை நம்புவது விக்கிவிசும்பி பவித்தரா அழுதாள். அவரைச் சாரதாவால் சமாளிக்க முடியவில்லை’’ என்றது குமரன் எலி.

அவசரம் தான் பலரது வாழக்கையைக் கெடுத்துள்ளது’’ என்றது லட்சுமி எலி.

**494. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து**
**துன்னியார் துன்னிச் செயின்**

“ஏற்ற இடம் எதுவென அறிந்து எதிரி கவனக் குறைவாக இருக்கும் பொழுது செயற்பட்டால் எதிரியின் எண்ணம் கை கூடாதென்பார்கள். எனது காதல் விடயம் பெற்றாருக்குத் தெரியாது. என்னை அழைத்துச் சென்று மறைத்து வைக்க வேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுத்து, அப்பா

எதிர்பாராத வேளை என்னை அழைத்துச் சென்று எனது திருமணத்தை முடித்து விட்டால் அப்பா தனது எண்ணத்தைக் கை விட்டுவிடுவார். நகுலன் என்னை அழைத்துச் செல்ல இன்னும் தயாராகவில்லை, என்று பவித்திரா அழுதவள்'' என்றது குமரன் எலி.

''பல வருடமாக பாசத்துடன் வளர்த்த தகப்பனை எப்படிப் பெண்களால் இலகுவாக ஏமாற்ற முடிகிறது'' என்றது லட்சுமி எலி.

**495 நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற.**

''நீருக்குள் எந்த வலிய மிருகத்தையும் முதலை கொன்றுவிடும். அதே சமயம் அந்த முதலை நீரை விட்டு வெளியே வந்தால் பலமில்லாத மிருகம் கூட அதைக் கொன்று விடும். இப்போ அப்பாவுக்கு எமது காதல் விடயம் தெரியாததால் நாம் நீருக்குள் உள்ள முதலையைப் போலப் பலமுள்ளவர்களாக இருக்கிறோம். விஷயம் அப்பாவுக்குத் தெரிந்தால் நாம் தரையில் உள்ள முதலையாகிவிடுவோம். பின் எம்மைக் காப்பாற்ற யாராலும் முடியாது. இதை அவருக்கு நல்ல முறையில் உணர்த்து என்று பவித்திரா சாரதாவுக்குக்குக் கூறினாள்'' என்றது குமரன் எலி.

''இப்ப வீட்டார் கசப்பினை. இரண்டைப் பெற்றாப்பிறகு தான் நிலைமை புரியும்'' என்றது லட்சுமி எலி.

**496. கல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல் ஓடும்**
**நாவாயும் ஓடா நிலத்து**

''வலிமையான சக்கரங்களையுடைய தேர் கடலில் ஓடாது. கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓடாது. அது போலக் காதலிப்பது பெற்றோருக்குப் பிடிக்காது. காதலிப்பவன் பெரும் கோடீஸ்வரனானலும் எதிர்ப்பர். பிச்சைக்காரனானாலும் எதிர்ப்பர். அவர்களின் எதிர்ப்புக் காதலர்களுக்குப் பிடிக்காது. அதனால் அவர்கள் யாருக்கும் தெரியாமல் சென்று மறைந்து வாழ்வது இயல்பு தானே. இதை ஏன் அவர் புரிந்து கொள்கிறாறில்லை'' என்று அழுதாள் பவித்திரா. என்றது குமரன் எலி.

''காதலுக்குக் கண்மட்டும் இல்லை, கடவுளாய் படைக்கப்பட்ட எதுவும் இல்லை'' என்றது லட்சுமி எலி.

**497. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி இடத்தான் செயின்**

''நகுலன் இயல்பாகவே பயந்தசுபாவம் உள்ளவர். செய்யும் செயலை உறுதியாகவும் , செய்ய நினைக்கும் செயலைச் செய்து முடிக்கும் வரை தளர்வில்லாமலும் செய்தால் செயலை முடிப்பதற்குத் துணிவைத்தவிர வேறு எவையும் தேவையில்லை.. இவர்

துணிவில்லாமல் யோசிப்பதால் தான் பல்வேறு விதமான மனக்குழப்பத்திற்கு ஆழாகிறார். நான் தான் தனது மனைவி என்று உறுதியாக நம்பினால் ஏனைய எண்ணங்கள் வருமா என்ன..? என்று பவித்திரா கேட்டாள்'' என்றது குமரன் எலி.

''பெம்பிளைகள் எதற்கும் அவசரப்படுவார்கள். பின்பு துன்பப்படுவார்கள். இது இயல்பு'' என்றது லட்சுமி எலி.

**498. சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்**
**ஊக்கம் அழிந்து விடும்.**

''சாரதா, சிறியபடைகளை உடைய அரசனாக இருந்தாலும் அவன் தகுந்தமுறையில் ஆயத்தம் செய்வானேயானால் பெரிய படையை உடைய அரசனும் தோற்றுப்போவான் என்பார்கள். அப்பா காவல் துறை அதிகாரி வல்லமையுள்ளவர். அதிகாரம் உள்ளவர். ஆள்பலம் உடையவர். இவையெல்லாம் நகுலனிடம் இல்லை. ஆனால் மூளையுண்டு. சரியாகத்திட்டமிட்டுச் செயற்பட்டால் செயலில்வெற்றி பெறலாம் என்று நான் அவருக்குப்பலமுறை கூறியும் அவள் கேட்கிறாரில்லை'' என்று பவித்திரா சாரதாவுக்குச் சொன்னவள். என்றது குமரன் எலி.

''எதையும் சுலபமாகச் சொல்லலாம். செய்யத்துணிவு வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**499. சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்**
**உறைநிலத்தொடு ஒட்டல் அரிது**

''அவரது நண்பன் ஒருவர் அயலூரில் இருக்கிறார். அவரின் வீட்டுக்குத் தான் என்னை அழைத்துச் செல்ல விருப்பதாகக் கூறினார்… அந்துடன் அவ்வூரில் நாம் இருப்போம் என்று யாரும் நம்பமாட்டார்கள். அப்படி நம்பினாலும் அங்கு வரமாட்டார்கள் என்று சொல்லி, ''பவித்திரா, பலத்த கோட்டையும் வலிமைமிக்கவீரர்களும் இல்லாத அரசனாக இருந்தாலும், அவர்கள் வாழும் இடத்திற்குச் சென்று வெற்றி பெறுதல் அரிது என்று சொல்வார்கள். அதனால் பயமில்லாமல் இரு. அங்கு அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறியவரை இரண்டு நாட்களாகத் நான் காணவில்லை'' என்று பவத்திரா அழுதவள்'' என்றது குமரன் எலி.

'' என்ன தான் திட்டமிட்டு காரியமாற்றினாலும் காலம் வந்தால் தான் கைகூடும்'' என்றது லட்சுமி எலி.

**500. காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா**
**வேலாள் முகத்த களிறு.**

''பவித்திரா கண்டபடி சிந்தித்துக் கலங்காதே. எவ்வளவு தான் திறமையானவராக இருந்தாலும் காலம் கைகூட வேண்டும். வேல் கொண்ட வீரர்களுக்கு அஞ்சாமல் அவர்களைக்

கொன்றுகுவிக்கும் யானை சேற்று நிலத்தில் சிக்கிக் கொண்டால் நரிகள் கூடக் கொன்று விடும் என்பார்கள். நகுலன் பலசாலி. ஏதோ பிரச்சினைகளில் சிக்கியுள்ளார். அமைதியாக இரு. நீ நினைத்தது நடக்கும் மனம் குழம்பினால் நீயே அகப்பட்டுவிடுவாய்'' என்று சாரதா சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''காதலில் அகப்பட்டவர்களுக்குச் சொல்வது எதுவும் விளங்காது'' என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 51 தெரிந்து தெளிதல்**

**501.அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்**
**திறம் தெரிந்து தேறப்படும். .**

''சாரதா அவர் உத்தமர். அவர் பண்டிதர். அதனால் அறம் அறிந்தவர். பொருள் உள்ளவர் என்னோடு சேர்ந்து இன்பமாக வாழ விரும்புபவர். தன் உயிரைவிட என்னுயிரை மேலாகக் கருதுபவர். அதனால் எனக்குத் துன்பங்கள் வர விரும்பாதவர். என்று நான் அவரைப்பற்றி அறிந்து தெளிந்தமையால் தான் நான் அவரை விரும்பினேன். இப்போ சிலர் அவர் உனக்காக நடிக்கிறார் என்கின்றனர்.. அவருக்கு நடிக்கத்தெரியாது. பண்டிதர் வீரகத்தி எனது தாய் மாமானார். அவரின் முதன்மைச் சீடன் அவர், தவறாக நடப்பாரா..? சொல்லடி..'' என்று பவித்திரா மனம் குழம்பியபடி சாரதாவைக் கேட்டாள் என்றது குமரன் எலி.

''எவ்வளவு தான் உத்தமனாக இருந்தாலும் காதலிக்குச் சந்தேகம் வரத்தான் செய்யும்'' என்றது லட்சுமி எலி.

**502. குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்**
**நாணுடையான் கட்டே தெளிவு.**

''அவர் நற்குடியிற் பிறந்தவர். நல்லவர்களோடு உறவாடுபவர். குற்றங்கள் எதுவும் செய்யாதவர். பாவச் செயல்கள் எதையும் செய்யாத உத்தமர் என்று பண்டிதர் வீரகத்தி சொன்னமையால் தான் எனது மனம் அவர் மீது காதல் கொண்டது. ஒருவன் அழகனாகவும், நற்குணங்கள் உள்ளவனாகவும், தனவந்தனாகவும் இருந்தால் எந்தப் பெண்ணும் விரும்பவாள் தானே. இது உலக நியதி. பண்டிதரின் சொற்களால் தான் நான் அவரை விரும்பினேன்… இது பிழையா…? என்று பவித்திரா அழுதவள்'' என்றது குமரன் எலி.

''இப்போது வாழும் பெண்கள் கவர்ச்சியை நம்பி ஏமாறுகிறார்கள். ஆனால் பவித்திரா பண்டிதரின் வார்த்தையை நம்பி ஏமாந்துவிட்டாள்'' என்றது லட்சுமி எலி.

**503. அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்**
**இன்மை அரிதே வெளிறு**

“பவித்திரா, அரியநூல்களைக் கற்று ஒழுக்கமாக வாழ்வோரிடமும் அறியாமை இருக்கும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீ உன்னை அழைத்துச் செல்லவில்லையென்று துன்பப்படுகிறாய். நகுலன் உன்னை மகாராணி மாதிரி வைத்திருக்க வேண்டு என்று விரும்புவதால் உன்னை அழைத்துச் செல்லும் காலத்தை எதிர்பார்க்கிறான். அதை நீ அறியாமையெனக் கருதுகிறாய். அரியபல நூல்களைக் கற்றவரிடமும் அறியாமை இருக்கும். அதனால் பொறுமையாக இரு என்று சாரதா சொன்னவள்” என்றது குமரன் எலி.

“எதையும் முழுமையாகக் கற்கமுடியுமா என்ன…? எதைக் கற்றாலும் அதைப் புரியாமல் தானே மக்கள் வாழ்கின்றனர்” என்றது லட்சுமி எலி.

**504 குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்.**

பவித்திரா, சாரதாவுக்கு சொன்னாள், “ஒருவருடைய குணங்களை ஆராய்ந்து பின் அவன் செய்ததாகக் கருதப்படும் குற்றங்களையும் ஆராய்ந்து அவற்றுள் எது மிகுதியாக இருக்கின்றதோ அதைக் கொண்டு தான் அவனது இயல்பு தீர்மானிக்கப்படுகின்றது. நகுலன் கெட்டிக்காரன், நம்பிக்கைக்குரியவன், அவகை் கணவனாக அடைபவள் கொடுத்துவைத்தவள் என்று பண்டிதர் எனது தந்தைக்கு கூறியமையால் தான் நான் அவரைக் காதலித்தேன். அவர் நல்லவர் என்பதற்குச் சாட்சியாக உள்ளவர் பண்டிதர். பண்டிதரைத் தீர்க்கதரிசி என்று ஊர் சொல்கிறது. அப்படியான பண்டிதரை நம்பியது தவறா…?” என்று கேட்டாள் பவித்திரா. என்றது குமரன் எலி.

“சரி தவறு என்று வாழ்க்கைப்பட்டபின்பு தான் சொல்ல முடியும். நல்லவர் கெட்டவராகவும் மாறலாம்” என்றது லட்சுமி எலி.

**505. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்.**

“ பவித்திரா, ஒருவனது செயல்களைக் கொண்டு தான் அவன் நல்லவான? தீயவனா? பெருமைக்குரியவனா சிறுமைக்குரியவனா என்று நாம் தெரிந்து கொள்ள முடியும். நகுலன் நல்லவன். புத்திசாலி பெருமைக்குரியவன் என்று ஊரில் உள்ள பெரியவர்கள் எல்லோரும் சொல்கிறார்கள். எதற்கும் காலம் கை கூட வேண்டும். உன்னை அழைத்துச் சென்ற பின் உன்னைப் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்திருத்தல் வேண்டும். அதற்குக் கால அவகாசம் தேவை. இதை உணர முடியாதவளாக இருக்கிறாயே என்று சாரதா பவித்திராவைக் கேட்டவள்” என்றது குமரன் எலி.

சரியான கேள்வி தான். அவசரப்படுபவர்களுக்கு இவை விளங்காது” என்றது லட்சுமி எலி.

**506. அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்**
**பற்றிலர் நாணார் பழி.**

“சாரதா, சுற்றத்தவர்களோடு தொடர்பில்லாதவர்களை ஒரு போதும் நம்பக் கூடாது. அவர்களுக்கு உலக வாழ்வில் பற்றில்லை. அதனால் பழிக்கு அவர்கள் அஞ்சமாட்டார்கள். ஆனால் நகுலன் எப்போதும் சுற்றத்தவர்களை விரும்புவார். உதவிகள் செய்பவர், அன்பாகப் பழகுபவர். என்றுபண்டிதர் சொன்னார். அது உண்மை. நகுலன் என்னை மிகவும் விரும்பினார். ஒரு நாள் நான் கதைக்காவிட்டால் துடித்துப் போவார். அப்படியானவர் இரண்டு நாட்களாக என்னுடன் கதைக்காதது. எனக்கு உலகம் இருண்டு விட்டது போல் இருக்கிறது என்று சாரதா பவித்திராவுக்கு சொன்னவள்” என்றது குமரன் எலி.

“இரண்டு நாட்களாக கதைக்காவிட்டால் கஷ்டம் தான். திருமணமான பெண் பின் அப்படிச் சொன்னால் யோசிக்க வேண்டும்” என்றது லட்சுமி எலி.

**507 காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்**
**பேதைமை எல்லாம் தரும்.** .

“அறிய வேண்டியவைகளை அறியாதவர்களை அன்பின் காரணமாக நம்பினால் துன்பங்கள் தான் உண்டாகும்” என்று பண்டிதர் கூறுவார். அறிய வேண்டியவை அனைத்தையும் நன்கு அறிந்து நகுலனை நம்பியதால் எனக்குத் துன்பங்கள் தானே வந்து கொண்டிருக்கின்றன என்று பவித்திரா கூறும் போது சாரதா இடை மறித்துச் சொன்னாள்; “நீ பண்டிதர் சொன்ன அர்த்தத்தைத் தவறாகப் புரிந்துள்ளாய். காதலர்களுக்கு எப்போது பிரச்சினைகளும் துன்பங்களும் தான் வரும் அதைப் புரிந்து கொள் என்றவள்” என்றது குமரன் எலி.

“காதலருக்கு இல்லை கலியாணமான பின்பும் துன்பங்கள் வரும் என்பதை அதிகமானோர் புரிந்து கொள்வதில்லை” என்றது லட்சுமி எலி.

**508 தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை**
**தீரா இடும்பை தரும்.**

“ஆராயமல் ஒருவரையும் நம்பக் கூடாது. நம்பினால் அது அவனுக்கு மடடுமல்ல அவனது பரம்பரைக்கும் தீராத பல துன்பங்களைக் கொடுக்கும் என்பார்கள். நான் காண்டீபனை நன்கு ஆரயாமல் காதலித்ததால் தான் எனக்குப் பெரும் துன்பங்கள் வந்துள்ளன. இது எனது பரம்பரையில் இது வரை ஏற்படாத துன்பம் நமசிவாயகம் நல்லவர், பெரியவர், ஒழுக்கமானவர் என்று நம்பித்தான். அவரது சகதோரனின் மகளைக் காதலித்துத் திருமணம் செய்தேன். இப்போது எனது பரம்பரைக்கே இழுக்காகிவிட்டது. அதனால் நகுலனைப் பற்றி நன்கு

ஆராய்ந்து முடிவெடு'' என்று காண்டீபனின் மனைவி கார்த்திகா பவித்திராவுக்குச் சொன்வள்'' என்றது குமரன் எலி.

''இப்ப பெரிய கல்வியாளர்களின் பிள்ளைகள் வாளோடு திரியுது, கஞ்சாகுடிக்குது. கண்டீபன் இப்படி மாறுவான் என்று யார் கண்டது?'' என்றது லட்சுமி எலி.

**509 தேறற்க யாரையும் தேராது தேர்ந்த பின்**
**தேறுக தேறும் பொருள்**

''பவித்திரா, யாராக இருந்தாலும் நன்றாக ஆராய்ந்த பின்பே முடிவெடுக்க வேண்டும். பெற்றோர் பேசும் திருமணத்தில் இருபக்கத்தினரும் நன்கு ஆராய்வார்கள். அறிந்தவர்கள், தெரிந்தவர்கள், பெரியோர்களைக் கேட்பார்கள். நாங்கள் இளைமையையும் கவர்ச்சியையும் கண்டு மயங்குவோம். காண்டீபன் மிகமிக நல்லவன் போல வாழ்ந்து காட்டி ஏமற்றிவிட்டான். அவனுக்குப் படிக்கும் போதே தீயவர்களின் நட்பு இருந்தது. அதை நமசிவாயகம் பல முறை கண்டித்துள்ளார். நன்கு ஆராய்ந்து முடிவெடுத்த பின்னே நான் காதலித்திருக்க வேண்டும். என்று காண்டீபனின் மனைவி கார்த்திகா அழுதழுது சொல்வதைப் பார்க்க பாவமாக இருந்தது'' எனறது குமரன் எலி.

''எத்தனையோ பேர் சொல்லியும் கேளாது. ஒற்றைக் காலில் நின்று அவனைச் செய்தவள். இப்பதான் விளங்குது'' என்றது லட்சுமி எலி.

**510 தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**
**தீரா இடும்பை தரும்.**

''கார்த்திகா நீ சொல்வது போல ஒருவனை ஆராயாது நம்புவதும் நம்பியவனைச் சந்தேகம் கொள்வதும் கூடாது. அவை இரண்டும் நீங்காத துன்பங்களைத் தரும். நான் நன்கு ஆராய்ந்து பின்பு தான் நகுலனை விரும்பினேன். பண்டிதர் வீரகத்தி நகுலனில் நல்ல அபிப்ராயம் உள்ளவர். அவரைப்பற்றி நன்றாகச் சென்னார். இப்போ சிலர் நகுலனைப் பற்றி கூடாமல் சொல்கின்றனர். இனி நம்பியவரைச் சந்தேகத்தால் பெரும் துன்பங்கள் தான் வரும் அதனால் இனி அதைப்பற்றிக் கதைக்க வேண்டாம். என்று பவித்திரா சொன்னவள்'' என்றது குமரன் எலி

''குறைகள் இல்லாத மனிதர்கள் யார் இங்கிருக்கிறார்கள்? பெருங் குறைகள் இல்லாவிட்டால் சரி'' என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 52 தெரிந்து வினையாடல்**

**511 நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும்.**

''காரத்திகா, பண்டிதர் வீட்டுக்கு வரும் போதெல்லாம் நகுலனைப் பற்றி அப்பாவுக்கு கூறுவார். நன்மையையும் தீமையையும் ஆராய்ந்து நன்மை தருபவற்றை மட்டும் விரும்புகின்றவன்

நகுலன். தவரத்தினம் மிகவும் நேர்மையனவர். அதையே சொல்லிச் சொல்லி நகுலனை வளர்த்தார். தவரத்தினம் ஒரு முறை வெளியூருக்குச் சென்று விட்டார். கடன் கொடுக்க வேண்டிய ஒரு வியாபாரி கடனாகப் பெற்ற பணத்தை நகுலனிடம் கொடுத்து விட்டுச் சென்றார். எண்ணிப் பார்த்த பொழுது மூன்று இட்சம் ரூபா அதிகமாக இருந்தது. அதை நகுலக் திருப்பிக் கொடுத்த போது அந்த வியபாரி சொன்னான், ''ஏற்கனவே நான் கொடுக்க வேண்டிய பணம். சென்ற வருடம் எழுதப்பட்ட கொப்பியை எடுத்துப்பார்'' என்று முதல் வருடம வாங்கிய கடன் அது வென்றாலும் அதைத் திருப்பிக் கொடுக்க யாருக்கு மனம் வரும். இன்னொருமுறை சோளத்தின் விலை அன்று திடீரென அதிகரித்துவிட்டது. இருந்தும் நகுலன் அன்று முழுவதும் பழைய விலைக்கே விற்றான். தகப்பன் வந்து அவனைப் பாராட்டியதாகப் பண்டிதர் சொன்னவர். இதைவிட ஆராய என்ன இருக்கிறது. என்று பவித்திரா கார்த்திகாவைக் கேட்டவள்'' என்றது குமரன் எலி.

''இப்படித் தான் முன்பு காண்டீபனும் இருந்தவன்.'' என்றது லட்சுமி எலி.

**512. வாரி பெருக்கி வளம்படுத்த உற்றவை**
**ஆராய்வான் செய்க வினை.**

''கார்த்திகா, நகுலன் வியாபாரத்தில்புலி. பொருள் வரும் வழிகளைக் கண்டு பிடிப்பதில் வல்லவனாம். வியாபாரத் தந்திரங்களை அறிந்தவனாம். அவன் கைராசிக்காரன். அவனைக் கொண்டு தான் நான் புதுவியாபாரத்தைத் தொடங்குவேன். அவன் கைவைத்த எந்தத்துறையும் நட்டத்தைத் தந்ததில்லை. சென்ற வருடம் நெல் அமோக விளைச்சல். அதனால் மலிவானவிலைக்குப் பத்தாயிரம் புசல் நெல் கொள்வனவு செய்தான். எனக்கு அது விருப்பமில்லை. இருப்பினும் அவனது திறமையை நம்பி அவனிற்கு நான் எதையும் சொல்லவில்லை. அம் முறை அயலூரில் விளைச்சல் மிகமிகக் குறைவு. அதனால் அவ்வூர் வியாபாரிகள் போட்டி போட்டு நெல்லை வாங்கினார். அதனால் பல லட்சம்ரூபா லாபம் ஏற்பட்டது'' என்று தகப்பன் பண்டிதருக்குச் சொன்னவராம்''. என்று பவித்திரா கார்த்திகாவிற்குச் சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''இங்குபலர் அரச உத்தியோத்தரைத்தான் விரும்புறவை ஆனால் பெட்டிக்கடை வைத்திருப்பவன் அரச ஊழியர்களைவிட வசதியாக வாழ்கிறான்'' என்றது லட்சுமி எலி.

**513. அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்**
**நன்குடையான் கட்டே தெளிவு**

''நகுலன் அறிவுள்ளவர். வியாபாரத்தில் மட்டுமல்லாது கல்வியிலும் சூரர். ஆசையில்லாதவர். ஏழைகளுக்கு இரங்குபவர். எதையும் சந்தேப்படாது ஆற அமர இருந்து சிந்தித்து முடிவெடுக்கக் கூடியவர். என்னில் மட்டுமல்ல குடும்பத்தின் மீதும் அன்பு கொண்டவர். நடுவுநிலை தவறாதவர். பொருட்களின் விலை திடீரென்று கூடினாலும் கூட்டிவிற்க மாட்டார். அப்பா அரச ஊழியர் ஒருவரையே விரும்புகிறார். அது தான் எனக்குக் கவலை''. என்று பவித்திரா கார்த்திகாவிற்குக் கூறினவள்'' என்றது குமரன் எலி.

“இங்கு வியாபாரிகள் தானே தமது பெண்பிள்ளைகளுக்குப் பெரிய பெரிய உத்தியோகத்தர்களைக் காசு கொடுத்து வாங்குகிறார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**514. எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்**
**வேறாகும் மாந்தர் பலர்.**

‘‘பவித்திரா, எதைத்தான் நீ சொன்னாலும் செயலைச் செய்யும் போது வேறுபடும் மனிதர்கள் பலர் இருக்கின்றனர். காண்டீபன் மிகவும் நேர்மையானவனாக இருந்தான். சிவராசா நேர்மையாக வாழ்ந்தவன்.. திடீரென்று பணக்கஸ்ரம் ஏற்பட்டதும் ஆளே மாறிவிட்டான். கடனைக் கொடுப்பதில்லை. கேட்டால் தரும் போது வாங்கிக்கொள் என்கிறான். பாடசாலை அதிபர் நேர்மையானவர் என்பார்கள். அனுமதிக்கு அதிபரின் மனைவி காசு வாங்குவதாகக் கதைக்கிறார்கள்’’ என்று கார்த்திகா சொன்னாள்’’ என்றது குமரன் எலி.
“ஒரு ஆசிரியர் பொறியியலாளரைத் தனது மகளுக்குத் திருமணம் செய்து வைப்பதானால் காசு வாங்காமல் செய்ய முடியுமே?’’ என்றது லட்சுமி எலி.

**515 அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்**
**சிறந்தான் என்று ஏவற்பாற் றன்று.**

‘‘கார்த்திகா, யாரோ ஒருவர் செய்கிறார் என்பதற்காக எல்லோரையும் அப்படி நினைக்கக்கூடாது. செய்யும் வழிகளை நல்ல படி அறிந்து செய்யும்போது வரும் இடையூறுகளை விலக்கிச் செயலை முடிப்பவனை விட்டுவிட்டு இன்னொருவனைச் செயலிலீடுபடுத்தக் கூடாது. நம்பியவனை நல்லபடிவாழ உதவி செய்யவேண்டுமே தவிர இன்னொருவனைத் திருமணம் செய்தலாகாது. அதனால் செயலும் முடியாது. துன்பங்கள் தான் மிகும். நீ சென்று காண்டீபனுக்கு அறிவுரை சொல்லித் திருந்து’’ என்று பவித்திரா சொன்னவள்’’ என்றது குமரன் எலி.
‘‘பாதிக்கப்பட்டவை தமது அனுபவத்தைச் சொல்லத்தான் செய்வினை. எல்லோரும் நம்பிக்கையில்லாதவர்கள் என்று கார்த்திகா நினைக்கிறாள். அது அவளது தவறல்ல அனுபவம்’’ என்றது லட்சுமி எலி.

**516. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தொடு**
**எய்த உணர்ந்து செயல்.**

‘‘ஒரு செயலைச் செய்கின்றவனது திறமையை ஆராய்ந்து, அவன் செய்ய வேண்டிய வேலையினை ஆராய்ந்த பின்பே முடிவெடுத்தல் வேண்டும். பண்டிதர் இவற்றையெல்லாம் மிக நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார். அதனால் தான் நகுலனைன அவள் செயல்வீரன்

என்கிறார். அவரது சொற்கள் தான் வென் மீது காதலை உண்டாக்கியது. அது சிலசமயம் பொய்த்தால் அது வினைப் பயனே.
தவிர நகுலனின் மாற்றமல்ல என்று பவித்திரா கார்த்திகாவிற்குக் கூறியவள்'' என்றது குமரன் எலி.

''உங்கை எல்லாவற்றையையும் நுணுக்கமாக ஆராயுரவை தங்கை பெண் பிள்ளைகளுக்கு கலியாணம் செய்யாது வைத்திருக்கினை'' என்றது லட்சுமி எலி.

**517.இதனை இதனான் இவன் முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்.**

''இந்தச் செயலை பொருத்தமான முறையால் இவன் செய்து முடிப்பான் என்று தெரிந்த பின்பு தான் செயலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும். என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதன் படி தான் பண்டிதர் நகுலன் மீது அளவற்ற நம்பிக்கை வைதிருக்கிறார். ஒரு நாள் அப்பாவுக்குச் சொன்னார்; நகுலன் மிகவும் திறமைசாலி. எவ்வாறான செயலையும் தகுந்த முறைப் படி செய்து முடிப்பதில் வல்லவன். அவனைத் திருமணம் செய்யும் வைத்தவள். என்றவர் இதற்கு மேல் ஆராயா முடியுமா?''என்று பவித்திரா கார்த்திகவைக் கேட்டவள்.''என்றது குமரன் எலி
''எல்லாவற்றையும் ஆராய்ந்து குறை கண்டுபிடிப்பவர்கள் வாழமாட்டாரகள். சில வேளை கார்த்திகாவால் தான் காண்டீபன் கெட்டுப் போனானோ?'' என்றது லட்சுமி எலி.

**518. வினைக்குரிமை நாடிய பின்றை அவனை**
**அதற்குரியன் ஆகச் செயல்.**

'' இந்தச் செயலை முடிக்க இவன் தான் தகுதியானவன் என்று தெரிந்த பின்பு தான் அறிவுடையவர்கள் செயலை ஒப்படைப்பார்கள். இவன் தான் என்னைத் திருமணம் செய்யத் தகுதியானவன். என்று தெரிந்த பின்பு தான் நான் என்னை நகுலனிடம் ஒப்படைத்தேன். இதை நான் உயிர் போனாலும் மாற்றமாட்டேன். எனது மனம் உறுதியாக நம்பி விட்டது. என்று பவித்திரா கார்த்திகாவிற்கு கூறியவள்'' என்றது குமரன் எலி.
''கடுங்கூர், மபூமட்டை என்பது போல் ஆராய்ச்சிகளை அளவோடை நிறுத்திக் கொள்ள வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**519. வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக**
**நினைப்பானை நீங்கும் திரு.**
''முயற்சியுள்ளவனின் செயல்களைத் தவறாக நினைப்பவர்களை விட்டுச் செல்வம் நீங்கிச் சென்று விடும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். நகுலன் கடும் உழைப்பாளி. முயற்சி உடையவர் அவரைத் தவறாக நினைக்க கூடாது. நினைத்தால் எனக்குத் தான் துன்பம். நாம்

பண்டிதரின் வீட்டில் தான் யாரும் காணதபடி சந்திப்போம். இன்று வருவேன் என்று சொல்வார் வரமாட்டார். இப்படி பல தடவைகள் ஏமந்துள்ளேன். எனக்கு கோபம் வரும். அவர் வருவதாகச் சொன்ன நேரத்தில் அவர் வியாபார விடயமாக அயலூர் சென்றிருப்பார். என்று பவித்திரா கார்த்திகாவிற்குச் சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''காதல் என்று பெண்ணுடன் மோகத்துள் இருந்தால் தொழில் அழிந்து விடும் என்று நகுலனுக்குத் தெரியும்'' என்றது லட்சுமி எலி.

**520. நாடேறும் நாடுக மன்னன் வினைசெய்வான்**
**கோடாமை கோடாது உலகு.**

''தொழில் செய்பவன் மனங்கோணமல் தொழில் செய்யும் சூழ் நிலையைத் தொழில் கொடுப்பவன் ஏற்படுத்திக் கொடுத்து அவனது நலத்தைப் பேண வேண்டும். அது போலக் காதலன் மனங்கோணமல் மகிழ்ச்சியுடன் வாழ நாம் உதவி செய்தல் வேண்டும். இதைத்தான் புரிந்து கொள்ளல் என்பது. நீ காண்டீபனைப் புரிந்து கொள்ளவில்லை. அது போல காண்டீபன் உன்னைப் புரிந்து கொள்ளவில்லை. மனம் விட்டுப் பேசிப் புரிந்து கொண்டால் தான் வாழ்வு சிறக்கும்.'' என்று பவித்திரா கார்த்திகாவுக்குச் சொன்னவள்''என்றது குமரன் எலி.

''ஒன்றைப் புரிய இன்னொன்று வரும். அதைப்புரிய வேறொன்றுவரும். புரிந்து கொள்வதை விட்டு விட்டு நம்பிக்கையும் அன்பும் கொள்ளல் வேண்டும்'' என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 53 சுற்றம் தழால்**

**521. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்**
**சுற்றத்தார் கண்ணே உள**

''பவித்திராவின் தந்தை அருளானந்தன் பண்டிதரின் உறவினன். பண்டிதர் வீரகத்தி அருளானந்தனுடன் கற்றவர். அதனால் அடிக்கடி அவரின் வீட்டுக்குச் செல்வார். சென்றால் இருவரும் பொழுது போவதே தெரியாமல் கதைப்பார்கள். பண்டிதருக்கு ஐந்து பெண்பிள்ளைகள். அனைவரும் திருமணமானவர்கள். வசதிகள் குறைந்தவர்கள். கணவன்மார் கூலிகளாகவும், விவசாயிகளாகவும் இருப்பவர்கள். பண்டிதர் ஏழையென்று அருளானந்தம் மதிக்காமல் விடுவதில்லை. பண்டிதர் நேர்மையானவர். கற்றவர் அதனால் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொள்வார். அன்று அருளானந்தன் பண்டிதரின் வீட்டுக்குமிகுந்த துயரத்துடன் வந்து வெகுநேரம் பேசாது அமர்ந்திருந்தார்;, ''என்னடா அருள் என்ன பிரச்சினை''? என்று பண்டிதர் கேட்டதும் அருளானந்தன் சொன்னார்; ''நீ என்னுடைய நண்பன். இரத்த உருத்தினன். என்னுடைய மனம் உன்னுடன் கதைத்தால் தான் அமைதி பெறும்.. சில தினங்களுக்கு முன் எனது மகளைப் பெண் பார்த்தவர்கள்.. அவர்களுக்குப் பெண்ணைப் பிடித்து விட்டது. மாப்பிளையின் தாய் தனது இளைய மகளுக்கு இருபத்தைந்து இலட்சம் தரட்டாம். அத்துடன் வீடு, நகை, காசு, என்று எனது தகுதியை

மீறிக் கேட்கிறார்கள். இப்படிப் பல திருமணங்கள் பேசி வந்து குழம்புகின்றன'' என்று சொல்லி அருளானந்தன் அழுதவர்'' என்றது குமரன் எலி.

''அருளானந்தன் நல்ல மனிசன். பண்டிதர் ஏழை. இருப்பினும் அவரை மதித்து அவரது ஆலோசனைகளைத் தானே கேட்கிறார்'' என்றது லட்சுமி எலி.

**522. விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா**
**ஆக்கம் பலவும் தரும்.**

''வீரகத்தி உன்னைத் தவிர வேறு யார் எனக்கு இருக்கிறார்கள். நீஎனது உறவினன். என்னில் அக்கறை உள்ளவன்; அன்புள்ளவன். உனது வார்த்தைகள் நான் துன்பப்படும் போது ஆறுதலைத்தரும். இப்போ நான் பெருந்துன்பப்படுகிறேன். நிம்மதி இழந்து தவிக்கிறேன். எனது மகளுக்குப் பல திருமணங்கள் பேசிப்பேசிக் குழம்புகிறது. நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல்'' என்று அழுவார். அதற்கு பண்டிதர் சொன்னார், ''எல்லாவற்றிற்கும் காலம் கை கூட வேண்டும். உனது மகளுக்கென்று யாரோ ஒருவன் படைக்கப்பட்டிருப்பான் கலங்காதே'' என்று பண்டிதர் அருளானந்தனுக்குக் கூறியவர்'' என்று கூறியது குமரன் எலி.

''பெண்ணைப் பெற்றவர்களைச் சித்திரவதைப்படுத்துவதில் தமிழர்கள் கைதேர்ந்தவர்கள். இரக்கமில்லாதபாவிகள்'' என்றது லட்சுமி எலி.

**523. அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்**
**கோடுஇன்றி நீர்நிறைந் தற்று.**

''பண்டிதா, சுற்றத்தவருடன் மகிழ்வாக உறவாடதவாடாதவனின் வாழ்க்கை கரைக்கட்டு இல்லாத குளம் நிரம்பியது போன்றது என்பார்கள். நான் காவல் துறை அதிகாரியாக இருந்தமையால் சுற்றத்தவர்களுடன் பழக முடியவில்லை. மீறிப் பழகினால் எனது திணைக்களமே சந்தேகம் கொள்ளும். அதனால் தான் கலகலப்பாகப் பிறருடன் பழகுவதில்லை. நான் கரைக்கட்டு இல்லாத குளத்தைப்போன்றவன். அதனால் நீ தான் எனக்கு உதவி செய்தல் வேண்டும். எனது மகளுக்கு நல்லதொரு மாப்பிளை பார். என்று அருளானந்தன் அழுதவர்'' என்றது குமரன் எலி.

''பெண் படித்தாலென்ன, அழகியாக இருந்தாலென்ன, காதலித்தாலென்ன இறுதியில் கரைசேரப் பணம் தானே தேவைப்படுகிறது'' என்று கவலைப்பட்டது லட்சுமி எலி.

**524. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்**
**பெற்றத்தாற் பெற்ற பயன்.**

''ஒருவன் சுற்றத்தார் சுற்றி இருக்கும்படி வாழ்வது அவன் செல்வத்தைப் பெற்றதனால் அடைந்த பயன் என்பார்கள். எனது தொழில் சுற்றத்தாரைச் சுற்றியிருக்க விடவில்லை. எனது இனத்தவர்களிடம் பொருத்தமான மாப்பிளைகள் இருக்கிறார்கள். நான் அவர்களோடு சேராமல் வாழ்ந்து விட்டு இப்போ எப்படி அவர்களிடம் சென்று மாப்பிளை கேட்பது.

அதை நினைக்க வெக்கமாகவும் அவமானமாகவும் இருக்கு'' என்று அருளானந்தன் பண்டிதருக்குச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''வெக்க துக்கத்தைப் பார்த்தால் வாழ முடியுமே. உங்கை பெரும்பிரச்சினைப்பட்ட பலர் தேவைக்குச் சேர்ந்திருக்கினை. மனிதர்கள் தேவைக் கேற்ப மாறுவார்கள்'' என்றது லட்சுமி எலி.

**525. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய**
**சுற்றத்தான் சுற்றப் படும்.**

''சுற்றத்தவருக்கு உதவிகள் செய்தும் இனிமையாக உறவாடியும் வாழ்பவர்களைச் சுற்றத்தவர் எப்போதும் சூழ்ந்திருப்பர் என்பது எனக்குத் தெரியும். இந்தத் தொழிலால் இனத்தவர்கள் பலருடன் முரண்பட்டு விட்டேன். காணிப்பிரச்சினை, கிணற்றுப்பிரச்சினை பணப்பிரச்சினை, எல்லைப்பிரச்சினை என்று வந்தால் உறவினர், சுற்றத்தவர் என்று பார்க்க முடியுமா..? சட்டத்தைத் தவறாகப் பிரயோகிக்க முடியுமா..? அதனால் பலபிரச்சினைகள்'' என்று கவலைப்பட்டவர்'' என்றது குமரன் எலி.

''இதுகளையெல்லாம் யார் விளங்கிக் கொள்ளப்போகிறார்ள். தாம் நினைத்தது தான் நீதி என்பது மனிதரது வாதம்'' என்றது லட்சுமி எலி.

**526. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்**
**மருங்குடையார் மாநிலத்து இல்.**

''ஒருவன் தான தர்மங்களைச் செய்பவனாகவும் கோபம் என்பது இல்லாதவனாகவும் வாழ்ந்தால் அவனைச் சுற்றத்தவர்கள் போற்றி மகிழ்வார்கள். ஆனால் எனது தொழிலால் நான் மிகவும் கஷ்ட்டப்பட்டு விட்டேன்.. நான் தான தர்மம் செய்தால், மக்கள் நான் லஞ்சம் வாங்கியபணத்தைப் பாவம் தீரக் கொடுக்கிறேன் என்கிறார்கள். சிரித்துக் கதைத்தால் எதிரிகள் நான் விரும்பியவர்களுக்கு உதவி செய்கிறேன் என்கிறார்கள். இதிலிருந்து என்னைக் காப்பாற்று'' என்று அருளானந்தன் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''அவர் சொன்னது உண்மை. காவல்துறையினர் சிரித்துக்கதைத்தால் மனிதர்கள் அவரை பைத்தியக்காரனாக்கி விடுவார்கள்'' என்றது லட்சுமி எலி.

**527. காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்னநீ ரார்க்கே உள.**

''காக்கை தனக்குக் கிடைத்ததை மறைக்காது தன் இனத்தைக் கூவி அழைத்து சேர்ந்து உண்ணுமாம். அத்தகைய குணமுள்ளவர்களுக்குச் சுற்றத்தாரால் ஆக்கம் உண்டாகும் என்பர். எனக்குச் சேர்ந்து உண்ண விருப்பமிருந்தாலும் தொழில் அதைத் தடை செய்ததால் தொண்டு நிறுவனங்கள் மூலம் உதவிகள் செய்வேன். எனது சுற்றம் நீங்கள் தான். அதனால்

உங்களால் தான் எனது மகளுக்கு உதவ முடியும். தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள். நீங்கள் காக்கை போல வாழ்வதால் சுற்றம் அதிகம்'' என்றார் அருளானந்தம்'' என்றது குமரன் எலி.

''இப்போ காக்கைகளும் மனிதனோடு வாழ்ந்து அவர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகின்றன. இரையைக் கண்டால் காக்கைகள் சண்டை பிடிக்கின்றன'' என்றது லட்சுமி எலி.

**528. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்**
**அதுநோக்கி வாழ்வார் பலர்.**

''ஒருவன் எல்லோரையும் பொதுவாக ஒரே மாதிரிப்பாராமல், அவரவரது தகுதியறிந்து பழகிவந்தால், அந்தச்சிறப்பால் அவனைச் சுற்றமாகக் கொண்டு வாழ்வோர் பலர் என்று கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் என்னைப் பொறுத்தவரை எல்லோரையும் ஒரே மாதிரியாகத் தான் பார்ப்பேன். கற்றவர்கள் நல்லவர்கள் கூடக் குற்றம் செய்கின்றனர். முன்பு அதிபர் என்றால் மதிப்புக்குரியவர். இன்று அப்படியில்லையே. நவீனகருவிகள் எல்லோரையும் மாற்றிவிட்டன. யாரையும் நம்பமுடியவில்லை என்று பண்டிதருக்கு அருளானந்தம் கூறினார்'' என்றது குமரன் எலி.

''அருளானந்தம் சொல்வதில் உண்மையில்லாமல் இல்லை. பெரியவர்கள் தமது பிள்ளைகளின் குற்றச்செயல்களைக் கண்டிக்காது மூடி மறைக்கின்றனர்'' என்றது லட்சுமி எலி.

**529. தமராகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்**
**காரணம் இன்றி வரும்.**

''நல்ல உறவினர்கள் ஏதோ ஒரு காரணத்தால் பிரிந்து சென்றாலும் பிரிவுக்கான காரணம் நீங்கிய பின்சேர்ந்து கொள்வர். உங்களுக்கும் எனக்கும் இடையில் எவ்வளவோ பிரச்சினைகள் வந்துள்ளன. ஒருமுறை தவரத்தினம் உணவு வகைகளைப் பதுக்கி வைத்திருக்கிறார் எனச் சந்தேகப்பட்டு அவரது வியாபார நிலையத்தை மூடினேன். அது தவறு என்று சொல்லி நீங்கள் ஆறுமாத காலமாக என்னோடு தொடர்பில்லாமல் இருந்தீர்கள்.. அதன் பின் தான் எனக்கு அது தவறு என்று தெரிந்தது. அதனால் உங்களிடம் வந்தேன். நீங்கள் மகிழ்வுடன் எனது உறவை ஏற்றீர்கள் என்று அருளானந்தம் பண்டிதருக்கு கூறினார்'' என்றது குமரன் எலி.

''நல்ல மனிதருக்கு விளங்கும். சிலர் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்பர்'' என்றது லட்சுமி எலி.

**530. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்**
**இழைத்திருந்து எண்ணிக் கொளல்.**

''அருள் நான் பல முறை சொல்லியும் நீ கேட்க மறுத்தாய். சொல்லிப் பிரயோசனம் இல்லை. தானக உணர்ந்த பின் வருவாய் என்று நினைத்தேன். அதன்படி உணர்ந்து வந்தாய்.

இருப்பினும் நான் உத்தமன் உன்மையானவன், பொய் பேசாதவன் என்று தெரிந்தும் நீ என்னை நம்பாது அவமதித்தான். அதனால் இப்போதும் உன்னில் எனக்கு நம்பிக்கை இல்லை. உறவினன், நண்பன் என்ற வகையில் உன்னோடு உறவாடுகின்றேன். என்று பணடிதர் கூறினார்'' என்றது குமரன் எலி.

என்ன தான் இரத்த உறவாக இருந்தாலும் உற்ற நண்பனாக இருந்தாலும் தொழிலின் குணம் ஒருவரை விட்டுப் போகாது'' என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 54 பொச்சாவாமை**

**531. இறந்த வெகுளியின் தீதே சிறந்த**
**உவகை மகிழ்ச்சியின் சோர்வு**

பண்டிதர் சொன்னதைக் கேடடு அருளானந்தம் அதிர்ச்சியடைந்து போனார். ''அருள், உனது மகளை எனது மகளாக நினைத்திருக்கிறேன். நீ எனது உறவினன், நண்பன் அதனால் உனது மகளுக்கு நகுலனைத் திருமணம் செய்ய விருப்பமா என்று கேட்ட போது அதிர்ச்சியடைந்த அருளானந்தன் சொன்னார்; ''நகுலனைப் பற்றி நீ அடிக்கடி புகழ்ந்து சொல்வாய். அப்போதே நான் அவனைக் கேட்கலாம் என நினைப்பேன். எனக்குப் பூரண சம்மதம்'' என்று கூறிவிட்டுச் சென்ற அருளானந்தன் பெருமகிழ்ச்சிகாரணமாக அன்று நடைபெற்ற முக்கியமான கருத்தரங்கில் கலந்து கொள்ளாமையால் மேலதிகாரியிடம் ஏச்சுவாங்கினராம். கடும் மகிழ்ச்சிகாரணமாகக் கடமையை மறப்பது ஒருவனுக்கு அளவு கடந்த கோபம் வருவதை விட தீமையானது. இனி இப்படி நடக்கக் கூடாது என்று எச்சரித்தவராம்'' என்றது குமரன் எலி.

''பல வருடங்களாகப் பலரைப்பேசியும் குழம்பிய திருமணம் திடீரென்று நிட்சயிக்கப்பட்டால் அளவு கடந்த மகிழ்ச்சி உண்டாகத் தான் செய்யும்'' என்றது லட்சுமி எலி.

**532. பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை**
**நிச்ச நிரப்புக்கொன் றாங்கு**

''பண்டிதரது வறுமை அவரை விட்டுச் செல்வதாக இல்லை. பண்டிதரின் இளையபுதல்விக்குத் திருமணம் குழம்பிக் கொண்டிருந்தது. அவரிடம் பணம் இல்லை. காணி பூமியும் இல்லை. பேசிவரும் திருமணங்கள் யாவும் இலட்சக்கணக்கில் பணமும் காணியும் வீடு வளவும் கேட்டால் அவர் எங்கே போவார். நேற்று அயலூரில் பண்டிதரைப் பேச அழைத்திருந்தனர். பண்டிதர் பணத்தைக் கடன் வாங்கச் சென்றதால் அவர் அதை மறந்து விட்டார். பேச்சுக்கு அழைத்தவர்கள் வந்து கண்டபடி பேசியதாக நமசிவாயகம் கோவிலடியில் சொன்னார். அவர் இப்போ அடிக்கடி மறந்துவிடுகிறாராம்'' என்றது குமரன் எலி.

''வறுமை மறதியை உண்டாக்கும். மறதி புகழை அழிக்கும்'' என்றது லட்சுமி எலி.

**533. பொச்சார்ப்பாக்கு இல்லை புகழ்மை அது உலகத்து**

**எப்பால்நூ லோர்க்கும் துணிவு.**

‘‘பண்டிதர் கற்றவர். உலக நடப்பை அறிந்தவர். கஷ்டம் காரணமாக இப்போ முக்கிய விஷயங்களையெல்லாம் மறந்து விடுகிறார். மறதி காரணமாக அவர்பேசும் போது தடுமாறுகிறார். சில தினங்களுக்கு முன்பு கந்தபுராணத் தொடர் சொற்பொழிவுக்காக அயலூருக்குச் சென்ற பண்டிதர் பெரியபுராணத்தைப் பற்றிப்பேச சபை குழம்பிவிட்டது.. சபைத்தலைவர் ஒருவாறு சமாளித்துக் கந்த புராணத்தைப் பற்றிப் பேசச் சொன்னார். எனினும் பண்டிதரது பேச்சு சபையைக் கவரவில்லை’’ என்று நமசிவாயகம் கவலைப்பட்டவர்’’ என்றது குமரன் எலி.

‘‘பாவம் பண்டிதர். உழைக்கத்தெரியாதவர். தற்போதய ஆசிரியர்கள் இரவு பகலாக ரியூசன் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால் பெறுபேறு மிகமிகமோசம். வருமானம் கூட’’ என்றது லட்சுமி எலி.

**534. அச்சம் உடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை**
**பொச்சாப்பு உடையார்க்கு நன்கு.**

காண்டீபன் இப்ப எதுக்கெடுத்தாலும் பயப்படுகிறானாம். வீட்டில் இருக்கும்போது தன்னை யாரோ தாக்க வருகிறார்கள் என்கிறானாம். வைத்தியர் மனநோய் என்கிறார். அதோடு தவரத்தினம் பெரிய பணக்காரர். இப்போ மறதி காரணமாக கொடுக்கல்வாங்கலில் பெரும்பிரச்சினைப் படுகிறாராம். வாடிக்கையாளன் ஒருவன் இரண்டு லட்ச ரூபா கொடுத்துள்ளான் . அதைப் பரியாது விட்டுவிட்டு மறுநாள் அவனைக் கேட்க அது பெரும்பிரச்சினையாகி விட்டது. பயம் உள்ளவன் பாது காப்பான கோட்டைக்குள் இருந்தாலும் தனது உயிருக்கு ஆபத்து எனப்பயப்படுவான். மறதியுள்ள தனவந்தன் மறதியால் பெருந்துன்பப்படுவான்’’ என்று நமசிவாயகம் சொன்னார். என்றது குமரன் எலி.

‘‘பயமும், மறதியும் ஒருவகை மன நோய் தான். தவரத்தினம் புத்திசாலித்தனமாக வியாபாரத்தை நகுலனிடம் ஒப்படைத்துவிட்டார்’’ என்றது லட்சுமி எலி.

**535. முன்உறக் காவாது இழுக்கியான் தன்பிழை**
**பின்ஊறு இரங்கி விடும்.**

‘‘துன்பம் வரப்போகிறது என்று முன்னரே அறிந்து காத்துக்கொள்ளாதவன், பின் துன்பம் வந்தபோது, தனது தவறை உணர்ந்து பெரிதும் வருந்துவான் என்பார்கள். தவரத்தினத்திற்கு வைத்தியர்கள் வியாபாரத்தை இனி உங்களால் கவனிக்க முடியாது. உங்களின் மகனிடம் ஒப்படைத்து விட்டுச்சில காலம் ஓய்வெடுங்கள். ஓய்வு உங்களை மாற்றும். வேலைப்பழுவும், வயதும் உங்களைத் தளர்வுறச் செய்து விட்டது’’ என்று கூறியும் கேளாமையால் பலபிரச்சினைகள். இப்போ நகுலனிடம் ஒப்படைத்த பிறகு தவரத்தினம் தேறி வருகிறார்’’ என்று நமசிவாயகம் கூறினார். என்றது குமரன் எலி.

‘‘ஒருவரும் தமது பலவீனத்தை ஏற்க மாட்டார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**536. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை**
**வாயின் அ.்.துஒப்பது இல்.**

‘‘தவரத்தினத்தைப்போல எனக்கும் மறதி என்ற சோர்வு வந்து விட்டது. நாளைக்கு எனது தந்தை இறந்ததினம். மடத்தில் அவரின் நினைவாக உணவு கொடுப்பேன். இன்று மறந்ததால் சமையல்காரன் சுப்பிரமணியம் வீட்டுக்கு வந்து சொன்னபின் தான் பொருட்கள் வாங்கப் பணம் கொடுத்தேன். மறதி என்ற சோர்வு ஒருவனுக்கு இல்லாதிருந்தால், அதற்கு ஒப்பான நன்மை எதுவும் இல்லை. கதிரேசன் எதையும் மறக்கமாட்டார். இன்று காலையில் என்னைச் சந்தித்து இன்று கோவிலில் காலைப்பூசையின் போது உனது தந்தையின் பெயரில் மோட்ச அர்ச்சனை செய்தேன் என்றவர்’’ என்று நமசிவாயகம் திருநாவுக்கரசுவிற்குச் சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

‘‘எந்தவிதமான பிரச்சினைகளுமின்றிக் குடும்பத்துடன் மிகவும் மகிழ்வுடன் வாழ்பவர் கதிரேசன். அருளானந்தம் தவரத்தின் நமசிவாயகத்திற்கு எத்தனை பிரச்சினைகள். தவரத்தினத்திற்கு நகுலனின் காதல் பிரச்சினை, அருளானந்தத்திற்கு மகளின் திருமணப்பிரச்சினை. நமசிவாயகத்திற்குக் காண்டீபனின் பிரச்சினை. எப்படி மறக்காமல் இருப்பினை’’ என்றது லட்சுமி எலி.

**537. அரியஎன்று ஆகாத இல்லை பொச்சாவாக்**
**கருவியான் போற்றிச் செயின்.**

‘‘முன்பு அருளானந்தம் எந்தக்குற்றவாளி எதைச் செய்தான் என்று சொல்வார். தவரத்தினம் கணக்கு வழக்கில் கம்பியூட்டர் என்று பெயரெடுத்தவர். நான் எதையும் எழுதி வைப்பதில்லை. மடத்தில் யார்யார் எப்போ உணவு கொடுப்பது. என்பதை ஒரு வாரத்திற்கு முன்பே கூறிவிடுவேன். இப்போ எனது தந்தையின் நினைவே எனக்கு வரவில்லை. மறவாமை என்ற கருவியைக் கொண்டு ஆராய்ந்து செயல்களைச் செய்பவனுக்கு முடியாத செயல் என்று எதுவும் இல்லை. பிரச்சினைகள் தான் மறதியை உண்டாக்குகின்றன’’ என்று நமசிவாயகம் திருநாவுக்கரசுக்குச் சொன்னவர். என்றது குமரன் எலி.

‘‘பிரச்சினைகள் யாருக்குத் தான் இல்லை. அதைத் தாங்கிற மனம் வேண்டும்’’ என்றது குமரன் எலி.

**538. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது**
**இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.**

‘‘நேற்றுச் சனசமூகநிலையக் கூட்டம் நடைபெற இருந்தது. கதிரேசனின் இனத்தவர் ஒருவர் அயலூரின் காலமானதால் கூட்டத்தை ஒத்திவைக்கச் சொன்னவர். கதிரேசனது இனத்தவர்களும் நண்பர்களும் மரணவீட்டுக்குச் சென்று விட்டனர். நான் அதைச்சொல்ல மறந்துபோனேன். ஆறேழு பேர் வந்து இரவுபத்து மணிவரை காத்திருந்தவையாம். பிறகு கதிரேசனின் வீட்டுக்குச் சென்று விசாரித்து இருக்கிறார்கள். அதைச் சொல்லிக் கதிரேசன் கவலைப்பட்டவர். அறிவுடையவர் கூறிய வார்த்தைகளை மறதியால் மறந்து

செயற்படாதவர்களுக்கு அவர்கள் எடுக்கும் ஏழு பிறவிகளிலும் நன்மை உண்டாகாது'' என்று திருநாவுக்கரசுவிற்கு நமசிவாயகம் சொல்லி கவலைப்பட்டவர்'' என்றது குமரன் எலி.

''நேற்றுக் காண்டீபன் நன்றாகக் குடித்து விட்டு வாகிகசாலை முன்றலில் நின்று சண்டை பிடித்தவனாம். அதனால் நமசிவாயகம் மறந்திருப்பார்'' என்றது லட்சுமி எலி.

**539. இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்**
**மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து**

''நமசிவாயகம் தில்லையம்பலம் ஆசிரியரின் மகளை வெளிநாட்டில் வேலைசெய்யும் வைத்தியர் ஒருவர் கண்டு காதலித்துத் திருமணம் செய்ய ஒப்புக்கொண்டார். தில்லையம்பலம் தனது சகோதரியின் மகனைத் தனது மகளுக்குத் திருமணம் செய்து தருமாறு பலமுறை கேட்டும் அவர்கள் சம்மதிக்கவில்லை. அவன் ஓர் ஆசிரியன். அதனால் தில்லையம்பலம் தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்று தனது மாப்பிளையைப் பற்றிப் பெருமையாகப் பேசினார். கர்வம் கொண்டு ஊரில் அவர்களைப் பற்றி இகழ்வாகப் பேசினார். அதனால் அவர் அன்று பாடசாலையில் நடைபெற்ற அரச பரீட்சையை மறந்து விட்டார். அதனால் பிள்ளைகள் பாதிக்கப்பட்டதாகப் பெற்றோர் முறையிட்டதால் அவரைப்பணி நீக்கம் செய்து விசாரித்து எச்சரித்த பின்பே வேலையைக் கொடுத்தனர். மகிழ்ச்சியான காலத்தில் கர்வம் கொண்டால் மறதியால் தீமைகள் உண்டாகும். அதை நினைத்துப் பார்த்தால் கர்வம் அடங்கும்'' என்று கதிரேசன் சொன்னததாக நமசிவாயகம் அடிக்கடி சொல்வார் என்று திருநாவுக்கரசு சொன்வர்'' என்றது குமரன் எலி.

''எதையும் சொல்லலாம். உபதேசங்கள், அறிவுரைகள், அந்த நேரம் உதவாது'' என்றது லட்சுமி எலி.

**540. உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றும்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்.**

''நமசிவாயகம், கதிரேசன் ஒரு தீர்க்கதரிசி. முப்பது வருடங்களுக்கு முன் அவர் சொன்னபடி நடந்ததால் தான் நான் வெளிநாடு சென்றேன். அவர் சொன்னது இப்போதும் எனது காதுகளில் ஒலிக்கிறது; ''திருநாவுக்கரசு நீ வெளிநாட்டிற்குச் செல்ல விரும்புகிறாய். நீ எண்ணியதைத் தினமும் எண்ணி எண்ணி விடாது முயற்சி செய்து வந்தாயானால் நீ எண்ணியது கைகூடும். எதையும் ஊக்கத்துடன் தொடர்ந்து முயற்சித்தால் அடையலாம்'' என்றவர். அதன்படி தான் நான் வெளிநாடு சென்றேன். அங்கே தொழில் செய்யும் போதும் அதையே பின்பற்றினேன். அதனால் வெற்றியடைந்தேன் என்று நமசிவாயகத்திற்குத் திருநாவுக்கரசு கூறியவர்'' என்றது குமரன் எலி.

''எறும்பூரக் கருங்கல்கூடத் தேயும் என்று பெரியவர்கள் அறியாமாலா சொன்னார்ககள்'' என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 58 கண்ணோட்டம்.**

**571. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை**
**உண்மையான் உண்டுஇவ் உலகு.**

''மார்கண்டு அயலூரில் கழிப்புக் கழிப்பதற்காகச் சென்றபோது முன்பு கழிப்புக்கழித்தவர்கள் நோய் தீரவில்லை என்று சொல்லி அடித்து விட்டார்கள். பலமான அடி. அதனால் எழுந்து நடக்கமுடியாது. தெருவில் நின்றிருக்கிறார். யாரோ வீட்டுக்குவந்து சொன்னபோது அவனது மனைவி சொன்னாளாம், ''எனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு நீங்கி ஐந்து வருடங்களாகிவிட்டது. உவரைக்கொண்டுவந்து பராமரிக்கமுடியாது'' என்றவளாம். சகோதரங்கள் இனத்தவர்கள் இவனைச் சென்று பார்த்தால் தமக்கு அவமானம்'' என்றார்களாம். திருநாவுக்கரசும் கதிரேசனும் தானாம் சென்று அவனை வைத்தியசாலையில் அனுமதித்தது'' இரக்கம் என்ற மனநிலைல இல்லாவிட்டால் உலகம் அழிந்தும் விடும். சிலருக்கு இரக்கம் பார்கக்கூடாது. என்றாலும் மனதில் அது தோன்றிவிடுகிறது'' என்று கதிரேசன் சொன்னவர் என்று நமசிவாயகம் நவராசாவுக்குச் சொன்னவள்'' என்றது குமரன் எலி.

''காசுபணம் இருந்தால் எந்தக் கெட்டவன் மீதும் இரக்கப்படப்பலர் இருப்பார்கள்'' என்றது லட்சுமி எலி.

**572. கண்ணோட்டத்து உள்ளது உலகியல் அ∴திலார்**
**உண்மை நிலக்குப் பொறை**

''இரக்கசுபாவம் உள்ளவர்கள் பூமியில் வாழ்வதினால் தான் உலகம் வாழ்கின்றது. இரக்கமில்லாதவர்கள் வாழ்வது பூமிக்கு சுமையே தவிர வேறு எதுவும் இல்லை. மார்க்கண்டுவின் மனைவியும் பிள்ளைகளும் பெருந்துன்பப்படுகின்றனர். நான் அவ்வப்போது உதவிகள் செய்வேன். பாவம் பிள்ளைகள். அவை என்ன செய்யும்? பிள்ளைகள் மீதே இரக்கப்படாத மார்க்கண்டனுக்கு எப்படி உதவி செய்வது என்று ஊரவர் கதைக்கின்றனர். ஓர் உயிர்மீது இரக்கப்படுபவன் கடவுள். கடவுளின் அனுக்கிரகம் கிடைக்கவேண்டுமானால் உயிர்கள் மீது இரக்கம் கொள்ள வேண்டும்''. என்று நமசிவாயகத்திற்குக் கதிரேசன் சொன்னவராம்'' என்றது குமரன் எலி.

''இரக்கப்படக்கூடாதவர் மீது இரக்கம் கொள்வதால் தான் உலகம் கெட்டுப் போகிறது என்ற கருத்தும் உண்டு . ஆனால் ஆபத்தில் இருப்பவருக்குக் கதிரேசனைப் போன்றவர்களை தான் உதவுவர்'' என்றது லட்சுமி எலி.

**573. பண்என்னாம் பாடற்கு இயைபுஇன்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்.**

''கதிரேசன் நமசிவாயகத்திற்குச் சொன்னார்; ''நமசிவாயகம் பாட்டோடு பொருந்தாத இசையை ரசிக்க முடியாது அதுபோல இரக்கமில்லாத கண்களால் பயனில்லை என்று

பெரியவர்கள் சொல்வார்கள். நான் மார்க்கண்டன் மீது இரக்கப்பட்டது பிழை என்று பலர் சொல்கின்றனர். ஓர் உயிர் சாவா வாழ்வா என்று போராடும் போது அதன் வாழ்க்கை முறைகளைப் பற்றி ஆராய முடியாது. என்னால் எப்படியானவர்களுக்கும் இரக்கப்படாமல் இருக்கமுடியாது'' என்று கதிரேசன் கூறியதைக் கேட்டேன்'' என்றது குமரன்எலி.

''வீதி விபத்துக்களில் சிக்கிச் சாகக்கிடபவர்களையும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல இப்போ மக்கள் விரும்புவதில்லை'' என்றது லட்சுமிஎலி.

**574. உளபோல் முகத்துஎவன் செய்யும் அளவினால்**
**கண்ணோட்டம் இல்லாத கண்**

''முகத்தில் கண்கள் உள்ளது பார்க்கமட்டுமல்ல. பார்க்கும் காட்சிகளை ஆய்வு செய்து இரக்கப்பட்டு உதவி செய்யவே கண்கள் உள்ளன. இன்பத்தையோ துன்பத்தையோ முதலில் கலங்கி வெளிக்காட்டுவது கண்கள். மனம் இரங்கினால் கண்கள் கலங்க வேண்டும். கலங்காத கண்கள் வைரமான நெஞ்சுக்குரியவை. யாரும் காப்பாற்றாது மார்க்கண்டன் இறந்திருந்தால் பின் குற்றங் கண்டு பிடிக்கப்பலர் வருவார்கள். முக்கியமாகக் குடும்பத்தினரும், இனத்தவரும் குறை கூறுவார்கள். சென்ற உயிரை மீட்கமுடியுமா…?'' என்று நமசிவாயகத்தைக் கதிரேசன் கேட்டவர்'' என்றது குமரன் எலி.

''சொல்லுவார் சொன்னால் கேட்போருக்கு மதி என்ன..?'' என்றது லட்சுமி எலி.

**575. கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அ்.துஇன்றேல்**
**புண்என்று உணரப் படும்.**

''கண்களுக்கு ஆபரணம் இரக்கமே ஆகும். இரக்கமில்லாத கண்கள் புண்ளுக்குச் சமமானவை. உனது அண்ணனின் மகன் காண்டீபன். தகாத செயல்கள் பலவற்றைச் செய்தும் நீ இரக்கப்படுகிறாய். ஏன் அவன் உனது உறவுக்காரன் எப்போதாவது திருந்துவான் என்ற நம்பிக்கையால். அது போலக் கெட்டவனான மார்க்கணடனும் திருந்தலாம். என்ற நல்லெண்ணத்துடன் தான் நான் உதவி செய்தேன். யாரும் கெட்டவர்களாகப் பிறப்பதில்லை. கெட்டவர்கள் எல்லோரும் வாழ்நாள் முழுவதும் கெட்டவர்களாக வாழ்வதில்லை'' என்று கதிரேசன் நமசீவாயகத்திற்குச் சொன்னவர். என்றது குமரன் எலி.

''ஓ, உலகத்தின் போக்கைக் கணிக்கமுடியாது. கெட்டவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்பியதும் அவர்கள் திருந்த, சமூகம் அவர்களைக் கண்ணியவான்களாக ஏற்கவில்லையா..?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**576. மண்ணொடு இயைந்த மரத்தனையர் கண்ணொடு**
**இயைந்துகண் ணோடா தவர்.**

''நமசிவாயகம், இரக்கம் கொள்ள வேண்டிய கண்கள் இருந்தும், இரக்கம் கொள்ளாதவர்கள் மண் மீது நிற்கின்ற மரத்திற்கு ஒப்பானவர்கள் என்று பெரியவர்கள் சொல்வார்கள். கெட்டவர்களாக இருந்தாலும் இரக்கம் கொள்ளல் வேண்டும். கெட்டவர்கள்

திருந்தி நல்லவர்களானால் அவர்களோடு பெரியவர்களோடு உறவு வைப்பர். அப்போது இரக்கப்படாதவர்களும் அவர்களது உதவியை நாடிப்போவார். இப்படியானவர்கள் மரத்திற்குச்சமமானவர்கள் என்று கதிரேசன் கூறினார்'' என்றது குமரன் எலி.

சிவகுருவை மச்சான் மார் மதிக்கிறேல்லை. ஒரு பெடியன் வெளிநாட்டுக்குச் சென்றதும் ஏனைய ஐந்து சகோதரங்களும் வெளிநாட்டுக்குச் சென்று விட்டனர். இப்ப மச்சான்மார் சிவகுருவோடு நல்ல முறையில் மதிப்புடன் உறவாடித்தம் பெண்பிள்ளைகளைக் கரை சேர்த்து விட்டார்கள். புத்திசாலிகள்'' என்றது லட்சுமி எலி.

**577. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்**
**கண்ணோட்டம் இன்மையும் இல்.**

''இரக்கமில்லாதவர்கள் கண்கள் இருந்தும் இல்லாதவர்கள். இரக்க முடையவர்கள் தான் கண்கள் உடையவர்கள்'' என்று குமரன் எலி கூறும் போது லட்சுமி குறுக்கிட்டுச் சொன்னது; கதிரேசன் சொன்னது உண்மை. சிவகுருவின் மைத்துனர்கள் இரக்கமில்லாதவர்கள். அதனால் குருடர்கள். அதனால் தான் ரோசம் மானம் இல்லாமல் சிவகுருவிடம் சென்று தமது பிள்ளைகளுக்கு மாப்பிள்ளை கேட்டவர்கள். சிவகுரு பல முறை கேலி செய்து விட்டுத் தனது பிள்ளைகளைச் செய்து கொடுத்தவர். மனிதனில் பெரும்பான்மையினர் கண்ணில்லாதவர்கள்'' என்றது லட்சுமி எலி.

**578. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு**
**உரிமை உடைத்திவ் வுலகு.**

''தமது செயலுக்குப் பாதிப்பு ஏற்படாது இரக்கம் கொள்பவர்ளுக்கே இவ் உலகம் உரித்துடையது. என்று பெரியவர்கள் சொல்வார்கள். தீயவர்களால் தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படாது என்று தெரிந்த பின்பு தான் இரக்கப்படல் வேண்டும். இதை நல்ல மனம் கொண்டவர்கள் உணர்வார்கள். என்று நமசிவாயகத்துக்கு கதிரேசன் கூறினார்'' என்றது குமரன் எலி.

''சிவகுரு தன்னை மதியாத மைத்துனர்களை மதிக்கப்பண்ணிய தோடு. முன்பு தனது மனைவிக்குத் தருவதாகச் சொன்ன காணிகளை யெல்லாம் வாங்கிக் கொண்டு தான் திருமணத்துக்குச் சம்மதித்தவன்'' என்றது லட்சுமி எலி.

**579. ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்**
**பொறுத்தாற்றும் பண்பே தலை.**

''செய்யக் கூடாத குற்றங்களைச் செய்தவர்களிடத்தும் இரக்கம் காட்டி அக் குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும். மார்கண்டனன் ஒரு குற்றமல்ல பல குற்றங்களைச்

செய்தவன். இருப்பினும் ஓர் உயிர் என்றமையால் உதவி செய்தேன். மகான் ஒருவர் தண்ணீரில் அடிபட்டு வந்த பாம்பைக் காப்பாற்ற முயன்ற போது அதுபல முறை கடித்தது. அதைப் பொருட்படுத்தாது அதைக் காப்பாற்றினார். கூட இருந்தவர்கள் அவரை முட்டாள் என்று ஏசிய போது அவர் சொன்னார்; "நண்பர்களே பாம்பின் இயல்பு அது. அதற்கு நல்லது கெட்டது தெரியாது. நான் அறிவுள்ள இரக்க முள்ள மனிதன். எனது இயல்பு இது" என்றவராம் இவையெல்லாம் படித்துச் சுவைப்பதற்கு எழுதப்பட்டவை அல்ல கைக்கொள்வதற்காக எழுதப்பட்டவை என்பதை இரக்கமுள்ள மனிதர் புரிந்து கொள்வார்கள். என்று நமசிவாயகத்துக்குக் கதிரேசன் சொன்னவர்" என்றது குமரன் எலி.

எல்லாரும் பரீட்சைக்காகத்தானே இப்ப படிக்கினை. அதுவும் விலத்தி விட்டுத் தானே படிக்கினை. உனக்கு உது விளங்காது" என்றது லட்சுமி எலி.

**580. பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்.**

"இயல்பாகவே இரக்கமான கண்களை உடையவர்கள், தமது நண்பர்கள் கண்ணெதிரே நஞ்சினைக் கலந்து கொடுத்தாலும் அதை வாங்கி உண்பார்கள் என்று பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அப்படி வாழ விட்டாலும் தனக்கெதிரே நஞ்சினை ஒத்த சொற்களைப் பேசியவர் மீதும் இரக்கம் கொள்ளாது விட்டால் அவர்கள் வாழ்வதால் பயனில்லை. மார்க்கண்டன் குடித்து விட்டுத் தெருக்களிலும் எனது வீட்டுக்கு வந்தும் என்னைக் கேவலமாகப் பேசியவன். அது உனக்குத் தெரியும் அவனையும் மன்னிக்க வேண்டும். ஏனென்றால் பலர் திரை மறைவில் தான் பேசுவார்கள். பின் தாம் பேசவில்லை என்று சத்தியம் செய்வார்கள்" என்று நமசிவாயகத்துக்குக் கதிரேசன் சொன்னவர்" என்றது குமரன் எலி.

"அப்படியானவர்கள் தான் வாழத் தெரிந்தவர்கள். இப்போ சிவகுருவின் மைத்துனர்கள் வெளிநாட்டுக்குச் செல்லப் போகிறார்களாம். ரோசம், மானம் பார்த்தால் போக முடியுமோ?"என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 60 ஊக்கம் உடைமை**

**591. உடையர் எனப்படுவது ஊக்கம் அ∴தில்லார்**
**உடையது உடையரோ மற்று.**

"நகுலா, உடையவர் என்று ஒருவரை நாம் சொல்வோமேயானால், அது ஊக்கம் உடையவரை மட்டுமே சொல்லலாம். அவரிடம் இருப்பதெல்லாம் அவரது ஊக்கத்தினராலேயே பெறப்பட்ட தாகும். ஊக்கமில்லாதவர் வேறெதைப் பெற்றிருந்தாலும் அவர் ஊக்கமுடையவராகார். உனது தந்தை மிக்க ஊக்கத்துடன் பொருள் தேடினார். அவருக்கு இயலாமை வந்தபோது வியாபாரரத்தை உன்னிடம் ஒப்படைத்தார். சிறிது காலத்தில் உனது ஊக்கமிகுதியால் இலாபம் முன்பைவிடப் பல மடங்கு பெருகிவிட்டதாய்

உனது தந்தை மகிழ்ச்சியடைகிறார். அதைக்கேட்க எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது'' என்று பண்டிதர் நகுலனைப் பாராட்டினார்''. என்றது குமரன் எலி.

''புலிக்குப் பிறந்தது பூனையாகுமா…? பொறுப்பைக்கொடுத்தால் தான் அருமை தெரியும்'' என்றது லட்சுமி எலி.

**592. உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**
**நில்லாது நீங்கி விடும்.**

''பெரும் வர்த்தகரான பொன்னுச் சாமி நோய்வாய்ப்பட்டபோது அவரது மகன் வியாபாரப் பொறுப்பை ஏற்றான். அவன் படுசோம்பேறி. ஊக்கமில்லாதவன். கற்றும் அறிவல்லாதவன். அதனால் அவனது வியாபாரம் நட்டமடைந்து தொழிலைக் கைவிட்டு விட்டு இப்போ கூலியாக வேறொரு வியாபார நிலையத்தில் வேலை செய்கிறான். அதனால் ஊக்கமுடைமையே நிலையான செல்வம் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். மற்றைய செல்வங்கள் அழியக்கூடியன. அழிந்தவற்றை ஊக்கமுடையவன் திரும்பப் பெற்று விடுவான்'' என்று பண்டிதர் நகுலனுக்குக் கூறினவர்'' என்றது குமரன் எலி.

''பொன்னுச்சாமியின் வர்த்தக நிறுவனம் நட்டமடைய நகுலனின் ஊக்கம்தான். காரணம்'' என்றது லட்சுமி எலி.

**593. ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்**
**ஒருவந்தம் கைத்துடை யார்.**

''மகனே, ஊக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்ட உனது தந்தையை அவரது உயிருக்குயிரான நண்பன் கெங்காதரன் ஏமாற்றிவிட்டான். அவர் தனது உயிர் நண்பன் என்று நம்பியதால் தான் அந்நிலை வந்தது. பெரும் நட்டத்தைத் தாங்கமுடியாத உனது தந்தை கவலைப்படவில்லை. கடன் கொடுத்தவர்கள் வந்து கொடுத்த கடனைக் கேட்டபோது சொன்னார்; ''நான் கூலியாக ஒரு வியாபார நிலையத்தில் வேலை செய்து தான் இந்த நிலையை அடைந்தேன். நான் நட்டமடையவில்லை. நம்பினவனால் ஏமாற்றப்பட்டேன்'' என்றவர் என்று பண்டிதர் நகுலனுக்குக் கூறினவர்'' என்றது குமரன் எலி.

''இந்தக் காலத்தில் யாரையும் நம்பக்கூடாது. உறவினர் நண்பர்கள் மனைவி பிள்ளைகள் உட்பட'' என்றது லட்சுமி எலி.

**594. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையான் உழை.**

''உனது தந்தை சோர்வில்லாத ஊக்கத்தை உடையவர் என்று தெரிந்த மொத்த வியாபாரியான முத்தையாச் செட்டியார் உனது தந்தையைத் தேடிவந்து தேவையான பொருட்களை எல்லாம் கொடுத்தார். ''தவரத்தினம் நீ அவனை அளவுக்கதிகமாக நம்பியதால் தான் இந்நிலை ஏற்பட்டது. பல இலட்சரூபாவுக்கான பொருட்களை உனக்குப் பொறுப்பில்லாமல் தரமுடியாது. பொருட்களின் மதிப்பீட்டை எழுதி ஒரு பத்திரம் தா. நீ

ஊக்கமானவர். ஒழுக்கமானவர். ஆனால் காலம் பகைத்தால் என்ன செய்வது?'' என்று கேட்க , உனது தந்தை பத்திரம் எழுதிக் கொடுத்தவர்'' என்று பண்டிதர் நகுலனுக்குச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''கவனமாக இருந்தால் வரவுள்ள அழிவைத் தடுக்கலாம்'' என்றது லட்சுமி எலி.

**595. வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத்து அனையது உயர்வு.**

''தண்ணீரில் மலர்கின்ற பூக்களின் தாளின் நீளம் தண்ணீரின் மட்டத்திற்கு இருக்கும். அதுபோல ஒருவனது ஊக்கம் எந்த அளவிற்கு இருக்கிறதோ அந்தளவிற்குப் பொருளும் சேரும். நீ ஊக்கம் மிக்கவன். ஆனால் வயது குறைந்தவன். நண்பர்களை அதிகம் சேர்க்காதே. எவரையும் நம்பாதே. அதற்காக நம்பிக்கையானவர்கள் இல்லை என்று நினைக்காதே. நம்பிக்கையானவர்களையும் கண்காணி. ஊக்கமாகப் பொருள்தேடுவதை விடக் கவனமாக அதைப் பாதுகாத்தல் வேண்டும்'' என்று பண்டிதர் நகுலனுக்குச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''ஊக்கமாகப் பொருள் தேடிக்கவனமாகச் செலவு செய்வதே சிறந்தது. பொருள் சேரப் பலர்சேர்வர்'' என்றது லட்சுமி எலி.

**596. உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றுஅது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து.**

''நகுலா, எப்பொழுதும் உயர்வாக எண்ணுதல் வேண்டும். எண்ணியவை எண்ணியபடி நடக்காவிட்டாலும், உயர்வாக எண்ணுவதை விட்டு விடக் கூடாது. நான் பண்டிதர். பல நூல்களை எழுதியுள்ளேன். அவையெல்லாம் மிகமிகச் சிறந்த நூல்களெனப் பாராட்டைப் பெற்ற போதும் அரச விருதுகள் எவையும் கிடைக்கவில்லை. அரசவிருதுகள் தான் உயர்வென்று எண்ணாது சிறந்த இலக்கியங்களைப் படைக்கவேண்டுமென்று எண்ணுவேன். இரண்டாயிரம் ஆண்களுக்கு முன் படைக்கப்பட்ட சிறந்த இலக்கியங்களை அரசர்கள் பாராட்டிப் பொற்கிழி அளிக்கவில்லை. ஆனால் அவை இன்றும் நிலைத்திருந்து எழுதியவரின் புகழைச் சொல்கின்றன. அரசரால் பாராட்டப்பட்டு பொற்கிழி வழங்கப்பட்ட இலக்கியங்கள் எதுவும் இன்று வழக்கில் இல்லை. எனது இலக்கியங்கள் சாகாவரம் பெற்றவை. விருதகள் பரிசுகள் கிடைக்காவிட்டாலும் நான் உயர்வாகவே எண்ணுகிறேன். என்று பண்டிதர் சொன்னார்'' என்றது குமரன் எலி.

''இப்பவும் அப்படித்தான் விருதுகள் பெற்ற நூல்கள் புத்தகசாலைகளில் காணக் கிடைப்பதில்லை. பண்டிதரின் நூல்களை எங்கும் காணலாம்'' என்றது லட்சுமி எலி.

**597. சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பின்**
**பட்டுப்பாடுஊன்றும் களிறு.**

''மகனே போரில் உடம்பை மறைக்கும் அளவிற்கு அம்புகளால் புண்பட்ட போதும் யானை தன் பெருமையை நிலைநிறுத்தும். அது போல் ஊக்கமுடையவர்கள்அழிவு வந்தாலும் தளர மாட்டார்கள். என்னைப் பெறுத்த வரை விருதுகள் பரிசுகள் பெரிதல்ல. அவர்கள் தரும் பணமும் பெரிதல்ல எனது நூல்கள் மாணவர்களையும் மற்றவர்களையும் மேம்படுத்த வேண்டும். ஒழுக்கம் மிக்கவர்களாக்க வேண்டும். விரும்பிப் படித்தல் வேண்டும். பணக்ஷ்டம், விருதுகள் இல்லையென்ற மனக்கஷ்டம். பெரியவர்கள் என்று மற்றவர்களால் கூறப்படுவோர் மதிக்கவில்லை என்ற மன ஆதங்கம். சபைகள், கலைமன்றங்கள் விமர்சிக்கவில்லை என்ற கவலைகள் இருந்தாலும் எனது எழுத்துக்கள் பலராலும் வாசிக்கப்படுகின்றன. அதனால் எனது மனம் தளரவில்லை. நான் ஒரு யானை என்று பண்டிதர் நகுலனுக்கு கூறியவர்'' என்றது குமரன் எலி.

''பண்டிதரின் நூல்கள் நிலையங்களை நிரப்பியுள்ளன. நூல்நிலையங்களில் இல்லாத நூல்களுக்குத் தான் பரிசு, விருது வழங்கப்படுகிறது'' என்றது லட்சுமி எலி.

**598. உள்ளம் இலாதார் எய்தார் உலகத்து**
**வள்ளியம் என்னும் செருக்கு**

''மகனே ஊக்கமில்லாதவர்களால் உலகத்தில் எதையும் சாதிக்க முடியாது. அவர்கள் எதைத் தேடுவதானாலும் குறுக்கு வழியையே நாடுவர். அதனால் பல தரப்பட்ட துன்பங்களுக்கு ஆளாவர். கொடை வள்ளல்கள் எல்லோரும் ஊக்கமுடையவர்களே, கதிரேசன், திருருநாவுகரசு, உனது தந்தையைப் போன்றோரைச் சொல்லாம். ஊக்கமில்லாதவர்களால் பசித்தவனுக்கு உணவு கூடக் கொடுக்க முடியாது. தம்மைத் தாம் கொடையாளி என்றும் நினைக்கவும் முடியாது'' என்று பண்டிதர் நகுலனுக்குக் கூறினவர்'' என்றது குமரன் எலி.

'' இப்ப வாய்ச் சொல்லில் தான் எல்லாம் இருக்கு. பலர் பல காரணங்களைச் சொல்லி மக்களை ஏமற்றிப் பிழைக்கிறார்கள். அவர்களை மக்களும் நம்புகின்றனர்'' என்றது லட்சுமி எலி.

**599. பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்.**

''மகனே ஊக்கமுள்ளவன் எப்போதும் தனது ஊக்கத்தை மட்டுமே நம்பியிருப்பான். ஒழுக்கம் மிக்கவனாகவும், பிறரைத் தன்னைப் போல மதிப்பவனாகவும், பிறருக்கு உதவி செய்பவனாகவும், மகிழ்ச்சியுடையவனாக இருப்பதால் எல்லோரும் அவனை விரும்புவர். ஊக்கம் மிக்க மிருகமான புலிக்குப் பலம் மிகுந்த யானை பயப்படுவது போல ஊக்கமுள்ளவனுக்கு பெரும் பணக்காரன் கூட அஞ்சுவான். உனது தந்தை உள்ளூரில் விளையும் பொருட்களைக் கொள்வனவு செய்ய ஆரம்பித்த போது ஏற்கனவே பொருட்களைக்

கொள்வனவு செய்த செல்வாக்குமிக்க வியபாரியான சிங்காரம் அதிர்ந்தான். ஆனால் காலப் போக்கில் அவன் காணாமல் போய்விட்டான். என்று பண்டிதர் நகுலனுக்கு கூறியவர்'' என்றது குமரன் எலி.

''விலையைக் கூட்டி நிறையைக் குறைத்துக் கலப்படம் செய்ததால் வந்த வினை'' என்றது லட்சுமி எலி.

**600. உரம்ஒருவற்கு உள்ள வெறுக்கை அ∴துஇல்லார்**
**மரமக்கள் ஆதலே வேறு.**

''ஊக்கமில்லாதவர்களை , மரம் என்பார்கள். இருப்பினும் தோற்றத்தில் மனிதர்களைப் போல இருப்பது தான் வேறுபாடு. வலிமையைத் தருவது ஊக்கம் என்பதை நீ புரிந்து கொள்ளல் வேண்டும். மற்றவர்களது உணர்ச்சிகளைப் புரிந்து கொள்பவன் ஊக்கமுள்ளவன் அதனால் அவன் அவர்களைப் புரிந்து அவர்களின் மனம் மகிழ்வடையும் படி செயற்படுவான். சிங்காரம் தனக்குப் பொருள் தராதவர்களைத் தண்டிப்பான்; ஏசுவான், கடன் கொடான். இத்தன்மை மக்களை அன்நியப்படுத்தும் . ஆதரவு வழங்குபவனை நாடிச்செல்ல வைக்கும். உனது தந்தையின் அன்பான வார்த்தைகள் மக்களை ஆட்கொள்ளும். மனிதமனங்களைப் புரியவைக்கும் அதனால் உனது தந்தையை எல்லோரும் விரும்பினர். அவரைப்போல நீயும் வாழ்வதால் உன்னையும் மக்கள் மதிக்கின்றனர். என்று பண்டிதர் நகுலனுக்குச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''அன்பான வார்த்தைகளுக்கு அடிமையாகதார் யார்?'' என்று கேட்டது லட்சுமி எலி.

**அதிகாரம் - 61 மடி இன்மை**

**601. குடிஎன்னும் குன்றாவிளக்கம் மடி என்னும்**
**மாசூர மாய்ந்து கெடும்.**

''காண்டீபனது கொடுமைகளை தாங்க முடியாத கார்த்திகா தாயின் வீட்டுக்குச் சென்றுவிட்டாள். அதனால் காண்டீபன் நமசிவாயகத்தின் வீட்டிற்கு வந்து போது அவர் சொன்னார்; ''காண்டீபா, உன்னை வளர்த்தவன் நான். ஆனால் நான் வளர்த்தது பிழை என்று நினைக்கிறேன். வேலைக்குச் செல்லாமையால் வேலையில் இருந்து நீக்கிவிட்டார்கள். இந்த இளம் வயதில் வேலை செய்ய ஏன் உன்னால் முடியவில்லை? அதற்குக் காரணம் உனது சோம்பல்தான். இரவு பகலாகக் குடித்து விட்டு பகலில் உறங்குகிறாய். குடும்பம் என்பது அணையாத மங்காத விளக்கு. அதில் சோம்பலாகிய தூசு படியப் படிய ஒளி குறைந்து குறைந்து இறுதியில் அணைந்து விடும். உத்தியோகம் புரிசலட்சணம் என்பார்கள். உழைப்பில்லாத ஆணை யாரும் விரும்பமாட்டார்கள். அதனால் வேலைக்குச் செல்'' என்று கூறியவர் என்றது குமரன் எலி.

‘‘கழுதைக்கு உபதேசம் செய்வதால் பயன் ஏற்படுமா என்ன?’’ என்று கேட்டது லட்சுமி எலி.

**602. மடியை மடியா ஒழுகல் குடியைக்**
**குடியாக வேண்டு பவர்.**

‘‘குடும்பம் ஆயிரங்காலத்துப் பயிர். அதனால் குடும்பத்தைச் சிறந்த குடும்பமாக உருவாக்கச் சோம்பலை ஒழித்து முயற்சியை மேற்கொள்ளல் வேண்டும். பெரும் தனவந்தனின் மகளான கார்த்திகா உன்னைத் திருமணம் செய்யா விட்டால் தற்கொலை செய்வேன் என்று மிரட்டியதால் தான் அவளின் தந்தை வேறு வழியின்றிஒப்புக் கொண்டவர். இப்போ அவளே உன்னை வேண்டாம் என்று கூறிவிட்டாள். இது நல்லதல்ல. அதனால் உனது இப் பழக்கவளக்கங்களை விட்டு விட்டு வேலைக்குச் செல்வதற்கான முயற்சிகளைச் செய். இல்லாவிட்டால் அவள் உன்னை விவகாரத்துச் செய்து விடுவாள். என்று நமசிவாயகம் காண்டீபனுக்குச் சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

‘‘எதையார் சொன்னாலும் திருந்துறவன் தான் திருந்துவான்’’என்றது லட்சுமி எலி.

**603. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த**
**குடிமடியும் தன்னினும் முந்து.**

‘‘காண்டீபா நீ நன்றாகக் கற்றவன் அழிக்கும் தன்மையைக் கொண்ட சோம்பலை உடையவனுடைய குடும்பம் அவனுக்கு முன்னாலேயே அழிந்து விடும். உனது உழைப்பு அவர்களுக்குத் தேவையில்லை. ஆனால் பெருந்தனவந்தனின் பிள்ளையாகிய கார்த்திகாவிற்கு உயர்ந்த உத்தியோகத்தில் உள்ள மாப்பிள்ளை தேவை. ஏனென்றால் சமூகமும் அவளது பெற்றோரும் அதைத் தான் விரும்புகின்றனர். அதனால் சோம்பலை விட்டு விட்டு வேலைக்குச் செல்ல முயற்சி என்று நமசிவாயகம் சொன்னவர்’’ என்றது குமரன் எலி

‘‘இப்போ படித்த பெண்பிள்ளைகள் சீதனமில்லாவிட்டாலும் பெரிய உத்தியோகத்தினை விரும்பினை. அது நியாயம் தான் யார் அதைக் கேட்பினை’’ என்றது லட்சுமி.

**604. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து**
**மாண்ட உஞற்றுஇ லவர்க்கு**

‘‘காண்டீபா சோம்பலுக்கு அடிமைப்பட்டு முயற்சியில்லாமல் வாழ நினைக்கின்றவனை யாரும் மதிக்கமாட்டார்கள். அந்தக் குடும்பம் பெருமையை இழப்பதோடு பல்வேறு குற்றங்களுக்கு ஆளாகும். இப்போ கார்த்திகா உன்னைத் திருமணம் செய்தற்காகக் கவலைப்படுகிறாள். அவர்களின் குடும்பத்தில் பல தகுதியான மாப்பிள்ளைகள் இருந்தும் கார்த்திகா உன்னைத் திருமணம் செய்ததால் கோபித்த அவர்கள் இப்போ கேலி செய்கிறார்கள். அதைக் கார்த்திகாவாலும் அவளது தந்தையாலும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. என்று நமசிவாயகம் சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

‘‘நல்லாய் இருந்தால் பொறாமைப்படுவார்கள். கெட்டுப் போனால் கேலி செய்வார்கள். இது மனிதனின் இயல்பு’’ என்றது லட்சுமி எலி.

**605. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன்.**

''மகனே காலதாமதம், மறதி, சோம்பல், அளவுக்கதிகமான தூக்கம் ஆகிய சோம்பல் உடையவர் விரும்பி ஏறும் மரக்காலன்கள் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால் மறதியும் உனக்கு வந்து விட்டது. நேற்று உனக்கு மீண்டும் வேலை தருவதாக உன்னை உனது மேலாலர் அழைத்திருந்தார். மறதி காரணமாக நீ செல்லவில்லை. படுத்து உறங்கி விட்டாய். இந்த நிலை நிலையாதல் உனது மனம் விரக்தியடைந்து தவறான முடிவுகளை எடுக்கும்'' என்று நமசிவாயகம் கூறியவர் என்றது குமரன் எலி.

''அவளும் இவன் செத்தால் நல்லதென்று தானே சொல்கிறாள்.. இதுவும் ஒரு வகைக் காதல் தான் '' என்றது லட்சுமி எலி.

**606. படியுடையார் பற்றஅமைந்தக் கண்ணும் மடியுடையார்**
**மாண்பயன் எய்தல் அரிது.**

''மகனே, அரசனின் நண்பனாக இருந்தாலும் சோம்பல் உடையவன் உருப்படமாட்டான் என்பார்கள்.. கார்த்திகா பெரியதனவந்தனின் மகள். அவளுக்கு பணம் தேவையில்லை. ஆனால் மதிப்பு மரியாதை தேவை. பெரியதொரு உத்தியோகத்தினின் மனைவி , ஓர் ஒழுக்கமானவனின் மனைவி என்பதையே அவள் விரும்புகிறாள். தொழிலிலாமல் குடித்து விட்டு அலைபவனை எந்தப் பெண்ணும் விரும்பாள். உன்னை விட இப்போ அவளுக்கு மதிப்பு மரியாதை தான் தேவை. அதற்கு நீ சோம்பலை விட வேண்டும்'' என்று நமசிவாயகம் கூறியவர் என்றது குமரன் எலி.

''இப்ப பெண்களுக்கு மதிப்பு மரியாதை தான் தேவை. அதனால் தான் போலிகளை, நம்பி ஏமாற்றமடைகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**607. இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து**
**மாண்ட உஞற்று இலவர்.**

''மகனே, சோம்பேறிகளைப் பிறர் பரிகசிப்பர் என்பதைவிடத் தாய் தந்தையர், மனைவி, மக்கள், உற்றார் உறவினர்களும் பரிகசிப்பர். ''இப்போ கார்த்திகா உன்னை விவாகரத்துச் செய்து விட்டு இன்னொருவனைக் கல்யாணம் செய்யப்போகிறாள்'' என்று பேசுகிறார்கள். அதைக்கேட்டு நான் இழந்து போனேன். உனக்கு அது பெரிதாகத் தெரியவில்லை? மகனே, இனியாவது உனது நிலையைப் புரிந்து கொள்'' என்று நமசிவாயகம் அழுதவர்'' என்றது குமரன் எலி.

''இப்போ பதவி, பணம், அந்தஷ்து என்பவற்றைத் தானே பார்க்கிறார்கள். நாகரீகம் என்ற பெயரில் அரைகுறை ஆடை, கவர்ச்சியைக்காட்டல் என்பனதானே வழக்கில் உள்ளது. சமூகநீதி, குடும்பமானம், எல்லாம் கப்பல் ஏறிவிட்டது'' என்றது குமரன் எலி.

**608. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு**
**அடிமை புகுத்தி விடும்.**

''மகனே, நல்ல குடியில் பிறந்தாலும் சோம்பற்பட்டு உழைக்காமல் இருப்பவனைப் பகைவர்கள் எள்ளி நகையாடுவர். உறவினர் கேலி செய்வர். எனது உறவினர்கள் எனது வளர்ப்பு முறை பிழை என்கின்றனர். கார்த்திகாவின் உறவினர்கள் பகை காரணமாகக் கண்டபடி சேவதால் கார்த்திகாவும் தந்தையும்

தலைகாட்ட முடியாது துன்பப்படுகின்றனர். அதனால் சோம்பலை விட்டுவிட்டு உனது மேலதிகாரியைச் சந்தித்துப் பேசு'' என்று நமசிவாயகம் சொன்னார் '' என்றது குமரன் எலி.

'' பாவம் நமசிவாயகம். வளர்ந்த குற்றத்திற்காகக் கேவலப்படுகிறார்'' என்றது லட்சுமி எலி.

**609. குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.**

''மகனே, சோம்பலை விலக்கி நீ பழையபடி வேலைக்குச் சென்றாயானால் உனக்கும் உனது குடும்பத்திற்கும், கார்த்திகாவின் குடும்பத்திற்கும் ஏற்பட்ட குற்றங்குறைகள் யாவும் நீங்கிவிடும். காலப்போக்கில் மக்கள் அதை மறந்து விடுவார்கள். நீ திறமையானவன். மூளைசாலி, எதிர்காலத்தில் மேலதிகாரியாக வரக்கூடியவன் என்று முன்பு பலர் கூறினார்கள். அதை மெய்ப்பீ. உன்னால் முடியும். முதலில் சோம்பலை அகற்று'' என்று நமசிவாயகம் அழுதவர் '' என்றது குமரன் எலி.

''பதவியும் பணமும் வந்தால் முன்பு உண்டான குற்றம் குறைகள் யாவும் நீங்கிவிடும். கற்பிழந்தவளும் கற்பாசித்திரியாகி விடுவாள்'' என்றது லட்சுமி எலி.

**610. மடியில்லா மன்னவன் எய்தும் அடியத்தளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு.**

''மகனே, நாட்டை ஆளுகின்ற அரசன் சோம்பலில்லாதவனானால் திருமாலின் திருவடிகளால் அளக்கப்பெற்ற உலகம் முழுவதையும் அவன் கைப்பற்றி விடுவான். சோம்பல் தான் மனிதரின் முதல் எதிரி அரசன் சோம்பேறியானால் நாட்டை இழப்பான். கல்வி மான் சோம்பேறியானால் புகழை இழப்பான். குடும்பத்தன் சோம்பேறியானால் தன்னையே அழிப்பான். அதனால் உன்னை அழிவில் இருந்து காப்பாற்று'' என்று நமசிவாயகம் கெஞ்சினவர்'' என்றது குமரன் எலி.

''செவிடன் காதிலை ஊதின சங்குதான்'' என்றது லட்சுமி எலி.

## அதிகாரம் - 62 ஆள்வினை உடைமை

**611. அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.**

''நகுலன் கோவிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்து விட்டுவந்து பண்டிதரை வணங்கிவிட்டுச் சொன்னான்; '' ஐயா, நீங்கள் தான் எனது வழிகாட்டி, தெய்வம், ஆசான் எல்லாம். நீங்கள் எனது வாழ்வில் குறுக்கிடா விட்டால் நான் காண்டீபனைப் போல மாறியிருப்பேன். ஏனென்றால் அவன் தான் எனது உயிர் நண்பன். இப்போ நான் கட்டிடப் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்ய விரும்புகிறேன். அதற்கான ஆலோசனைகளைத் தாங்கள் கூறுதல் வேண்டும்'' என்றான். அதற்குப் பண்டிதர் சொன்னார்; ''நகுலா, இச்செயல் செய்வதற்கு அரியது என்று நினைக்காதே. எதையும் செய்ய நினைத்தால் முயற்சி உன்னை மேலோங்கச் செய்யும். அதனால் முயற்சி செய் '' என்று பண்டிதர் கூறினார். என்றது குமரன் எலி.

''முயற்சி உயர்ச்சியைக் கட்டாயம் தரும். நகுலன் முயற்சியுடையவன்'' என்றது லட்சுமி எலி.

**612. வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை**
**தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.**

" மகனே, ஒரு செயலைச் செய்யும் போது பொருளாதாரம் வேண்டும். அது இருந்தால் முயற்சி இருந்தால் போதும். எதையும் செய்து முடிக்கலாம். பலர் அவாப்பட்டு பலதொழில்களைச் செய்வார்கள். போதிய முயற்சியின்மையால் அவற்றைக் கைவிட்டு விடுவார்கள். அதனால் பொருள்நட்டமேற்படும். பிரச்சினைகள் வரும்.. தொடங்கிய தொழிலை இடையில் கைவிட்டவரை உலகத்தவர் பரிகசிப்பர். முயற்சியில் தளர்ச்சி இல்லாமல் இருந்தால் ஒரு தொழிலோடு சம்பந்தப்பட்ட இன்னொரு தொழிலையும் செய்யலாம். நீ மொத்தவியாபாரி. பல சரக்குடன் கட்டிடடப் பொருட்களையும் வியாபாரம் செய்யலாம். அதைவிடுத்து விவசாயம் கால்நடை வளர்ப்புத் தொழிலினால் கஷ்டப்படுவாய்'' என்று பண்டிதர் கூறியவர் என்றது குமரன் எலி.

''வேறுபட்ட தொழிலானால் இரண்டு தோணியில் கால்வைப்பது போன்றது'' என்றது லட்சுமி எலி.

**613. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே**
**வோளாண்மை என்னும் செருக்கு.**

''தொழிலை நல்ல முறையில் செய்தால் பிறருக்கு உதவி செய்தல் வேண்டும் என்ற மேலான எண்ணம் மனதில் தோன்றும். அதன் மூலம் பலருக்குத் தொழில் கொடுக்கலாம், தானதர்மம் செய்யலாம். இதெல்லாம் தளர்வில்லாத முயற்சி உடையவனுக்குத் தான் பொருந்தும். உனது தந்தை உன்னிடம் தனது தொழிலை ஒப்படைக்கும் போது கவலைப்பட்டவர். இப்போ உனது முயற்சியைப் பாராட்டுகிறார்... உனது மாமானாகும் அரச உத்தியோகத்திலும் பார்க்க வர்த்தகம் மேலானது என்று சொல்கிறார்... அதனால் உற்சாகமாகச் செயற்படு'' என்று பண்டிதர் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''காதலிக்கும் போது பெண்ணின் பெற்றோர் பணக்காரனையும் பரதேசி என்பர். காசுகொட்டினால் பரம்பொருள் என்பர் ''என்றது லட்சுமி எலி.

**614. தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை**
**வாளாண்மை போலக் கெடும்.**

''நீ வியாபார நிலையத்தைப் பொறுப்பேற்றபோது என்னை வந்து ஆலோசனை கூறும்படி கேட்டாய்... அதற்கு வேதனமும் தருவதாகச் சொன்னாய். உன்னில் எனக்குப் பெரிதாக அந்தநேரம் நம்பிக்கை வரவில்லை. முயற்சி இல்லாதவன் பிறருக்கு உதவி செய்ய நினைப்பது, ஒரு பேடி தன்கையில் வாளை எடுத்து ஆண்மையைக் காட்டுவது போன்றதாகும் என்று நினைத்தேன். நீ பேடி இல்லை மாவீரன்.. இனி வேண்டுமானால் வருகிறேன்'' என்று பண்டிதர் கூறினார்'' என்றது குமரன் எலி.

''நகுலன் காண்டீபனோடு சேர்ந்து ஊர் சுற்றினால் யார்தான் அவனை முயற்சியுடையவன் என்று நம்புவார்கள்'' என்றது லட்சுமி எலி.

**615. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**

**துன்பம் துடைத்தூன்றும் தூண்.**

“மகனே, முயற்சியுடையவன் தனது சுயஇன்பத்தைப் பாரான். தான் எடுத்துக் கொண்ட செயலை முடிப்பதையே விரும்புவான். அத்துடன் தனது சுற்றத்தவர்களின் துன்பத்தைப்போக்கி அவர்களைத் தாங்குகின்ற தூணாகச் செயற்படுவான் என்று பெரியவர்கள் கூறியுள்ளனர். அது உன்னைப் பொறுத்தவரை உண்மை. எனக்கும் பொருளாதாரக் கஷ்டமும் தீரும்.. மதிப்பு மரியாதையும் குறையாது. நீ வேலையில்லாது கஷ்டப்பட்ட பலருக்கு வேலை கொடுத்துள்ளமையால் அவர்களது குடும்பம் மகிழ்வுடன் வாழ்கிறது” என்று பண்டிதர் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“தவராசா வாத்தியார் ஓய்வெடுத்தபின் கஷ்டத்தை நீக்க ஒரு வர்த்தக நிலையத்தில் கணக்கு எழுதியவர். அவரது வேலைகணக்காளர் பின்நேரம் கடையைக் கூட்டுவது, பத்து மணிக்கும் நான்கு மணிக்கும் தேனீர் தயாரித்துக் கொடுப்பதும் அவரின்வேலை” என்றது லட்சுமி எலி.

**616. முயற்சி திருவினை ஆக்கும் மயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்.**

“நகுலா முயற்சியுடையவனுக்குச் செல்வம்சேரும். திருமகள் அவனது முயற்சியைக் கண்டு மகிழ்வுடன் உதவுவாள். முயற்சியில்லாதவனின் செல்வம் தீயவழிகளால் சென்று விடும். முயற்சியுள்ளவன் தீயவற்றை விலக்கிவிடுவான். நண்பர்கள் வற்புறுத்தினாலும் செயல்முடியுமுன் நண்பர்களுடன் சேரான். முயற்சியில்லாதவனுக்கு நேரம் நிறைய இருக்கும். அதனால் அவன் நண்பர்களுடன் சேர்ந்து களியாட்டங்களில் ஈடுபடுவான்” என்று பண்டிதர் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“காண்டீபனின் நிலை அது தானே. யாராவது நண்பர்கள் சேர்ந்தால் அன்று வேலைக்குச் செல்லமாட்டான். அவர்களோடு சேர்ந்து குடிப்பான்” என்றது லட்சுமி எலி.

**617. மடியுளான் மாமுகடி என்ப படியிலான்**
**தாளுளாள் தாமரையி னாள்.**

“நகுலா, சோம்பேறி தனக்குத்தேவையானவற்றைச் செய்யவே சோம்பற்படுவான். அவனால் உழைக்கமுடியாததால் அவனுக்கு நல்ல உடைகளோ, சுவையான உணவுவகைகளோ கிடைக்காது. வீட்டிலும் மதிப்பிராது. நண்பர்களும் சேர்க்கமாட்டார்கள்.. சுற்றத்தவரும் விரும்பார். அவனது உடலில் மூதேவி குடியிருப்பாள். ஆனால் முயற்சியுடையவன். உன்னைப்போல விதம் விதமான விலையுயர்ந்த உடைகளை அணிவான். நல்ல உணவை உண்பான். சுற்றத்தவர்கள் விரும்பி மகிழ்வுடன் உறவாடுவார்கள். அவனது முயற்சிக்குத் திருமகள் உதவுவாள் ” என்று பண்டிதர் கூறினார். என்றது குமரன் எலி.

“இப்ப காண்டீபனைக் காண்போர் மறைகின்றனர். சிலர் ஏசுகின்றனர். தொழிலை விட்டமையால் வருமானம் இல்லை. கார்த்திகாவும் களைத்து விட்டாள். கண்டவர்களிடம் காசும் சோறும் கேட்டால் எத்தனை நாட்களுக்குக் கொடுப்பார்கள்?” என்றது லட்சுமி எலி.

**618. பொறிஇன்மை யார்க்கும் பழிஅன்று அறிவுஅறிந்து**
**ஆள்வினை இன்மை பழி.**

''நகுலா, ஒருவனது பெற்றோர் வறியவர்களாக இருந்தால் அவன் கஷ்டப்படுவது பழியல்ல. அது பழம்வினை அறிய வேண்டியவற்றை அறிந்து எந்தத் தொழிலைச் செய்தால் பொருளைத் தேடலாமென்று முயற்சி செய்யாமல் இருப்பது தான் பழி. முயற்சி அவனது மனதின் ஊக்கமே தவிர உடலின் பலமல்ல.போரில் இரு கால்களையும் இழந்த வளர்மதி சிறிய உணவுக் கடையொன்றைத் தொடங்கி அதைப் பெருப்பித்ததோடு தையல் கடையையும் வைத்திருக்கிறாள். பத்துக் குடும்பம் அவளால் வாழ்கிறது. இது முயற்சியின் பலன். மனத்திடத்தின் பரிசு''. என்று பண்டிதர் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''அவள் கடைத் தொடங்கும் போது பரிகசித்த நாகராசா இப்போ அவளின் சாப்பாட்டுக் கடையால் தான் வாழ்கிறார். ஒருவரது முயற்சியின் அளவைக் கணிப்பிட முடியாது''என்றது லட்சுமி எலி.

**619. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.**

''மகனே, தெய்வத்தால் உலகில் உள்ள ஜீவராசிகளுக்கு உதவி செய்ய முடியுமே தவிரப் பொருளாக எதுவும் கொடுக்க முடியாது. பழம்வினை காரணமாக ஒருவன் தொழிலில் மிகவும் கஷ்டப்பட்டால் அதை நீக்குவார். அதிஸ்ட இலாபச் சீட்டை எடுத்தால் கடவுளின் கருணையால் பரிசு கிடைக்கும்? அதை எடுக்கா விட்டால் எப்படிப் பரிசு கிடைக்கும் பரீட்சை எழுதினால் தான் பேறுபேறு வரும். பரீட்சைக்காகப் படிக்கும் போது கடவுளின் அருள் இருந்தால் வினாத்தாளில் வரும் வினாக்களைப் படிக்கக் கடவுள் உதவுவாரே தவிர அவர் வந்து பரீட்சை எழுதமாட்டார். அதனால் கடவுளிடம் பாரத்தைப் போட்டு விட்டு முயற்சி செய்பவன் பெரிதாக இலாபத்தை பெறா விட்டாலும் நட்டமடைய மாட்டான். அவனது முயற்சிக்கேற்ற பயன் கிடைக்கும் என்று பண்டிதர் சொன்னவர்''என்றது குமரன் எலி.

''கடவுள் எல்லாவற்றையும் செய்பவர் என்று நினைத்துக் கொண்டு மூன்று வேளையும் பூசைக்கு வரும் யூனி முப்பது வருடங்களும் ஓலைக் குடிசையில் தான் வாழ்கின்றான். கடவுளை வணங்குவதோடு முயற்சிக்க வேண்டும் என்று பலர் நினைப்பதில்லை '' என்றது லட்சுமி எலி.

**620. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்**
**தாழாது உஞற்று பவர்.**

''விதி என்று ஒன்றிருக்கு. ஆனால் அவ்விதி சோர்வில்லாமல் முயற்சியில் ஈடுபடுபவரை ஊக்குவிக்குமே தவிர அவர்களைத் தாக்காது.முயற்சியுடையவன் கடவுளை நம்புவான். கடவுள் பக்தி விதியை மாற்றும். மார்க்கண்டேயனின் கடவுள் பக்தி விதியை மாற்ற வில்லையா? திருநாவுக்கரசு அன்றன்று சோற்றுக்கே கஷ்டப்பட்டது. முயற்சி மேல் முயற்சி செய்து வெளிநாடு சென்று தளராது முயற்சி செய்தமையால் இன்று கோடீஸ்வரன் முயற்சியுள்ளவர்கள் மட்டும் தான் கோடீஸ்வரர்கள். என்று பண்டிதர் நகுலனுக்குச் சொன்னார்'' என்றது குமரன் எலி.

''வெறும்கையால் முழம் போடலாமே? தண்ணீரில் பரகாரம் சுடலாமே? இங்குள்ள சிலர் அப்படிச் செய்யலாமென நினைக்கிறார்கள் '' என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 63 இடுக்கண் அழியாமை**

**621. இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அ.்.தொப்பது இல்.**

“காண்டீபன் கதிரேசனிடம் வந்து சொன்னான். “ஐயா பெரியப்பா என்னை அன்போடு வளர்த்தவர். அவரின் ஆசையில் மண்ணைப் போட்டு விட்டேன். எனது மனைவி செல்வந்தக் குடும்பத்தில் பிறந்தவள். அவளை அளவுக்கதிகமாகத் துன்புறுத்தி விட்டேன். இப்போ எனக்குத் துன்பங்கள் தொடர்ந்து வருகின்றன. என்னால் அவற்றைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இரவும் உண்ணவில்லை காலையிலும் உண்ணவில்லை ” என்று அழுதன்.

“மகனே துன்பங்கள் தானாக வருவதில்லை. சம்பந்தப்பட்டவர்கள் தான் அதை அழைக்கிறார்கள். உன்க்கு என்ன குறையை இறைவன் வைத்தார். நீ மனம் போன படி வாழ்ந்து எல்லாவற்றையும் இழந்து விட்டாய். அறிவுள்ளவர்கள் துன்பம் வந்தால் இன்பமடைந்து சிரிப்பார்கள். ஊழ்வினை காரணமாக வரும் துன்பத்தை நீங்க வேண்டிய காலம் வந்து விட்டது. என்று மகிழ்வார்கள். நீ தேடிய துன்பங்கள் இவை. அதை நீ தான் நீக்க வேண்டும் ” என்றவர் என்றது குமரன் எலி.

“ எல்லாம் இருந்தும் சேரக்கூடாதவர்களுடன் சேர்ந்தால் இன்றும் மோசமான துன்பங்கள் வரும் என்று உணர்ந்தால் திருந்தலாம் ” என்றது லட்சுமி எலி.

**622. வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தின் உள்ளக் கெடும்.**

“ மகனே காட்டாற்று வெள்ளம் போலத் துன்பம் வந்தாலும் கலங்காது அதைப்போக்க உறுதியோடு போராடவேண்டும். அப்படிப் போராடினால் அத்துன்பம் இல்லாமற்போய்விடும். உனக்குத்துன்பம் வந்தபோது அதை நீக்க நண்பர்களோடு சேர்ந்து குடித்தாய். மனைவியைத் துன்பப்படுத்தினாய். குடித்ததால் பலரின் கேலிக்காளானாய். மனைவியைத் தாக்கியதால் அவளது சகோதரர்களிடம் அடிவாங்கினாய். வேலையை இழந்தாய். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். நீ படித்தவன். படித்த படிப்பை நினைத்துப்பார். உனது செயல்களின் மூலம் துன்பங்களை நீக்கலாமென்று நீ படித்த படிப்பில் உள்ளதா?” என்றவர் என்றது குமரன் எலி.

“படித்தவர்கள் பாமரை விடக்கேவலமாக நடந்தால் கற்ற கல்வியால் என்ன பயன்..? ” என்றது லட்சுமி எலி.

**623. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்.**

“துன்பம் வந்தால் உறுதியாகப்போராட வேண்டுமே தவிரக் கலங்கக்கூடாது. கலங்கி அழுவதன் மூலம் துன்பங்கள் மாறும் என்றால் கலங்கி அழலாம். திருநாவுக்கரசுவும் நானும் எவ்வளவு துன்பப்பட்டோம் என்று ஊரவர்களுக்குத் தெரியும். உணவு இல்லாதவேளைகளில் திருநாவுக்கரசு என்னிடம் வருவான். நானே உணவின்றிக் கஷ்டப்படுவேன். அவன் இரவு வந்தால் உணவுக்குத்தான் வருவான். அது தெரிந்த எனது மனைவி எதையோ கொடுப்பாள். இப்படிப் கஷ்டப்பட்ட அவனும் நானும் நல்லாய் இருப்பதற்குக் காரணம் துன்பங்களைக் கண்டு அஞ்சாததேயாகும். ” என்று கதிரேசன் கூறினார்” என்றது குமரன் எலி.

“இப்போ உள்ளவர்கள் குடித்தால் துன்பம் போய் விடுமென்று நினைக்கிறார்கள்”என்றது லட்சுமி எலி.

**624. மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற**
**இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.**

“ மகனே வண்டி இழுக்கும் எருது தடையேற்பட்ட இடங்களில் தளராமல் முயன்று வண்டியை இழுத்துச் செல்லும். எருதைப் போல் முயன்றால் துன்பம் வந்தாலும் முயற்சியால் அதை வெல்லாம். ஒரு முறை வயலில் விதைப்பதற்குக் கூட விதை நெல் என்னிடம் இல்லை யாரும் விதைக்கும் முன் விதைநெல்லைக் கேட்க முடியாது. வயலைப் பன்படுத்தி விட்டு நெல்லுக்காகக் காத்திருந்தேன். விதை நெல் கிடைக்கவில்லை. விதைப்பு முடிந்து ஒரு மாதங்களின் பின் எனது நண்பன் ஒருவன் தனது வயரில் பயிர்கள் அடர்த்தியாக உள்ளதால் விளைச்சல் குறையும் என்று சொல்லி பயிர்களைப் பிடுங்கி நடச் சொன்னான். நான் பிடுங்கி நட்டேன். அம்முறை எனக்கு அமோக விளைச்சல். துன்பம் என்று சொல்லித் துன்பப்பட்டால் துன்பம் கூடும். முயற்சியுள்ளவனுக்கு வரும் துன்பம் அவனது முயற்சியைக் கண்டு துன்பப்பட்டு விலகி விடும் ” என்று கதிரேசன் சொன்னவர். ” என்றது குமரன் எலி.

“பலர் பணக்காரனானதும் தாம்பட்ட துன்பங்களை மறந்து விடுவர். பெரிதாகத் தாம் வாழ்ந்ததாகத் தம்பட்டம் அடிப்பர். அப்பிடித்தானே ஊரில்பலர் இன்று வாழ்கிறார்கள் ” என்றது லட்சுமி எலி.

**625. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கண் படும்.**

“தொடர்ந்து சிலருக்குத் துன்பங்கள் வந்து கொண்டே இருக்கும். இளமையில் எனக்குப்பல்வேறுபட்ட துன்பங்கள் தொடர்ந்து வந்தன. துன்பங்கள் வந்து கொண்டே இருந்தன. இளமையில் எனக்குப்பல்வேறுபட்ட துன்பங்கள் தொடர்ந்து வந்தன. உணவுக் கஷ்டம் பொருள் கஷ்டம் வயல் உழுவதற்குக் காளைகள் இல்லை. காளைகள் உள்ளோரைக் கெஞ்சிமன்றாடித்தான் உழுவிப்பேன். பிள்ளைககள் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தான் பாடசாலைக்குச் செல்லும். இப்படிப் பல துன்பங்கள். அவற்றைக் கண்டு உள்ளம் களங்காது வலிமையுடன் போராடியதால் தான் நான் இன்று இந்த நிலையை அடைந்தேன். ஆனால் நீ அப்படியல்ல. சகல வசதிகளும் இருந்தும் உனது செயல்களால் நீ துன்பப்படுகிறாய். உனது தாகாத செயல்களை விலக்கினால் தான் உனக்கு வந்த துன்பங்கள் போகும். என்று கதிரேசன் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“ தன்னால் தேடும் துன்பங்களை நீக்க தன்னால் முடியும். என்று என்னினால் தான் துன்பங்கள் போகும்.”என்றது லட்சுமி எலி.

**626. அற்றேம்என்று அல்லற் படுபவோ பெற்றேம்என்று**
**ஓம்புதல் தேற்றா தவர்.**

“ துன்பம் வந்தால் அது தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். ஒன்றை நீக்க இன்னொன்று வரும். அதை நீக்கவே இன்னொன்று வரும். இது ஏழைகளின் நிலை. நான் ஏழையாக இருந்த போது ஆயிரக்கனக்கான துன்பங்கள் அடுக்கடுக்காய் வந்தன. தற்கொலை செய்யலாமே என்ற மனநிலை கூட உண்டானது.இது எனது நிலை உனது நிலை என்னவென்றால் செல்வம் வந்த போது இதனைப் பெற்றோம் என்று அதன் மீது பற்றுவைத்து அதைக்காப்பாற்றாது விட்டு விட்டு அச் செல்வம் சென்ற பின் அதைக் காப்பாற்றாது விட்டு விட்டோம் என்று கவலைப்படுவதால் எந்தப் பயனும் வராது. உயர்ந்த கல்வியும் பணக்கார மனைவியும் உன்னால் தானே சென்ற னஎன்று கதிரேசன் கூறினார் ” என்றது குமரன் எலி.

“ பலர் வாழத் தெரியாமல் வாழ்ந்து விட்டு மற்றவர்களையும், விதியையும் கடவுளையும் குறை கூறுகிறார்கள்” என்றது லட்சுமி எலி.

**627. இலக்கம் உடம்புஇடும்பைக்கு என்று கலக்கத்தைக்**
**கையாறாக் கொள்ளாதாம் மேல்.**

“மகனே உடம்பு துன்பத்திற்கு உள்ளாவது. இதை உணர்ந்தவர்கள் தமது உடம்பிற்கு ஏற்படும் துன்பங்களை துன்பமாகக் கொள்ள மாட்டார்கள். அது போலத் தான் மனதையும் உறுதியாக வைத்திருத்தல் வேண்டும். உறுதியில்லாத மனம் சிறிய துன்பங்களையும் பெரிய துன்பமாக நினைக்கும். எனக்கு எண்பது வயது. உடம்பு பலவினப்படும் என்று தெரிந்த நான் மனதைத் தைரியப்படுத்தியுள்ளேன். இதனால் எந்தத் துன்பத்தையும் என்னால் தாங்க முடியும் உனக்கேன் துன்பம் வரவேண்டும்.” எனக்குப் புரியவில்லை. இன்பமும் துன்பமும் இயற்கையாக எல்லா உயிர்களுக்கும் வரும். ஆனால் அவற்றை மனிதர்கள் தான் பெரிது படுத்துகின்றனர். ” என்றவர் என்றது குமரன் எலி.

“ வசதியாக வளர்க்கப்பட்டவைக்கு எதுவும் புரியாது புரிய வைத்தல் வேண்டும்.” என்றது லட்சுமி எலி.

628. இன்பம் விழையான் இடும்பை இயல்புஎன்பான்

துன்பம் உறுதல் இலன்.

“ நமசிவாயகம் உலகம் தெரியாது உன்னை வளர்த்து விட்டார். அவர் இன்பத்தை விரும்பாது துன்பம் இயற்கையானது என்று தெளிவாக உணர்ந்தவர். அதனால் துன்பங்களைக் கண்டு அவர் கலங்குவதில்லை. ஆனால் நீ துன்பப் படக் கூடாதென்பதற்காக உனக்கு புத்தரின் பெற்றோரைப் போலப் துன்பங்களை உணர்த்தாது வளர்த்து விட்டார்.இன்பத்தையும் துன்பத்தையும் சரிசமமாக ஏற்கும் பக்குவத்தை உண்டாக்கவில்லை. அது தான் அவர் விட்ட பிழை. ” என்று கதிரேசன் காண்டீபனுக்குக் கூறினவர்” என்றது குமரன் எலி.

“பிள்ளைகள் குற்றம் செய்தாலும் இப்போதைய பெற்றோர் மற்றவர்களிடம் குறைகளைக் கண்டு பிடிப்பதால் தான் பிள்ளைகள் வாழத் தெரியாது அவதிப்படுகிறார்கள்” என்றது லட்சுமி எலி.

**629. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**
**துன்பம் உறுதல் இலன்.**

“இன்பம் வந்த காலத்தில் அதைப் பெரிதுபடுத்தி மகிழாதவன் துன்பம் வந்த போது கலங்க மாட்டான். நீ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த போது நமசிவாயகம் மகிழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் அதைப் பல நாட்கள் கொண்டாடியவர். சித்தியடையாத மாணவர்களின் மனதை உணரவில்லை. உனக்கும் உணர்த்தவில்லை. இது பெரிய குற்றம். அப்படிப் பல. அதனால்தான் உனக்கு உலகத்தைப் புரிந்து கொள்ளும் மன நிலை உண்டாகவில்லை. என்று கதிரேசன் சொன்னவர்” எனறது குமரன் எலி.

“மனிதரில் பலர் அப்படித் தான் வாழ்கிறார்கள். பெற்றோரின் திவசம், மாளையம் என்பவற்றை விட்டு விட்டுப் பிறந்தநாள், திருமண நாள், பட்டம் பெற்ற நாள் என்பவற்றை விமர்சையாக கொண்டாடுவதால் தான் இந்த நிலை” என்றது லட்சுமி எலி.

**630. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்**
**ஒன்னார் விழையும் சிறப்பு.**

“ காண்டீபா உனக்கு என்ன நேர்ந்தது. இப்படி ஏன் மாறினாய்? உன்னுடன் தான் எனது மூத்த மகன் கற்றவன். அவன் மாறாதிருக்கிறான். அதற்குக் காரணம்; தனக்கு வரும் துன்பங்கள் இயல்பானவை, அவற்றை இன்பமாக ஏற்றால் துன்பம் போய்விடும் என்று அவனுக்கு கூறி வளர்த்தேன். அதனால் பகைவரும் போற்றும் உயர்வுக்கு அவன் ஆளானான். அவன் அடுத்த மாதம் மேற்படிப்புக்காக அமெரிக்கா செல்கிறான். இதற்குக் காரணம் அவனது மனநிலை தான். என்று கதிரேசன் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“பிள்ளைகளை வளர்க்கத் தெரியாமல் வளர்த்தால் இப்படியான பிரச்சினைகள் வரத்தான் செய்யும்” என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 65 சொல்வன்மை**

**641. நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்**
**யாநலத்து உள்ளதூஉம் அன்று**

“ நகுலன் பண்டிதரிடம் வந்து சொன்னான்; “எனது தகப்பனாரின் கையில் வர்த்தகம் இருந்தபோது இரவு ஆறு மணிக்குப் பிறகு ஓய்விருந்தது. அதனால் நான் பிரசங்கம் செய்ய ஒத்துக்கொண்டேன். இப்போ நான் வியாபாரத்தைப் பொறுப்பேற்றபின் இரவு முழுவதும் வேலை செய்யவேண்டியுள்ளது. அதனால் சற்குணத்தை இனிமேல் பேசச்சொல்லுங்கள்” என்றான். பண்டிதர் சொன்னார்; “நாவன்மை என்று சொல்லப்படும் பேச்சுத்திறமை ஒரு செல்வம். அது பெரியவர்களால் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற எல்லா நலன்களையும் விட மிகமிக உயர்ந்தது. அச் செல்வம் உன்னில் உள்ள அளவு சற்குணத்திடம் இல்லை. இருப்பினும் உனக்கு நேரம் இல்லாமையால் அவனிடம் சொல்கிறேன்” என்றவர் என்றது குமரன் எலி.

“பேச்சுத்திறமை இருந்தவனும் சொன்னவற்றைச் சொன்னால் யாரும் கேட்கமாட்டார்கள். பிள்ளைகள் விளையாடும். மற்றவர்கள் கதைப்பார்கள். பழையவற்றை விட்டு விட்டுப் புதுமையாகப் பேசவேண்டும் ” என்றது லட்சுமி எலி.

**642. ஆக்கமும் கேடும் அதனால் வருதலான்**
**காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு**

“நன்மையும் தீமையும் ஒருவன் சொல்கின்ற சொல்லால் தான் வருகின்றன. அதனால் பேசும்போது தவறுகள் நேராமல் பார்த்துக்கொள்ளல் வேண்டும். சற்குணம் நாவன்மை உள்ளவன்தான். ஆனால் பேசும் போது வரலாற்றை மாற்றிச் சொல்லி விடுவான். திலகவதியாரைப் பற்றிப்

பேசும்போது காரைக்கால் அம்மையாரின் அதிசயங்களைத் திலகவதியார் செய்ததாகக் கூறிய பெரும் பிரச்சினை உருவானது. பேசுபவன் தன்னை மறந்து பேசக்கூடாது '' என்றவர் என்றது குமரன் எலி.

''சரியாகத் திட்டமிடாமல் எல்லாம் எனக்குத் தெரியும் என்ற நிலைப்பாட்டோடு மேடையேறக் கூடாது. பலமுறை பேசிய விடயத்தையும் பேசுமுன் ஆயத்தப்படுத்திப் பேசினால் தவறு நேராது'' என்றது லட்சுமி எலி.

**643. கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்.**

'' பேசும் போது கேட்பவரைக் கவரக் கூடியதாகவும், கேட்காதவருக்குக் கேட்க வேண்டும் என்ற ஆவலைத் தூண்டத்தக்கதாகவும் பேசுவதே பேச்சு வன்மையாகும் என்று சற்குணத்திற்குப் பலமுறை சொல்லியும் அதைக்கவனத்தில் எடுக்கிறானில்லை. உன்னுடன் சேர்ந்து பிரசங்கம் செய்யும் போது அவன் பேசும்போது கூட்டத்தில் சலசலப்பு உண்டாகிறது. இது பேசுபவனுக்கு அவமானம் என்பதைச் சற்குணத்திற்கு உணர்த்து '' என்று பண்டிதர் நகுலனுக்குக் கூறினவர் '' என்றது குமரன் எலி.

'' நிறைய வாசிக்க வேண்டும். வாசித்தவற்றை நினைவில் வைத்திருக்க வேண்டும். புதுப்புது விஷயங்களைப் பேச வேண்டும். இது பல பேச்சாளருக்குத் தெரிவதில்லை. அதனால் தான் மக்கள் பேச்சுக் கேட்கவருவதில்லை '' என்றது லட்சுமி எலி.

**644. திறன்அறிந்து சொல்லுக சொல்லை அறனும்**
**பொருளும் அதனின்ஊங்கு இல்.**

'' மகனே, நீ சொற்களின் வலிமையை உணர்ந்து , கேட்டுக் கொண்டிருப்பவர்களின் தகுதியையும் அறிந்த பின்பே பேசுகிறாய். அது தான் சிறந்த அறம் என்பதை நீ அறிவாய். அதனால் எந்த மேடையிலும் உனது பேச்சுக் குழம்பியதில்லை. சென்றவாரம் பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் திருஞானசம்பந்தரைப்பற்றிப் பேசினார். நல்ல குரல் வளம். நல்ல பேச்சு. ஆனால் பிள்ளைகள் கேட்கவில்லை. அதற்குக் காரணம் பாடப்புத்தகத்தில் அவ்விடயம் உள்ளது. அதை ஒப்புவித்ததால் பிள்ளைகள் பாடம் நடைபெறுகிறது என்று நினைத்தனர் '' என்று கவலையுடன் பண்டிதர் சொன்னார். என்றது குமரன் எலி.

'' எந்த இடத்தில் எதைப்பேச வேண்டும் என்பதனைப் பலர் அறிந்ததில்லை. கேட்டதை யார் கேட்கப்போகிறார்கள் '' என்றது லட்சுமி எலி.

**645. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை**
**வெல்லும்சொல் இன்மை அறிந்து**

'' நகுலா, நீ சொல்கின்ற சொல்லை வெல்லக்கூடிய வேறு சொல் இல்லை என்பதை அறிந்த பிறகே பேசுவாய். நீ முன்பொரு முறை பாடசாலையில் எறிபக்த நாயனாரைப் பற்றிப் பேசினாய். அவரது வரலாற்றை பெரிதாக யாரும் அறியாததால் அமைதியாக இருந்து மாணவர்கள் கேட்டார்கள். ஒரு உணவைக் தினமும் உண்ணக் கொடுத்தால் குழந்தைகள் அல்ல

பெரியவர்களே உண்ண மாட்டார். அரிசி மாவிலிருந்து பல உணவுகளைச் செய்வது போல இதிகாசபுராணங்களில் மக்கள் அறியாத லட்சக்கணக்கான கதைகள் உள்ளன. பேச்சாளர் அவை பற்றிப் பேசலாம். என்று பண்டிதர் கூறினார்'' என்றது குமரன் எலி.

''அதை வாசிக்க எந்தப் பேச்சாளருக்கு நேரம் இருக்கு பேருக்ககாகவும்,புகழுக்காகவும், காசுக்காகவும்பேசி மதிப்பை இழக்கின்றனர் '' என்றது லட்சுமி எலி.

**646 வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்**
**மாட்சியின் மாசற்றார் கோள்.**

'' கேட்பவர்களைக் கவரக் கூடியதாகத் தனது எண்ணங்களை வெளிப்படுத்தி, பிற அறிஞர் சொன்னதில் உள்ள கருத்தை ஆராய்ந்து பேசுவது நல்ல பேச்சாளரின் பண்பாகும். இதை எப்படிச் சொன்னாலும் சற்குணத்திற்கு புரிவதில்லை. அதனால் தான் இவன் பேசுவது மற்றவர்களுக்கு புரியாதுள்ளது.பேசுபவனின் பேச்சில் நிறைந்த கருத்துக்கள் இருக்க வேண்டும்.அதை இலகுவான மொழியில் சொல்லல் வேண்டும். இது புரியும் வரை சற்குணத்தின் பேச்சு எடுபடாது என்று பண்டிதர் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

'' பலர் தமது வித்துவத்ன்மையை காட்டத்தான் எழுதுகிறார்கள். பேசுகிறார்கள் மொழிநடை கடினமானால் படிக்க மாட்டார்கள். பேசுவது புரியவிட்டால் அலட்டல் என்பார்கள்'' என்றது லட்சுமி எலி.

**647 சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது**

'' நகுலா, சொல்ல வேண்டியவற்றைத் தெளிவாகக் கூற வேண்டும்.சொல்லும் போது மறந்து விடக் கூடாது. அதைவிடச் சபைக்கு அஞ்சக் கூடாது. ஆனால் சற்குணம் அப்படி இல்லையே. பேச்சு வன்மையைத் தவிர வேறு எதுவும் இல்லை. நிறையப் புத்தகங்களைக் கொடுத்தேன். அதை அவன் திறந்து பார்ககவில்லை. பார்த்திருப்பானேயானால் அவற்றில் உள்ளவற்றைப் பேசியிருப்பான். அவனைத் சொல்லித்திருத்தவும் முடியவில்லை. அதனால் வாரத்தில் ஓரிரு தினங்களாவது பேசு. அப்போது தான் எமது இளஞ்சிறார்கள் பயனடைவர்''. என்று பண்டிதர் சொன்னவர். என்றது குமரன் எலி.

'' மக்கள் பயனடைய வேண்டுமென்று பலர் நினைப்பதில்லை. அதனால் தான் மக்கள் பேச்சுக்கேட்க வருவதில்லை'' என்றது லட்சுமி எலி.

**648. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்.**

“ தான் சொல்லவேண்டிய கருத்துக்களை ஒழுங்கிபடுத்திச் சொல்லவேண்டிய முறைப்படி இனிமையாகச் சொல்லக் கூடியவர்களின் பேச்சைக் கேட்டு நடக்க உலகம் தயாராக இருக்கும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். சற்குணத்தின் பேச்சைக் கேட்ட யாரும் வருகிறார்களில்லை. தொலைக்காட்சியில் பேசினால் அதை நிறுத்தி விடுகிறார்கள். இந்த நிலை மாற வேண்டும் ” என்று பண்டிதர் சொன்னவர் என்றது குமரன் எலி.

“ தொலைக்காட்சியை நிறுத்துவது பேச்சாளிக்குத் தெரியுமா.... என்ன? சபையில் சலசலப்புள்ளதையே அறியாது எத்தனை பேர் பேசுகிறார்கள்” என்றது லட்சுமி.

**649. பலசொல்லக் காமுறுவர் மன்றமாசு அற்ற**
**சிலசொல்லல் தேற்றா தவர்**

நகுலா, குற்றம் இல்லாத சில சொற்களைப் பேசத் தெரியாதவர்கள் தான் சபையில் நீண்ட நேரம் பயனற்ற சொற்களைப் பேசிக்கொண்டிருப்பார்கள். சற்குணம் பேசத் தொடங்கினால் என்ன பேசுகிறோம். புரியாது பேசுவான். சபையையும் கவனிக்கமாட்டான். சொன்னவற்றையே திரும்ப திரும்பச் சொல்லான். அதனால் நல்லதொரு பேச்சாளனை உருவாக்கவேண்டும். என்று பண்டிதர் சொன்னவர். என்றது குமரன் எலி.

“ பேச்சாளன் இவற்றை உணரும் வரை அவனைத் திருத்த முடியாது. பேசும்போதும் சரி பேசிமுடிந்த பின்பும் எதைப் பற்றி பேசினோம் என்று அறியாதவர்கள் ஒருபோதும் திருந்தமாட்டார்கள் ” என்றது லட்சுமி எலி.

**650. இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்றது**
**உணர விரித்துரையா தார்.**

“ நகுலா நான் சற்குணத்திற்குப் பலமுறை கூறியுள்ளேன்; “ சற்குணம் தாம் கற்றறிந்த கருத்துக்களை சபையோர் புரிந்து கொள்ளும்படி சொல்லும் ஆற்றல் இல்லாதவர்கள். கொத்தாக மலர்ந்தும் கூட, மணம்பரப்பாத மலரை ஒத்தவர்கள்” என்று கூறியும் அவனுக்குப் புரியுதில்லை. நான் அவனைச் சிபார்சு செய்தால் எனது அறிவையும் பலர் சந்தேகிப்பார்கள். அதனால் சற்குணம் பேசுவதை விடப் பேசாமல் இருப்பது மேலானது” என்று பண்டிதர் சொன்னவர். என்றது குமரன் எலி.

“ பண்டிதரை மாதிரி ஒவ்வொருவரையும் ஒதுக்கினால் இறுதியில் யாரும் எஞ்சமாட்டார்கள்” என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 66 வினைத்தூய்மை**

**651. துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்**
**வேண்டிய எல்லாம் தரும்.**

“நகுலன் பண்டிதரிடம் வந்து சொன்னான், மனோகரன் பெரிய வர்த்தகன். வெளிநாடுகளில் இருந்து பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பவன். எனது நண்பர்கள் மனோகரனிடம் பொருட்களை வாங்குமாறு கூறுகின்றனர். நான் என்ன செய்யலாம் ” அதற்குப் பண்டிதர் சொன்னார்; “மகனே, ஒருவருக்கு நல்லவர்களின் துணை செல்வத்தைக்கொடுக்கும். அவன் செய்யும் நல்ல செயல்கள் விரும்பிய எல்லாவற்றையும் கொடுக்கும். இப்போது நீ பொருட்களைக் கொள்வனவு செய்யும் துரைசிங்கம் நல்லவர். பல அறச்செயல்களை செய்பவர். ஒழுக்கமானவர். அதனால் தொடர்ந்து அவரிடமே பொருட்களைக் கொள்வனவு செய்வது தான் நல்லது ” என்றவர் என்றது குமரன் எலி.

“செய்யும் தொழிலைச் சரிவரச் செய்வது தான் நல்லது. ஆளை மாற்றுவதால் எதுவும் நடக்காது ” என்றது லட்சுமி எலி.

**652. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை.**

“ நகுலா, மனோகரன் இப்போது நட்டப்பட்டுள்ளதாகப் பேசிக் கொள்கிறார்கள். இது உனக்குத் தெரியாதா…? ஒருவன் புழையும் அறத்தையும் தராத எச் செயல்களையும் செய்யக்கூடாது. துரைசிங்கம் புகழுடையவர், அறச் செயல்களைச் செய்பவர். அப்படியிருக்கும்போது காரணமின்றி ஆளை மாற்ற வேண்டிய அவசியம் உனக்கு ஏன் ஏற்பட்டது. மனோகரன் அளவுக்கதிகமாகக் கடன் பட்டமையால் அதைக் கொடுக்கமுடியாது கஷ்டப்படுகிறான். அதனால் தான் நண்பர்களை அனுப்பி ஆள்ச் சேர்க்கிறான்” என்று பண்டிதர் கூறினார் என்றது குமரன் எலி.

“பேராசையால் கடன்பட்டு பெரிய வர்த்தக நிலையங்களை நிறுவிய பலர் இப்போது காணாமல் போய்விடுகிறார்கள். சிலர் தற்கொலை செய்கிறார்கள்” என்றது லட்சுமி எலி.

**653. ஓஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**ஆஅதும் என்னும் அவர்.**

“ மகனே, நீ மேலும் மேலும் உயர்வடைய வேண்டும் என்று விரும்பினால், தம் புகழ் கெட்டுப்போதவற்குரிய எச் செயல்களையும் செய்யக்கூடாது. அத்துடன் புகழை அழிக்கும் செயல்களைச் செய்பவர்களுடன் சேரவும் கூடாது. இப்போது பலர் அளவுக்கதிகமாகக் கடன் பட்டே தொழில் செய்கின்றனர். கடன் புகழை அழிக்கும். படிப்படியாகத் தொழிலையும் அழிக்கும். மனோகரன் ஏராளமான விவசாய நிலங்களை விலைக்கு வாங்கியுள்ளான். ஓரளவு முதல் உள்ளவன் அகலக்கால் வைத்தல் கூடாது” என்று சொன்னவர். என்று பண்டிதர் சொன்னவர் என்றது குமரன் எலி.

“ படோபகாரமாக வாழ்பவர்களின் தொழில் முன்னேறாது. அவர்கள் தம்மை பெரும் வசதிபடைத்தவர்களெனக் காட்டி மக்களை ஏமாற்றவும் கூடும் ” என்றது லட்சுமி.

**654. இடுக்கண் படினும் இழிவந்த செய்யார்**
**நடுக்குஅற்ற காட்சி யவர்.**

“மகனே, கேசவனின் வரலாறு உனக்குத் தெரியும். அவன் படோபகாரமாக வாழ்ந்ததால் மக்கள் அவனைப் பெருந்தனவந்தனென எண்ணினார். தம்மிடமுள்ள பணம் முழுவதையும் அவனிடம் கொடுத்து விட்டு வட்டியைப் பெற்றனர். ஒருவருடம் ஒழுங்காக வட்டிப்பணத்தைக் கொடுக்கப்பலர் வங்கியில் வைப்பிலிட்ட தொகையை மீளப் பெற்று அவனிடம் கொடுத்தனர். அவன் பலகோடி ரூபா சேர்ந்ததும் நாட்டை விட்டு ஓடிவிட்டான். அறிவுள்ளவர்கள், துன்பம் வந்த போதும் அத்துன்பத்தைத் தீர்க்கக் கூட இழிவான செயல்களைச் செய்யமாட்டார்கள்” என்று பண்டிதர் கூறினவர் என்றது குமரன் எலி.
“இப்போ படோபகாரத்தை நம்பிப் பலர் ஏமாந்துள்ளனர். பெண்கள் தான் ஏமாறுவது கூட” என்றது லட்சுமி எலி.

**655. எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்**
**மற்றஅன்ன செய்யாமை நன்று**

“மகனே , தவறு செய்யாமல் வாழமுடியாது. சில சமயங்களில் அறியாமல் பல தவறுகள் செய்யப்படுகின்றன. ஆனால் அவற்றை மீண்டும் செய்யக்கூடாது. மனோகரன் அறிந்தே தவறுகளைச் செய்பவன். அவன் பத்து வருடங்களுக்கு முன் கதிரேசனிடம் கொஞ்சப்பணம் கடனாகப் பெற்றவன். இன்று அவன் நன்றாக இருப்பதைச் சொல்கிறாய். அப்போ கதிரேசன் பெருங்கஷ்டப்பட்டவர். அத்துடன் அவர் நல்லவர் என்று நம்பிப் பலரை உதவி செய்யுமாறு கூறியவர். ஆனால் உதவி செய்த எவரையும் மனோகரன் மதிப்பதில்லை. இதை ஏன் செய்தோம் என்று மற்றவர்கள் எண்ணி வருந்தும் பல செயல்களை மனோகரன் செய்தவன். என்று பண்டிதர் கூறியவர்” என்றது குமரன் எலி.
“விரைவாகப் பணக்காரர் ஆகலாம் என்று நினைத்துச் செய்பவர்கள் விரைவாக அழிந்து போவர்” என்றது லட்சுமி எலி.

**656. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை.**

“ பெற்றதாய் பசியால் வருந்தினாலும், அறிவுடையோர் பிறர் பழிப்பதற்குக் காரணமான இழிவான செயல்களைச் செய்யமாட்டார்கள். ஆனால் மனோகரன் தனது தாய்க்கு ஒரு கார் வாங்கிக் கொடுத்திருக்கிறான். அதற்குச் சாரதியும் உண்டு. ஆனால் அவனுக்குக் கடன் கொடுத்தவர் இன்று சாப்பாட்டுக்கு வழியில்லாமல் தெருக்களில் அலைகின்றனர் என்று பண்டிதர் கூறியவர் ” என்றது குமரன் எலி.

“சில பேர் சிலகாலத்திற் கென்றாலும் வசதியாக வாழ்வோம் என்று நினைத்து வாழ்கிறார்கள்” என்றது லட்சுமி எலி.

**657 பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்**
**கழிநல் குரவே தலை.**

“மகனே உனது தந்தை சான்றோராக இருந்து செல்வத்தைத் தேடித்தந்துள்ளளார். அவர் பழிக்குக் காரணமாக இழிவான தொழில்கள் எதையும் செய்வதில்லை. அப்படியான இழி தொழில்களைச் செய்வதை விட நல்லவராக வாழ்ந்து வறுமைப்பட்டாலும் நல்ல வாழ்க்கை என்பார்கள். வசதி இருக்கின்றது. என்பதற்காகச் சிலர் இழிவானதொழிலைச் செய்கின்றனர். சிலர் இழிவான தொழிலைச் செய்தால் தான் முன்னேறலாம் என்று நினைக்கிறார்கள். நீ செய்யும் தொழில் உனக்குப் போதும். அதனால் இழிவனா தொழிலைச் செய்வோரோடு சேராதே. அது பாவம். என்று பண்டிதர் சொன்னவர்” என்றது குமரன் எலி.

“பணம் தேடுவதற்கும் தொழிலுக்கும் சம்பந்தமில்லை என்றே பலர் நினைக்கின்றனர்” என்றது லட்சுமி எலி.

**658 கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்**
**முடிந்தாலும் பீழை தரும.**

“ சொல்லத்தகாதவையென்று பெரியவர்களால் விலக்கப்பட்ட செயல்கள் ஒருவேளை வெற்றியைக் கொடுத்தாலும் முடிவில் அவை தீராத துன்பத்தையே கொடுக்கும். உருத்திரகுமாரனைப்பார். செய்யக்கூடாதவற்றை எல்லாம் செய்து பணம் சேர்த்தான். அவனது மகள் முப்பத்தைந்து வயதாகியும் கரைசேரவில்லை. காசிநாதனின் மகளுக்கு இருபது வயது. இரண்டு பிள்ளைகளுக்குத் தாய். செய்யக் கூடாதவற்றைச் செய்தால் பணம் குவியும் மகிழ்ச்சி உண்டாகும். அது தாக்கும் போதுபரம்பரையைக் கூட அழித்து விடும். என்று பண்டிதர் கூறினார்” என்றது குமரன் எலி.

“தீமைகள் செய்வோர் தீய பயனை அடைவார் எனக் கண்டும் யாரும் திருந்துவதாக இல்லை” என்றது லட்சுமி எலி.

**659 அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்**
**பிற்பயக்கும் நற்பா லவை.**

''பிறரை வருத்தி ஒருவன் அடைந்த பொருட்கள் அனைத்தும் ஒரு காலத்தின் பின் அவன் வருந்தும் படியாக சென்று விடும். நல்ல வழியில் சேர்த்து பெருள் பேனாலும் அது நன்மையையே தரும். மனோகரன் எத்தனை ஏழைகளிடம் ஆசை வார்த்தை பேசி பணத்தைப் பெற்று ஏமாற்றினான். இப்போ வெளிநாட்டில் உள்ள எம்மவர் ஒருவர் அவரை ஏமாற்றி விட்டாராம். அது தான் பொருள் தேட அவன் புதுப் புது வழிகளை நாடுகிறான். கதிரேசனிடம் வாங்கிய பணத்தை மனோகரன் கொடுக்கவில்லை. அதனால் கதிரேசன் கெட்டுப் போனாரா…? இல்லையே என்று பண்டிதர் கூறினார்'' என்றது குமரன் எலி.

''ஒருவன் ஒருவரை ஏமாற்ற அவனை இன்னொருவன் ஏமாற்றுவான் இது உலக நியதி'' என்றது லட்சுமி எலி.

**660. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்**
**கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று**

''மகனே, வஞ்சகமான முறையில் பொருளைச் சேர்ப்பது பாதுகாப்பது பச்சை மண்பாத்திரத்தில் நீரை ஊற்றிப் பாதுகாப்பதை போன்றது. இந்த ஊரில் வசிப்பவர்களைப் பார் வஞ்சகமான முறையில் பணம் சேர்த்த அனைவரும் துன்பப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். உனது தந்தை சேர்த்த பொருள் யாவும் பாதுகாப்பாக இருப்பதற்குக் காரணம் அவர் வஞ்சகமான முறையில் பொருள் சேர்க்காமையே யாகும். அதை நீநல்லவழியில் பாதுகாத்து பயனடை என்று பண்டிதர் சொன்னவர். '' என்றது குமரன் எலி.

''பண்டிதர் அவனை தகாத வழியில் செல்லவிடமாட்டார். மீறிச் சென்றால் பண்டிதர் விலகி விடுவார்'' என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 67 வினைத்திட்பம்**

**661.வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற**

நவராசா மிகுந்த கவலையுடன் வந்து நகுலனுக்குச் சொன்னான், ''நகுலா, எனது காதல் விஷயம் முழுவதும் உனக்குத்தெரியும். எனது காதலி நர்மதாவின் தகப்பன் பெருங்குடிகாரன் . கலகம் செய்பவன். தாய் வாய்க்காரி. ஊராருடன் பிரச்சினைப்படுபவள். சகோரங்களும் அப்படி. எனது வீட்டார் கௌரவமானவர்கள். மாமிசம் சாப்பிடுவதில்லை. நர்மதாவைத்திருமணம் செய்தால் அம்மா இறப்பேன் என்று சொல்கிறா. அதைநினைக்கப்பயமாக இருக்கிறது. என்னைத் திருமணம் செய்யாவிட்டால் தான் உயிர் துறப்பேன் என்று அவள் வெருட்டுகிறாள். நான் என்ன செய்வது என்று அழுதான்'' அதற்கு நகுலன் சொன்னான்; ''காதல் இதையெல்லாம் ஆராய்ந்து வருவதில்லை. ஒரு செயலின் வலிமை என்பது செயலீடுபவனின் மனவலிமை தான். பணம்

பொருள் ஆளுதவி என்பன வலிமையல்ல. துணிவுடன் செயலில் ஈடுபடுவது தான் மன வலிமை. மனவலிமையுடன் காதலித்தநீ, இப்போ ஏன் கலங்குகிறாய்..? பெற்றோர் உற்றார் உறவினர் மேலானவற்களை நீ காதலித்தாலும் எதிர்க்கத் தான் செய்வார்கள். அதனால் மனத்திடத்துடன் செயற்படு என்றவன்'' என்றது குமரன் எலி.

''ஆசை அறுபது நாள். மோகம் முப்பது நாள் என்பினை. இப்ப ஆசை ஆறுநாள் மோகம் மூன்று நாளாய்ப் போச்சு'' என்றது லட்சுமி எலி.

**662. ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டன்**
**ஆறுஎன்பர் ஆய்ந்தவர் கோள்.**

''எல்லாவற்றையும் நீ முன்பே உணர்ந்திருக்க வேண்டும். நான் உனக்கு இது பற்றிச் சொன்னபோது நீ எனக்கு அவள்தான் முக்கியம். அவளில்லாத வாழ்க்கையை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது என்றாய். துன்பம் வராமல் காப்பதும், தட்டித் தவறித்துன்பங்கள் வந்தால் மனம் தளராமல் இருப்பதும் மனவலிமை உடையவனின் தன்மைகளாகும். அதனால் நன்றாக யோசித்து முடிவெடு. பெற்றோர் காதலிப்பதை விரும்பமாட்டார்கள். அவர்கள் சாவேன் என்று மிரட்டுவார்களே தவிரச் சாகமாட்டார்கள். என்று நகுலன் தவராசாவுக்குச் சொன்னவன் ''என்றது குமரன் எலி.

''ஒரு கேவலமான குடும்பத்தை எந்தத் தாய் தான் விரும்புவாள். இப்ப கவர்ச்சி தானே முக்கியம். சாப்பிடவழியில்லாவிட்டாலும் விதம்விதமாகத் தம்மை அலங்கரிப்பவர்கள் தான் உள்ளனர்'' என்றது லட்சுமி எலி.

**663. கடைக்கொட்கச் செய்தக்கது ஆண்மை இடைக்கொட்கின்**
**எற்றா விழுமம் தரும்.**

''நீ அவள் சிரித்தவுடனேயே பெரும் மகிழ்ச்சி கொண்டு ஊரெல்லாம் சொன்னாய். செய்யும் செயலை நிறைவேற்றிய பின்பு சொல்லவே செயலுக்கு வலிமை. இடையில் வெளிப் படுத்தினால் தீராத துன்பங்கள் பலவும் வரும். நீ இரகசியமாகக் காதலித்து விட்டுச் சமயம் பார்த்து அவளை அழைத்துச் சென்றிருந்தால் பிரச்சினை பெரிதாக இருந்திராது. நீ அவள் கதைக்கும் கதைகளையும் நண்பர்களுக்குக் கூறுவாய். அதனால் தான் இந்த நிலை என்று நாகராசாவுக்கு நகுலன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''பெண்கள் சிரித்தாலே ஆண்கள் தடுாறிப் போவினை.பின் மகிழ்வோடு காதலிப்பினை. பிரச்சினை கூடினால் பிரிய நினைப்பினை. இது தான் தற்போதய காதல்'' என்றது லட்சுமி எலி.

**664. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்**

“ஆலோசனைகள், புத்திமதிகள் சொல்வது யாருக்கும் மிகவும் எளிதானது. சொல்லியபடி செய்து முடித்தல் என்பது மிகவும் சிரமமானது. நீ அவளைக் காதலித்ததால் அவளைத் திருமணம் செய்தாக வேண்டும். காதலிக்கும் போதே அவளின் நிலை உனக்குத் தெரியும். காதலிக்கும் போது என் உயிர்போனாலும் உன்னைக் கைவிடமாட்டேன். நான் எடுக்கும் பிறவிகள் தோறும் நீ தான் எனக்கு மனைவி என்று யோசனைகள் எதுவுமின்றிக் கூறிவிட்டு இப்போ யோசிப்பதால் பயனில்லை” என்று நகுலன் சொன்னவன் என்றது குமரன் எலி.

“காதலிக்கும் போது குறைகள் யாவும் நிறைகளாகத் தெரியும்”என்றது லட்சுமி எலி.

**665. வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்**
**ஊறுஎய்தி உள்ளப் படும்**

“நவராசா ஒரு செயலைத் தொடங்கு முன் தீர ஆலோசித்த பின்பே தொடங்குதல் வேண்டும். செய்தபின் ஆலோசித்தல் கூடாது. செய்து முடிக்கும் திறமையால் புகழ்பெற்றவரின் செயலின் ஆற்றலை நாட்டை ஆளும் அரசனும் போற்றுவான். என்பார்கள். நீ அவளை அழைத்துச் சென்று தனிக்குடித்தனம் நடத்து. நீ சிறப்பாக வாழ்ந்தால் உன்னைப்பெற்றோர் விரும்புவர். ஊரவர் புகழ்வர். என்று நகுலன் சொன்னவன் ” என்றது குமரன் எலி.

“ கல்யாணச் செலவில் இருந்து குடும்பம் நடத்திற செலவையும் பெண் வீட்டாரிடம் வாங்கிப் பழக்கப்பட்டோர் தனிக்குடித்தனம் எத்தனை நாட்களுக்கு நடத்துவர்” என்றது லட்சுமி எலி.

**666. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெறின்.**

“ நவராசா, எண்ணியவற்றை எண்ணியபடி செயற்படுத்துவதில் உறுதியுடன் இருந்தால், அவர் எண்ணியபடி செயலில் வெற்றி காண்பர் ” என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்; “ நர்மதா ஏழை. வசதியில்லாதவள். அவளை மகாராணி மாதிரி வைத்துக் காப்பாற்றுவேன் என்று நீ எனக்குப் பலதடவைகள் கூறியுள்ளாய். உனது எண்ணமும் அது தானே. அதனால் அதைச் செயற்படுத்து. நீ அவளைக் காதலிக்கும் போதே உனது பெற்றார் அதை விரும்பமாட்டார்கள் என்று சொன்னனீ.இப்ப ஏன் புதிதாகச் சிந்திக்கிறாய்” என்று நகுலன் கேட்டவன் என்றது குமரன் எலி.

“ அது அப்போதய மயக்க நிலை. இது இப்போதைய வாழ்க்கை நிலை” என்றது லட்சுமி எலி.

**667. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி யன்னார் உடைத்து.**

“நவராசா, பெரியதேரை இயக்குவது மிகச்சிறிய அச்சாணி. அதுபோலச் சிலர் தாம் மேற்கொள்ளும் செயலில் மிக்க திறமையுள்ளவராக விளங்குகின்றனர். அதனால் யாரையும் அவரது உருவத்தைக் கொண்டு அளவிட முடியாது. மணியண்ணை தான் காதலித்த மிகவும் வறுமையான பெண்ணை உடுப்புக்களைத் தானே வாங்கிக்கொடுத்துக் கூட்டி வந்தவர். பெற்றோர் உற்றார் உறவினர் எவரும் பதினைந்து இருபது வருடங்கள் அவர்களைச் சேர்க்கவில்லை. மணியண்ணை தனது ஐந்து பிள்ளைகளையும் கற்பித்தார். மூன்றுபேர் வைத்தியர்கள். இப்போ உற்றார் உறவினர் எல்லாம் அவரின் வீட்டில் தான் இருக்கிறார்கள். பிள்ளைகளைக் கட்டப்போட்டி போடுகிறார்கள். அதனால் மனவுறுதியோடு செயற்படு” என்று நகுலன் சொன்னவன் என்றது குமரன் எலி.

“அவ்வளவு காலமும் கஷ்டபடமுடியுமே. மெய்மையான பழையகாதல் அது . இது சலசலப்புள்ள நவீன காதல்” என்றது லட்சுமி எலி.

**668. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கம் கடிந்து செயல்.**

“மனம் விரும்பி ஏற்றுக்கொண்ட செயலை மனம் கலங்காமல், காலம் தாழ்த்தாமல் தளராத முயற்சியோடு செய்து முடிக்க வேண்டும். இனி அதைப்பற்றி யோசிக்கக்கூடாது. நாம் நினைத்தபடி வாழ்க்கை அமைவதில்லை. பல இலட்சம்ரூபா சீதனத்துடன் செய் பலர் மனைவியின் தாலிக் கொடியை விற்றுள்ளனர். உடுத்த உடையோடு பெண்ணைக்கூட்டிவந்த பலர் கோடீஸ்வரராக உள்ளனர். அதனால் கடவுளிடம் பணியை ஒப்படைத்துவிட்டுச் செயற்படு என்று நகுலன் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“இரண்டு மனம் உள்ளவை செயற்படமாட்டினை. காதலிக்கும் போதும் யாரையும் கேட்டே காதலித்தவர். இப்போ ஏன் கேட்கிறார்”என்று கேட்டது லட்சுமி எலி.

**669. துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி**
**இன்பம் பயக்கும் வினை.**

“நவராசா, எதைச் செய்தாலும் செய்யும்போது பல இடையூறுகள், துன்பங்கள், பிரச்சினைகள் வரத்தான் செய்யும். வரும்போது துணிவுடன் செயற்பட்டவர்கள் தான் முடிவில் இன்பமடைவார்கள். நர்மதா நல்ல பண்பான பெண். அரசபணியில் உள்ளாள். நீ கமக்காரன். ஏதோ விதி வசத்தால் அவள் உன்மீது காதல் கொண்டுவிட்டாள். மிகவும் கெட்டிக்காரியான அவள் ஒரு காலத்தில் உயர்ந்த நிலைக்கு வருவாள். அதனால் சிந்திப்பதை விட்டுவிட்டுச் செயற்படு என்று நகுலன் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“பெடியள் படிக்கிற வயதிலை ஊர்சுற்றுவது காவாலித்தனத்திலீடுபடுவது, பின் பிழைப்பதற்கு அரசபணி செய்யும் பெண்களைத் திருமணம் செய்ய விரும்புவது அது தானே இப்ப நாகரீகம்” என்றது லட்சுமி எலி.

**670. எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்**
**வேண்டாரை வேண்டாது உலகு.**

“நவராசா, நீ பெரும் கமக்காரன். நல்ல வருமானம் பெறுகிறாய். அப்படியிருந்தாலும், எடுத்த செயலை முடித்து வெற்றி காண்பதில் உறுதியாக இல்லாதவரை உலகம் மதிக்காது. இப்போது உனது காதலைப்பற்றித் தான் ஊர்ச்சனம் கதைக்கிறது. இவர் எல்லாம் தெரிந்து தானே அவளைக் காதலித்தவர். தகப்பன் பெருங்குடிகாரன். சகோதரங்கள் உருப்படியானவர்கள் இல்லை. வீடு வாசல் இல்லை. இருப்பதும் இரவல் காணி என்று தெரிந்து காதலித்து, அவளை பல இடங்களுக்கும் அழைத்துச் சென்றுவிட்டு இப்ப கௌரவம் பார்க்கிறார். இது சரி தானா… என்று ஊரவர் கதைப்பது உனக்குத் தெரியாதா…? பெண்பாவம் பொல்லாதது என்பார்கள் அதனால் அவளை அழைத்துச் செல் என்று நகுலன் கூறியவன்” என்றது குமரன் எலி.

“இரண்டு நாள்க்கதைத்தவுடன் பெண்கள் அவனை நம்பி அவனோடு உலாத்துவினை. பிரச்சினை வந்த பின்புதான் யோசிப்பினை” என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 68 வினை செயல்வகை**

**671. சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு**
**தாழ்ச்சியுள் தங்குதல் தீது.**

“நவராசா, ஆராய்ந்து எண்ணுவது, பெரியவர்களிடம் ஆலோசனை கேட்பது துணிவைப் பெறுவதற்கேயாகும். அத்தகைய உயர்ந்த துணிவைப் பெற்ற பின் காலம் தாழ்த்துவது தீமையைத் தான் தரும். ஆறு வரிசமாய் அவளைக் காதலிக்கிறாய்.அடிக்கடி அவளைச் சந்திக்கிறாய்.இப்போ பெற்றோருக்கும் உறவினருக்கும் விருப்பமில்லை என்கிறாய். இது உனக்கு ஆறு வருடங்களுக்கு முன்பே தெரியும். பிறகேன் என்னிடம் ஆலோசனை கேட்டாய்? நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். இப்போ உனது பெற்றோர் தகுதியான சம்பந்தம் பேசுகிறார்கள். விரும்பினால் அதைச் செய். என்று நகுலன் கூறியவன்” என்றது குமரன் எலி.

“காதலிப்பது தன்னுடைய ஆசையைத் தீர்க்கத் தானே. கல்யாணம் செய்வது பொருளுக்காக. பெண்ணைப் பெற்றவர்கள் ஆராயாது எதையும் செய்வர்” என்றது லட்சுமி எலி.

**672 தூங்குக தூங்கிச் செயற்பால தூங்ககற்க**
**தூங்காது செய்யும் வினை.**

“காலம் தாழ்த்திச் செய்ய வேண்டியவற்றை காலம் தாழ்த்திச் செய்யலாம். உனது விஷயம் உடனே செய்ய வேண்டியது. உனது பெற்றோர் பெண் தேட, பெண்ணின் பெற்றோர் உனது செயல்களை ஆராயாது உனக்குப் பெண் தர விரும்புகிறார்கள். அது உன்னிடம் உள்ள பணத்திற்காக. எல்லாம் தெரிந்த சிவராசாவே உனகுப் பெண் தர விரும்புகிறார்.வாலிப வயதில்

காதல் வாறது இயல்பானது. காதலிப்போர் எல்லோரும் திருமணம் செய்கிறார்களா? நவராசா நல்லவர். நீ எனது மகளைச் செய்யச் சொன்னால் செய்வேன். கேட்டுச் சொல் என்றவர். அதனால் தான் நீ பின்னடிக்கிறாயா? என்று நகுலன் கேட்டவன்'' என்றது குமரன் எலி.

''முன்பு பெண்களின் பாரதூரமான பிரச்சினைகளை ஊரவர் இனத்தவர் மறைத்தவை. இப்ப தெரிந்தும் செய்யினை'' என்றது லட்சுமி எலி.

**673. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்காற்**
**செல்லும்வாய் நோக்கிச் செயல்**

''நவராசா,செய்யக் கூடிய நல்ல செயல்களை உடனே செய்து முடிக்க வேண்டும். முடியாத போது தக்க வேறு வழிகளை ஆராய்ந்து செயற்படல் வேண்டும். காதலித்த உன்னால் அவளைக் கூட்டிச் செல்ல முடியும். அதனால் அவளை உடனே அழைத்துச் செல். அப்படிச் செய்ய முடியா விட்டாலும் கலியாணப் பதிவையாவது பதி. கலியாணப் பதிவு செய்தால் உன்னை வற்புறுத்த முடியாது. பின் உனது பெற்றோர் விரும்பும் போது கல்யாணத்தைச் செய்யலாம்'' என்று நகுலன் சொன்னவன் என்றது குமரன் எலி.

''பாவம் பழி உலக நடைமுறைகள் பற்றித் தெரியாதவர்கள் தாம் நினைத்தவற்றைத் தான் செய்வர். காதலிக்கும் போது யோசிக்காதவர்கள் இப்பேன் யோசிக்கிறார்கள். கடத்துவதற்குக் தான்'' என்றது லட்சுமி எலி

**674 வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்**
**தீயெச்சம் போலத் தெறும்.**

''நவராசா, தொடக்கப்பட்டு இடையில் நிறுத்தப்பட்ட செயல்கள், தீராத பகை ஆகிய இரண்டும் சாம்பலுக்குள் கிடக்கும் நெருப்புப் போல இருந்து பின் பெரிய துன்பத்தைத் தரும். காதல் என்பது தெய்வீகமான உணர்வு. எனது தந்தையார் இளம் வயதில் ஒரு பெண்ணை விரும்பியவராம். பெண்ணின் பெற்றோர் வசதியானவர்கள். அவர்கள் இன்னொருவனைத் திருமணம் செய்து கொடுத்து விட்டனர். அப்பெண் காலகதியில் மன நோயாளியாகி விட்டாள். அப்பா சென்ற வாரமும் மாமாவுக்கு அதைச் சொல்லி அழுதவராம். காதல் என்ற உணர்வு பிறப்போடு தொடர்புடையது. அது எடுக்கும் பிறவிகள் தோறும் கல்வியைப் போலத் தொடர்ந்து வரும். இதை உனர்ந்து கொள் என்று நகுலனுக்குச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''காதலிப்பவர்கள் உறுதியாக இருந்தால் எதுவும் நடவாது. மனத் தைரியம் இல்லாதவர்கள், பொருளாசையுள்ளோர் பொழுது போக்கிற்காகத் தான் காதலிக்கிறார்கள். நவராசாவுக்குப் பொருளாசை வந்திட்டுது.'' என்றது லட்சுமி எலி.

**675 பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்**
**இருள்தீர எண்ணிச் செயல்.**

“ மனத்திடம் மட்டும் இருந்தால் எந்தச் செயலிலும் வெற்றி பெறலாம். தொழில் செய்வதற்கு வேண்டிய பொருட்கள் உன்னிடம் உள்ளது. தேவையான கருவிகளும் உன்னிடம் இருக்கு. தொழில் செய்யும் முறைகள் யாவும் உனக்குத் தெரியும். தொழில் செய்வதற்கேற்ற இடமும் உன்னிடம் உண்டு. தொழிலில் இலாபம் பெறுகிறாய்.தக்க காலத்தில் அவளை அழைத்துச் செல். காலந்தாழ்த்தாதே என்று நகுலன் சொன்னவன்”என்றது குமரன் எலி

“காதலிக்கு முன் யோசித்திருக்க வேண்டும். பிறரிடம் ஆலோசனை கேட்டிருத்தல் வேண்டும். இப்போ எல்லாம் முடிந்த பின் கண்டறியாத ஆலோசனை” என்றது லட்சுமி எலி.

**676. முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்**
**படுபயனும் பார்த்துச் செயல்.**

“நவராசா, நீ அவளைக் காதலிக்கும் முன் அவளைச் செய்ய வேண்டுமா என்று திட்டவட்டமாகத் தீர்மானித்திருக்க வேண்டும். காதலித்தால் வரக் கூடிய இடையூறுகள் பற்றியும் தீர்மானித்திருக்க வேண்டும். திருமணம் செய்த பின் வரவிருக்கும் பயன்களையும் ஆராய்ந்த பின்னே காதலித்திருக்க வேண்டும். கண்டவுடன் காணக்கிடைக்காத தேவதை என்ற நினைப்புடன் காதலித்து விட்டு இப்போ பலதையும் சிந்திப்பது அறிவற்ற செயல். என்று நகுலன் கூறினவன்” என்றது குமரன் எலி.

“உதை முன்பு யார் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். அப்போதய வாலிபமிடுக்கு எதையும் செய்யச்சொல்லும். அந்த நேரமே செய்திருந்தால் பிரச்சினையிராது. அவள் படிப்பென்றவள். இப்ப தான் படிப்பின் அருமை தெரியுது” என்றது லட்சுமி எலி.

**677. செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை**
**உள்ளறிவான் உள்ளங் கொளல்**

“நவராசா, எடுத்துக்கொண்ட செயலில் வெற்றியடைய விரும்புகிறவன், முன்னர் அது போன்ற செயல்களில் ஈடுபட்டவர்களின் அனுபவத்தைக் கேட்டறிய வேண்டும் என்பார்கள். உனது மாமா ஓர் ஏழைப்பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்த போது அவரை யாரும் ஏற்கவில்லை. **(நல்லது கெட்டதுக்குக் கூட யாரும் செல்லவில்லை. உனது பெற்றோர்)** இன்று வரை அவருடன் தொடர்பு வைத்ததில்லை. இதெல்லாம் தெரிந்து தான் நீ காதலித்தாய். காதலிக்கும் போது நான் உனக்குச் சொன்னேன். நீ கேட்கவில்லை. இப்போது ஏதோஏதோ சொல்கிறாய்” என்று நகுலன் சொன்னவன் என்றது குமரன் எலி .

“நர்மதா நல்ல அழகி. வசீகரமானவள். அவளுக்குப் பின்னால் பலர் சுற்றினவர்கள். அவள் அவர்களை ஒதுக்கிவிட்டு இவரோடு கதைக்க இவருக்குக் கர்வம் ஏறிவிட்டது. இப்பத்தான் பணம் பொருள் பற்றித் தெரியுது” என்றது லட்சுமி எலி.

**678. வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று.**

“நவராசா, புத்திசாலிகள் ஒரு செயலைச் செய்யும்போது அதனுடன் தொடர்பான சில செயல்களையும் செய்யவேண்டும். இது ஒரு யானையை வைத்து இன்னொரு யானையைப் பிடிப்பது போன்றது’’ என்று பெரியவர்கள் சொல்வார்கள். நீ அவளைக்காதலிக்கும் போது அவளைக்காப்பாற்றவென்று. இன்னும் கொஞ்சம் கூட விவசாயம் செய்து அந்த வருமானத்தைச் சேமித்திருக்க வேண்டும். எனது மைத்துனன் ஒருவன் ஏழைப்பெண்ணைக் காதலித்தவன். அவளின் செலவுக்கெனப் பணம் ஒதுக்கிவைத்தவன். அவனது பெற்றோர் ஐந்து இலட்சம் ரூபா தந்தால் தான் தாம் சம்மதிப்போம் என்று கூறிய போது தனது பணத்தைப் பெண்ணின் பெற்றாரிடம் கொடுத்துத் தனது தகப்பனுக்குக் கொடுக்கச் சொன்னவன். என்று நகுலன் சொன்னவன்’’ என்றது குமரன் எலி.
“நல்ல இளிச் வாயன் போல இருக்கு’’ என்றது லட்சுமி எலி.

**679.நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே**
**ஒட்டாரை ஒட்டிக் கொளல்**

“நண்பர்களுக்கு நன்மை செய்து கொண்டிருப்பதைவிட, மிகவிரைவாகச் செய்ய வேண்டியது பகைவரை நண்பராக்கிக் கொள்வது தான். நீ உழைத்த பணம் முழுவதையும் உனது பெற்றோருக்குக் கொடுத்து விட்டாய். அதில் ஒரு சிறு பகுதியை வருடாவருடம் நர்மதாவுக்கு கொடுத்து அவளை ஒரு வீடு கட்டச் சொல்லியிருக்கலாம். அதனால் ஒன்றுமில்லாதவர் என்ற நிலை மாறியிருக்கும் என்று நகுலன் சொன்னவன்’’ என்றது குமரன் எலி.
“நல்ல யோசனை…. அதை முன்பே சொல்லியிருக்க வேண்டும்’’ என்றது லட்சுமி எலி.

**680. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்**
**கொள்வர் பெரியார்ப் பணிந்து.**

“நவராசா, வலிமை குறைந்த மன்னன், வலிமை கூடிய மன்னனின் படை வலிமையைக் கண்டு பயந்து பணிந்து அவனை ஏற்றுக்கொள்வான். வலிமை கூடியவன் போர் செய்து வெற்றியடைவான் அல்லது போரில் மாழ்வான். இதில் நீ எந்தவகை. வலிமையான உனது பெற்றோருக்குப் பணியப்போகிறாயா? அல்லது எதிர்க்கப்போகிறியா? நல்ல முடிவை எடுக்க வேண்டியவன் நீதான். நான் ஆலோசனை கூறலாமே தவிரச் செயற்படமுடியாது’’ என்று நகுலன் கூறியவன் என்றது குமரன் எலி
“இது ஆலோசனை கேட்க வேண்டிய நேரம் இல்லை. முடிவெடுக்க வேண்டிய நேரம்’’ என்றது லட்சுமி எலி.

அதிகாரம் - 71 குறிப்பு அறிதல்

**701.கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்**
**மாறாநீர் வையக்கு அணி.**

‘‘நவராசா பண்டிதரைத் தேடி நகுலனின் வீட்டுக்கு வந்தான். அவனது முகத்தைப் பார்த்ததும் பண்டிதர் அவனது நிலையை உணர்ந்து கொண்டார்.

‘‘நவராசாரா, கடவுளால் படைக்கப்பட்ட அத்தனை உயிர்களும் காதல் கொள்கின்றன. மரம் செடி கொடிகள் கூட. இல்லாவிட்டால் காய் கனிகள் தானியங்கள் எமக்குக் கிடைக்காது நீ நர்மதாவைக் கூட்டிச் சென்று விட்டாயா? உனது பெற்றோர் அதை உணர்ந்து உன்னுடன் பெரும் பிரச்சினைப்பட்டுள்ளனர். உன்னுடைய முகத்தில் அது தெரிகிறது’’ என்று கூற நவராசாவும் நகுலனும் ஆச்சரியப்பட்டனர். பதினைந்து நிமிடங்களுக்கு முன் நடந்து பண்டிதருக்கு எப்படித் தெரியும்…? ’’ என்று ஆச்சரியப்பட்டபோது நகுலன் சொன்னான், ‘‘பண்டிதர் ஐயா, ஒருவனது முகத்தைப் பார்த்து அவனது வரலாற்றைக் கூறுவார். இப்படியானவர்கள், உலகத்திற்கு உயர்ந்த ஆபரணம் போன்றவர்கள்’’ என்று நகுலன் கூறினான’’என்றது குமரன் எலி.

‘‘நாமே சுற்றுச் சூழலைக் கொண்டு யாவற்றையும் அறிந்து கொள்கிறோம். ஆறாம் அறிவுள்ளவர்கள் தேவையில்லாத பிரச்சினைகளில் ஈடுபடுவதால் எதையும் அறிய முயல்வதில்லை. பண்டிதர் தனித்துவமானவர்’’ என்றது லட்சுமி எலி.

**702. ஐயப் படாஅது அகத்த துணர்வானைத்**
**தெய்வத்தொ டொப்பக் கொளல்.**

‘‘மகனே, ஒருவனது மனத்தில் உள்ளவற்றை அவனது கண்ணைக் கொண்டும் முகத்தைக் கொண்டும் அறிந்து கொள்ள முடியும். நீ நர்மதாவை எங்கே அழைத்துச் சென்றுள்ளாய்?என்று கேட்க நவராசா சொன்னான்; நர்மதாவின் சிறிய தந்தையார் அயலூரில் இருக்கிறார். இரவு நர்மதா வீட்டுக்கு வந்து தான் சாகப்போவதாக் கூறிச் சென்றான். இனியும் தாமதிக்கக் கூடதென்பதால் அவளை அழைத்துச் சென்றேன். என்றான் நவராசா. பண்டிதர் ஐயா முக்காலத்தையும் உணர்ந்த தெய்வம் என்றழுதான் நகுலன்’’ என்றது குமரன் எலி.

‘‘கறிவேப்பிலையைப் போலப் பண்டிதரை இவ்வூர் அறிஞர்கள் தேவைக்கு மட்டும்தானே பயன்படுத்தினை. ஒருபாராட்டு ஒரு விருது கொடுப்பாரில்லை’’ என்றது லட்சுமி எலி.

**703. குறிப்பின் குறிப்புணர் வாரை உறுப்பினுள்**
**யாது கொடுத்தும் கொளல்.**

“நவராசா, ஒருவனுடைய கண்களையும் முகத்தையும் பார்த்து அவன் என்ன நினைக்கிறான். நன்றி அறிந்து கொள்ள வல்லவனை, எவ்வளவு உயர்ந்த பொருட்களைக் கொடுத்தாயினும் தமக்குத்துணையாக்கிக் கொள்ள வேண்டும்” என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதற்காகத்தான் நான் பண்டிதரை என்னோடு வைத்திருக்கிறேன். நீ, “வயது போன காலத்தில் பண்டிதரை ஓய்வாக இருக்கவிடு என்றனீ. இப்போ பண்டிதர் என்னுடன் ஓய்வாகத்தான் இருக்கிறார்” என்று நகுலன் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“பெரியவர்களை, அறிவாளிகளை அவர்கள் வாழுங்காலத்தில் கௌரவிக்க மாட்டார்கள். குறை காண்பார்கள். இறந்து ஐம்பது நூறு வருடங்களுக்குப் பிறகு தான் சிலை வைப்பார்கள். இது மனிதரின் இயல்பு” என்றது லட்சுமி எலி.

**704. குறித்தது கூறாமைக் கொள்வாரொடு ஏனை**
**உறுப்புஓ ரனையரால் வேறு.**

“மனிதர்கள் எல்லோரும் உறுப்புக்களால் ஒன்று பட்டிருந்தாலும் அறிவில் பலர் வேறு பட்டவராவர். பண்டிதர் ஒருவனின் மனதில் உள்ளவற்றை அறிவதில் வல்லவர். உனது தந்தையை நேற்று வீதியில் பண்டிதர் கண்டவராம். உனது தந்தை மிகுந்த கோபத்துடன் உன்னை ஏசினராம். அதனால் நீ நர்மதாவை உடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்று கூற நினைத்து உன்னைத் தேடினவராம். இதைப்பற்குணத்திடம் சொல்லி உன்னைக் காணவேண்டும் என்றவராம். நீ நர்மதாவை அழைத்துச்சென்றுவிட்டு வந்துள்ளாய். பண்டிதர் எப்படியானவர் என்று உனக்குத் தெரியுதா?” என்று நகுலன் கேட்டவன்” என்றது குமரன் எலி.

“பண்டதரின் சீடப்பிள்ளைகளுக்குத் தெரியும். தெரிந்தாலும் மற்றய பிரமுகர்களுக்குப் பயப்பட்டு எதையும் செய்ய மாட்டார்கள்” என்றது லட்சுமி எலி.

**705. குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்**
**என்ன பயத்தவோ கண்.**

“எமக்கெல்லாம் கண்கள் இருந்து என்ன பயன்? கண்கள் இருந்தால் ஒருவனது கண்கள் அவனது முகத்தைப் பார்த்தே சகலவற்றையும் அறிந்து கொள்ள வேண்டும். இரண்டு வாரத்திற்கு முன்பு ஒருவன் என்னிடம் வந்து வேலை கேட்டு அழுதான். பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அதனால் வீட்டு வேலை செய்ய அனுப்பி வைத்தேன். இரண்டு நாட்களின் பின் அவனைப் பண்டிதர் பார்த்து விட்டு, “இவன் நம்பிக்கைக்குரியவன் அல்ல. உன்னை வேவுபார்க்க அவனை அனுப்பியிருப்பார்கள். இல்லாவிட்டால் திருட வந்திருப்பான்” என்றார். எனது ஊழியன் ஒருவன் இவன் அடிக்கடி மனோகரனைச் சந்தித்துக் கதைப்பதாகக் கூறினான். மனோகரன் எனது வியாபாரத்தில் பரமஎதிரி. அதனால் அவனை விலக்கினேன். பண்டிதரின் கணிப்புப் பிழைக்காது” என்று நகுலன் நவராசாவுக்குச் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“உள்ளதை உள்ளபடி சொன்னால் குடும்பத்தினருக்கே பிடிக்காது. பண்டிதர் கல்வியைப் பற்றியும் இலக்கியத்தைப்பற்றியும் கடுமையாக விமர்சிப்பதால் பலருக்கு அவரைப் பிடிப்பதில்லை’’ என்றது லட்சுமி எலி.

**706. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்.**

“மகனே, தன்னைச் சார்ந்திருக்கும் பொருட்களை அப்படியே காட்டும் கண்ணாடியைப் போல , ஒருவனது உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளை அவனது முகம் காட்டும். நெருக்கடி மிகுந்த இந்த வேளையில் நீ என்னைத் தேடி வந்திருக்கிறாய். உனக்கு உதவ இப்பொழுது யாரும் இல்லை. உனது முகம் ஏதோ ஓர் உதவியைக் கேட்கிறது. அது என்ன என்று சொல். கட்டாயம் செய்வேன்’’ என்று கூற நவராசாசொன்னான்;, “கல்யாணப் பதிவை உடன் முடித்துவிடலாமென நினைக்கிறேன். சாட்சிக் கையெழுத்திடவேண்டும்’’ என்று நவராசா சொல்லும் போதே; “சரி, நான் வருகிறேன்’’ என்று பண்டிதர் கூறினார்’’ என்றது குமரன் எலி.

“இப்படி எதையும் யோசிக்காமல் பேசுவதாலும் செயற்படுவதாலும் தான் பண்டிதர் கஷ்டப்படுகிறார்’’ என்றது லட்சுமி எலி.

**707. முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ உவப்பினும்**
**காயினும் தான்முந் துறும்.**

“மகனே, ஒருவன் மகிழ்ந்தாலும், வெறுப்புக் கொண்டாலும் அந்த உணர்ச்சிகளை முகம் காட்டிவிடும். அப்படிக் காட்டுவதில் முகத்திற்கு இணையானது வேறு எதுவும் இல்லை. நான் உதவி செய்வேனா? இல்லையா? என்று கலவரத்துடன் வந்தாய். அதை உனது முகம் காட்டியது. இப்போது உனது முகம் மகிழ்வுடன் இருக்கிறது. உனக்கு உதவினால் உனது பெற்றோரும், உறவினர்களும் என்னைக் குறை கூறுவர். ஆனால் உனது நிலையில் நான் கட்டாயம் உதவி செய்ய வேண்டியவனாவேன்’’ என்று பண்டிதர் கூறினார்’’ என்றது குமரன் எலி.

“ தூண்டி விட்டவர்களும், ஆதரவாகப்பேசி லாபம் பெற்றவர்களும் மறைந்து விட்டனர். பாவம் பண்டிதர்’’ என்றது லட்சுமி எலி.

**708. முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி**
**உற்றது உணர்வார்ப் பெறின்.**

“மகனே, உனது முகத்தைப் பார்த்தவுடன் நீ நர்மதாவை அழைத்துச் சென்று விட்டாய் என்று புரிந்து கொண்டேன். உனது தந்தையின் முகத்தில் கோபம், ஆத்திரம், அவமானம் என்பன தெரிந்தன. அதனால் இந்த ஊருக்குச் சில காலங்களுக்கு வராதே. காலம் எல்லாவற்றையும் மறக்கச் செய்யும். இப்போ உனது முகம் பொலிவாக உள்ளது. உண்மையாகவே நீ நர்மதாவை

நேசித்துள்ளாய். வெகுசிறப்பாய் வாழ்வாய்'' என்று நவராசாவைப் பண்டிதர் வாழ்த்தியவர்'' என்றது குமரன் எலி.

''அவர் சொன்னால் அப்படியே நடக்கும். நவராசா நல்ல உழைப்பாளி. அவள் அரச ஊழியர். பிறகென்ன?'' என்றது லட்சுமி எலி.

**709. பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்**
**வகைமை உணர்வார்ப் பெறின்.**

''மகனே, உனது கண்கள் இரண்டும் கலங்கியுள்ளன. முன்னைய அமைச்சர்கள் எதிரிகளின் கண்களைப் பார்த்தே நிலைமையைப் புரிந்து கொள்வார்களாம். உனது கண்கள் உனது பெற்றோரின் நிலைப்பாட்டைப் பற்றிக் கவலை கொள்கின்றன. எந்த ஒரு செயலைச் செய்யும் போதும் ஒருவர் நன்மையடையும் போது வேறு சிலர் தீமையை அடைவார்கள். குழைகளை உண்டு மான்கள் உயிர்வாழ, மான்களை உண்டு சிங்கமும் புலியும் உயிர் வாழ்கிறது. இது இயற்கையால் வரும் பாதிப்பு. இதை நீக்க முடியாது. அதனால் கவலை கொள்ளாதே'' என்று பண்டிதர் கூறியவர்'' என்றது குமரன் எலி.

'' இயற்கை ஒரு சிலருக்குச் சாதகமாகவும், வேறு சிலருக்குப் பாதகமாகவும் நடக்கிறது. அதைத் தவிர்க்க முடியாது'' என்றது லட்சுமி எலி.

**710. நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்**
**கண்ணல்லது இல்லை பிற.**

''மகனே, ஆச்சரியப்படாதே. நான் யாரையும் விசாரித்து எதையும் அறிவதில்லை. ஒவ்வொருவருடைய கண்களையும் எனது கண்கள் அறியும். அதனால் தான் ஒவ்வொரு விஷயத்தையும் மிக நுட்பமாக அறிந்து சொல்கிறேன். அதுவே தவிர வேறு எதுவும் இல்லை. உனது கண்களில் உள்ள துணிவு உனது உறுதியான மனநிலையை வெளிப்படுத்துகிறது. எத்தகைய துன்பம் வந்தாலும் அதை உனது மனைவி மீது சுமத்தாது உனது தோளின் மீது சுமத்து. வளமுடன் வாழ்வாய். சென்று வா'' என்று பண்டிதர் கூறினார்'' என்றது குமரன்எலி.

''பண்டிதர் எதையும் அறிந்து நேரே சொல்வதால், அவருடன் கதைக்கப் பலருக்குப் பயம்'' என்றது லட்சுமி எலி.

## அதிகாரம் - 72 அவை அறிதல்

**711. அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்**
**தொகையறிந்த தூய்மை யவர்..**

‘‘பண்டிதவகுப்பில் பண்டிதர் வீரகத்தியின் அழைப்பை ஏற்றுப் பண்டிதர் வேதநாயகம் பேசவந்தார். சபையில் நிறைந்திருப்பவர்களின் முகங்களைப் பார்த்ததும் அவர்களை அறிவுமிக்கவர்கள் என்று தெரிந்து கொண்டே வேத நாயகம் மிகவும் அமைதியாகவும், தான் பேசவந்ததைச் சுருக்கமாகவும் பேசினார். அவரின் பேச்சு. சபையோரைக் கவர்ந்தமையால் சபை மிகமிக அமைதியாக இருந்தது’’. என்று பண்டிதர் வீரகத்தி நகுலனுக்குச் சொன்னபோது அவன் சொன்னான்; ‘‘ஐயா, சொற்களின் வகை தொகைகளை அறிந்த நல்லவர்கள், சபையில் நிறைந்திருந்தமையை அறிந்த பின்பு தான் அப்படிப் பேசினார்’’ என்று நகுலன் சொல்லப் பண்டிதர் சிரித்தவர்’’ என்றது குமரன் எலி.

‘‘கற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி, இப்போ பலர் பேசாததால் அறிவுள்ளவர்கள் பேச முன் வருவதில்லை’’ என்றது லட்சுமி எலி.

**712. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்**
**நடைதெரிந்த நன்மை யவர்.**

‘‘நகுலா, வேதநாயகம் பேசும்போது அடிக்கடி சபையை உற்று நோக்கி அவதானித்துத் தான் பேசினார். சபை குழம்பினால் பேச்சைச் சுருக்குவார்கள். சபை குழம்பாதிருந்தாலும் அளவுக்கதிகமாகப் பேசமாட்டார்கள். இது இயல்பு’’ என்று பண்டிதர் நகுலனுக்குச் சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

‘‘இப்போ யார் அப்படிக் கவனிக்கிறார்கள். பேச்சாளர், பேசுவார். சபையோர் தாமும் பேசுவர்’’ என்றது லட்சுமி எலி.

**713. அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்**
**வகையறியார் வல்லதூஉம் இல்.**

‘‘மகனே, சபையில் கூடியிருப்பார்களது தன்மையை அறியாது பேசுகிறவர்கள், எப்படிச் சபையைக் கவர வேண்டும் என்று தெரியாதவர்கள். அவர்கள் சொல்லக்கூடியது எதுவும் இல்லை. சற்குணம் அப்படித்தான் பேசிவருகிறான். அவன் பேசும் போது சிலர் எழுந்து சென்று விடுகின்றனர்.. சென்றவாரம் அவன்பேசும் போது நடராசா எழுந்து சென்று விட்டார்... அவர் என்னைச் சந்தித்து இவனை இனிப்பேச அழைக்காதீர்கள்’’ என்று சொல்லிவிட்டுப் போனார். இவன் வீடு தேடிச் சென்று நான்பேசும் போது ஏன் எழுந்து சென்றீர்கள்’’ என்று கேட்டவனாம். அவள் வேறு காரணங்களைச் சொல்லிச்சமாளித்து விட்டார்’’ என்றது குமரன் எலி.

‘‘இப்ப இப்பிடியும் செய்யினையே. வேதநாயகம் பேசும்போது யாரும் எழுந்து செல்லவில்லை. அதை உணரவேண்டும்’’ என்றது லட்சுமி எலி.

**714. ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்**
**வான்சுதை வண்ணம் கொளல்**

‘‘பண்டிதர் நகுலனுக்குச் சொன்னார்; ‘‘வேதநாயகம் சபைக்கேற்றபடி பேசுவதால் அறிவுள்ளவர்களும் அறிவில்லாதவர்களும் அமைதியாக இருந்து கேட்கிறார்கள்என்று பண்டிதர்கள் கூடியிருந்த

சபையில் இலக்கியம் பேசினார். மறுநாள் சனசமூக நிலையைச் சரஸ்வதிப் பூசையில் அறிவில்லாதவர் போல சரஸ்வதியின் பெருமைகளை கதை மூலம் சொன்னார். எனது பேரன் தரம் ஐந்தில் படிக்கிறான். கம்பருக்காகச் சரஸ்வதி மோர்விற்கும் பெண்ணாக வந்த கதையை வேதநாயகம் சொல்லஅதைக் கேட்டு வந்த பேரன் எனக்குச் சொன்னான். பண்டிதரும் பாமரரும் தத்தம்அறிவுக்கேற்ற வறையே புரிந்து கொள்வார். என்று பண்டிதர் சொன்னவர்''என்றது குமரன் எலி.

''பிள்ளைகளுக்கு விளங்காவிட்டால் அவர்கள் விளையாடுவார்கள். விளையாட்டுச் சண்டையிலும் முடியும்''லட்சுமி எலி

**715 நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்**
**முந்து கிளவாச் செறிவு.**

''அறிவிற்சிறந்தவர் உள்ள சபையில் தான் முந்திச் சென்று கருத்துக்களை கூறாதிருப்பது நன்மை என்று சொல்லப் பட்ட எல்லாவற்றிலும் நன்மையானது. பண்டிதர்களின் மத்தியில் வேதநாயகம் பேசிவிட்டு அமர்ந்ததும் அவரது பேச்சைப் பற்றி நீ தான் முதலில் கருத்துக் கூறினாய். பின் கருத்துச் சொன்னோர் உனது கருத்தில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினர். அறிவாளிகள் பலரின் கருத்துக்களைக் கேட்ட பின்பு தான் தம் கருத்தைக் கூறுவார். அதனால் அவதானமாக இரு'' என்று சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''நகுலன் அவசரக்காரன். அறிவிருக்கு ஆனால் அனுபவம் இல்லை'' என்றது லட்சுமி எலி

**716. நன்றுஎன்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்**
**முந்து கிளவாச் செறிவு.**

''நகுலா அறிவைவிட அனுபவம் பெரிது. நீ அன்று முந்திச் சென்று கருத்தைக் கூறியமையால் பல அறிவுள்ளவர்களின் கருத்தைக் கேட்டாய். என்றும் தெளிந்த அறிவுடையவர்களின் மத்தியில் குற்றம் ஏற்படப் பேசுவது என்பது நல்ல ஒழுக்கத்தில் இருந்து தவறுவதைப் போன்றது. நேற்று அயலூர்ப் பண்டிதர் ஒருவர் உனது பேச்சுப் பற்றி தமதூர் மேடையில் பேசியுள்ளார். அதனால் அறிவுடையவர்களின் மத்தியில் அவதானமாகப் பேச வேண்டும். என்று நகுலனுக்குப் பண்டிதருக்குச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''நகுலன் கெட்டிக்காரன் தவறாகப் பேச மாட்டான். ஆனைக்கும் அடி சறுக்கும்'' என்றது லட்சுமி எலி.

**717 கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறக்**
**சொல்தெரிதல் வல்லா ரகத்து.**

''மகனே ஒருவர் பேசும் போது அவரின் கல்வியின் தன்மை, அறிவின் முதிர்ச்சி, அனுபவம், அவரது குண நலன்கள் யாவும் சொற்களின் பொருளை குற்றமில்லாமல் அறிந்திருப்பவர்களுக்குப் புரியும். பேச்சு அவற்றைக் காட்டிக் கொடுத்து விடும். பண்டிதர் வேதநாயகம் பேசும் போது மிகமிக அமைதியாக மிக்க அடக்கத்துடன் சகலரையும் மதித்துப் பேசுவார். குற்றங் குறைகளைச் சம்பத்தப்பட்டவர்களை அழைத்துச் சொல்லித் திருத்துவார். அவர் அனுபவம் மிக்கவர். நீ இளைஞன். சிலர் சிறு சிறு குற்றங்களைக் கூடப் பெரிதாக்கிப் பேசுவர். இது வளர்ச்சிக்குரியதில்லை. என்று பண்டிதர் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

‘‘சற்குணம் சனசமூக நிலையத்தில் ஏதோபேச யாரே ஒருவர் தன்னைக் குறித்துப் பேசியதாகச் சண்டைக்குப் போனவர்’’ என்றது லட்சுமி எலி.

**718 உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்**
**பாத்தியுள் நீர்சொரிந் தற்று.**

‘‘அறிவுள்ளவர்களின் சபையில் நன்கு கற்றவர் பேசுவது, தானாகவே செழித்து வளரும் பயிருக்கு நீர் பாய்ச்சுவது போன்றதாகும். அதனால் நீ பேச விரும்பினால் நன்கு திட்டமிட்டுப் பேசு, அறிவுள்ளவர்களின் சபையில் பேசு. ஆரம்பத்தில் நானும் ஆராயாது ஆத்திர மிகுதியில் பேசுவேன். கற்றவர்கள் குறை சொன்னால் அதைப் பகிரங்கமாகக் கண்டிப்பேன். அது தவறு என்று பிற்காலத்தில் உணர்ந்து கொண்டேன். அதனால் தான் சொல்கிறேன். என்றவர்’’ என்றது குமரன் எலி.

‘‘இப்பவும் அறிவு மிக்கவர்கள் என்று தம்மைத் தாம் கூறுபவர்களும், தமக்குத் தாமே பட்டம் சூடுவோரும் மேடைகளில் நகுலனை போலத் தானே பேசுகின்றனர்’’ என்றது லட்சுமி எலி.

**719. புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்**
**நன்கு செலச்சொல்லு வார்.**

‘‘நகுலா அறிஞர்கள் கூடியுள்ள சபையில் நல்ல கருத்துக்களைச் சொல்லும் வல்லமை உள்ளவர்கள், அறிவில்லாதவர்களின் சபையில் மறந்தும் கூடப் பேசக் கூடாது. ஒரு முறை நான் அயலூரில் உள்ள கோவிலில் பேசச் சென்றேன். அதிகமானோர் மது குடித்திருந்தனர். நான் பேசும் போது அடிக்கடி கைதட்டினார். விசில் அடித்தனர். இதைப் பொறுக்க முடியாத பலர் எழுந்து சென்று விட்டனர். பேசி முடித்த பின்பும் பேசுமாறு வற்புறுத்தினர். அது அவர்களின் இயல்பு. அதைக் கலிவியால் தான் மாற்ற முடியும். என்று பண்டிதர் சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

‘‘இப்போ கைதட்டுவாரில்லாததால் கூட்ட அமைப்பாளர்கள் அடிக்கடி கைதட்டி உற்சாகப்படுத்துமாறு கூறுகிறார்கள்’’என்றது லட்சுமி எலி.

**720 அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தார்**
**அல்லார்முன் கோட்டி கொளல்**

‘‘மகனே, இப்படியான அறிவிற் சிறந்தவர்கள் இல்லாத சபையில் பேசுவது தூய்மை இல்லாத இடத்தில் கொட்டிய அமிழ்தைப் போன்றது. இதைக் கற்றவர்களால் மட்டும் உணர முடியும். இரண்டு வாரம் கழித்து அந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் வந்து மீண்டும் பேசும் படி அழைத்தார்கள். நான் மறுத்து விட்டேன். மதுவைக் குடித்து அறிவிழந்த நிலையில் இவர்கள் எதை அறிய நினைக்கிறார்கள்.’’ என்று பண்டிதர் நகுலனுக்குக் கூறினார்’’ என்றது குமரன் எலி.

‘‘தற்போதைய இசை நிகழ்ச்சிக்குச் செல்வோர் குடித்து விட்டு நடமாடுவதைக் கண்டதினால் இவர்களும் குடித்து விட்டு ஆடுகிறார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**751. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்லது இல்லை பொருள்.**

“சிதம்பரநாதனும் அவனது மனைவி அன்னபூரணியும் ஆடம்பரமான வெளிநாட்டு வாகனமொன்றில் வந்து கோவிலடியில் இறங்கிய போது பண்டிதரும், திருநாவுக்கரசும், நமசிவாயகமும் ஊர்ப்பிரமுகர்களும் ஊரவர்களும் எழுந்து சென்றனர். அவர்களில் பலரின் கைகளில் மாலைகள் இருந்தன. அவர்கள் பல இலட்சம் ரூபா செலவில் கட்டிய தெற்கு வாயிற் கோபுரத்திற்கு அபிஷேகம் செய்து திறக்கப்பட இருந்தது. அவனைக் கண்ட நவராசா நகுலனுக்குச் சொன்னான்; “பத்து வருடங்களுக்கு முன்பு ஒரு பொருளாய் இவரை மதித்தார்கள். குடித்து விட்டு வீதிகளில் அட்டகாசம் செய்வது, களவெடுப்பது, சண்டித்தனம் செய்வதுமாக இருந்தவன் பிள்ளைகள் வெளிநாடு சென்றதும் கோடீஸ்வரன் ஆகி விட்டான். பத்து வருடங்களுக்கு முன் இவனது பேர்த்தியார் மரணமடைந்த போது பாடையைத் தூக்க ஆளில்லை. இப்ப அவர் ஊரவர்களின் பெரும் பிரமுகர். இதற்குக் காரணம் பணம் தான் என்று சொன்னவன்” என்றது குமரன் எலி.

“பணம் வந்தால் மதிப்பு மரியாதை, கௌரவிப்பு எல்லாம் வரும்” என்றது லட்சுமி எலி.

**752. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை**
**எல்லாரும் செய்வர் சிறப்பு.**

“இந்த உலகம் விசித்திரமானது. பண்டிதர் பெரும் அறிவாளி. கற்றவர்களால் மதிக்கப்படுபவர். அவரைப் பெரிதாக விழாக்களுக்குக் கூப்பிடுவாரில்லை. பலர் அவரது ஏழ்மையைப் பரிகசிக்கிறார்கள். படிப்பறிவில்லாத பாமரரான சிதம்பரநாதனைக் கையெடுத்துக் கும்பிடுகிறார்கள். மாலை சூடி வரவேற்கிறார்கள். இப்போ ஊரில் உள்ள பிரமுகர்கள் அனைவரும் மாலையுடன் நிற்கிறார்கள். பேச்சாளர்கள், கொடை வள்ளல்,தர்மத்தின் காவலன், ஏழைகளின் நண்பன் என்று புகழ்கிறார்கள்.” என்று நவராசா நகுலனுக்குச் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“எல்லாம் காரணத்தோடு தான் பண்டிதரை விருந்தினராக அழைத்ததால் என்னத்தைக் கொடுப்பார். சிதம்பரநாதன் அள்ளிக் கொடுப்பான்” என்றது லட்சுமி.

**753. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்**
**எண்ணிய தேயத்துச் சென்று.**

“பொருளிருந்தால் எண்ணிய இடங்களுக்கெல்லாம் சென்று எண்ணிய வண்ணம் செயற்படலாம். எல்லாக் குறைகளையும் நீக்கும் பொருள் என்ற அணையாவிளக்கு. சிதம்பரநாதன் மேடையில் பேசுவதற்காகப் பயிற்சி எடுக்கிறான். இன்று சிலசமயம் பேசினாலும் பேசுவான். பணம் செய்யும் திருவிளையாடல் பல” என்று நவராசா நகுலனுக்குச் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“எல்லாம் காலம் செய்யும் கோலம். இப்ப சிதம்பரநாதனின் மனைவியின் சகோதரர்கள் சிதம்பரநாதனின் வீட்டிலேயே இருக்கிறார்கள். முன்பு கண்டதும் மறைந்து விடுவார்கள்” என்றது லட்சுமி எலி.

**754. அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**

**தீதின்றி வந்த பொருள்.**

" சேர்க்கும் வழி அறிந்து அற வழியில் தேடிய செல்வம் அறத்தை வளர்க்கும். இன்பத்தைத் தரும். சிதம்பரநாதன் வறியவன். படிப்பறிவில்லாதவன். அவனது மூத்த மகன் நாவுக்கரசன் பண்பானவன். அறத்தை உணர்ந்தவன். அவன் வெளி நாட்டில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வருகிறான். அதில் சிதம்பரநாதனின் மூன்று பிள்ளைகளும் வேலை செய்கிறார்களாம். பொய் களவில்லாமல் நாவுக்கரசன் தொழில் செய்வதால் அந்த ஊரவர் அவனை விரும்புகிறார்களாம். அவன் அறவளியில் செலவு செய்கிறான். அதைக் குறை கூறாதே." என்று நகுலன் நவராசாவுக்குச் சொன்னவன்" என்றது குமரன் எலி.

"காசு வைத்திருப்பவர்கள் அறவழியிலேயே அதைத் தேடீனை. கொள்ளையடிப்பவன் கூட ஒரு சதம் கொடுக்கமாட்டான்" என்றது லட்சுமி எலி.

**755 அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்.**

நல்லவழியில் சேர்க்காத செல்வத்தைப் பயன்படுத்தக்கூடாது என்று கதிரேசனும் நமசிவாயகமும் எப்போதும் கூறுவார்கள். நாவுக்கரசன் மிகவும் நல்லவன். அவன்வெளி நாட்டில் அறவழியில் தான் பணம் சம்பாதிக்கிறான். நான் அறிந்த வரையில் அவன் நேர்மையாக வாழ்கிறான். அதனால் தான் அவனுக்குப் போடும் மாலையை தான் சிதம்பரநாதனுக்குப் போடுகிறேன்" என்று கதிரேசன் சொன்னார். இப்போ சிதம்பரநாதன் திருந்தி விட்டான். எமது ரிஷிகள், முனிவர்களின் வாழ்க்கை சிதம்பரநாதனைப்போலவும் இருந்தது என்பதை நீ அறியவில்லையா?" என்று நகுலன் நவராசாவுக்குச் சொன்னவன்" என்றது குமரன் எலி.

"நாவுக்கரசனின் பணம் நல்ல செயல்களுக்குப் பயன்படுகிறது. அதைப்பாராட்ட வேண்டும்" என்றது லட்சுமி எலி.

**756. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்**
**தெறுபொருளும் வேந்தன் பொருள்.**

"கெட்டவழியில் வரும்பணம், புதையலாக வந்தபணம் வரியாக வந்தபணம், பகைவரை வென்றமையால் வந்தபணம், சொத்துக்களுக்கு உரிமையில்லாதவரின் சொத்து இவைபோன்றன அரசுக்குரியவை. தான் தேடிய பணத்தைத் தான் விரும்பியபடி செலவிடத் தேடியவனுக்கு உரிமை உண்டு. நாவுக்கரசன் பாட்டுப்பாடத் தேடிய பணத்தை அறவழியில் செலவு செய்கிறான். அதில் என்ன குறையைக் கண்டாய்? குப்பைக்குள் குண்டுமணியும், நத்தையின் வயிற்றில் முத்தும் இருப்பதால் அவற்றை ஒதுக்குவோர் யாரும் இருக்கிறார்களா?" என்று நகுலன்கேட்டவன்" என்றது குமரன்எலி.

"நல்லவற்றைச் செய்தாலும், குறை கூறுவோர் இருக்கத்தான் செய்வார்கள்" என்றது லட்சுமி எலி.

**757. அருளென்னும் அன்புஈசன் குழவி பொருளென்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு.**

"நவராசா, அன்பு என்ற தாய்பெற்ற அருள் என்னும் அற்புதமான குழந்தையைச் செல்வம் என்ற செவித்தாய் வளர்க்கிறது என்பார்கள். செல்வம் அருள் நிரம்பியது. அதனால் தான் அதைக்

கொடுக்கக் கொடுக்கச் சேர்கிறது. திருநாவுக்கரசு கதிரேசன் நமசிவாயகம் போன்றோர் எப்போதாவது இல்லையென்று சொல்லியிருப்பார்களா? நீ எப்போதாவது இருக்கிறது என்று சொல்லியிருப்பியா? அதற்கு அருள் வேண்டும்'' என்று நகுலன் சொன்னவன். என்றது குமரன் எலி.
''ஒருவனுக்குக் கொடுக்கிறது இன்பம். இன்னொருவனுக்குச் சேர்கிறது இன்பம். இது உலகத்தில் சகசம்'' என்றது லட்சுமி எலி.

**758. குன்றுஏறி யானைப்போர் கண்டற்றால் தன்னைத்தஒன்று**
**உண்டாகச் செய்வான் வினை.**

''ஒருவன் தான் தேடிய செல்வத்தை வைத்துக்கொண்டு செயலாற்றுவதென்பது மலையின் மேல் ஏறி நின்று கீழே நடக்கும் யானைகளின் போரைப் பார்ப்பது போன்றது'' என்று பெரியவர்கள் கூறுவார்கள். இது எல்லோருக்கும் கிடைக்காது. சிதம்பரநாதனுக்குக் கிடைத்துள்ளது. அதை நல்ல முறையில் அனுபவிக்கிறான்'' என்று நகுலன் நவராசாவுக்குச் சொன்னவன்''என்றது குமரன்எலி.
''அனுபவிக்கிறநேரம் அனுபவிக்க வேணும். முன்பு குடித்து வெறித்து அனுபவித்தான். இப்பசெல்வச் செருக்கால் அற்புதமானவற்றையெல்லாம் செய்து அனுபவிக்கிறான். கொடுத்து வைத்தவன்'' என்றது லட்சுமி எலி.

**759. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்**
**எ.்.குஅதனிற் கூரியது இல்.**

**''நவராசா, ஒருவன் தன்பகைவர்களை அடக்க வேண்டுமானால் பணத்தைத் தேட வேண்டும். நாவுக்கரசன் பெரும்வர்த்தகரான பரஞ்சோதியின் கடையில் சிப்பந்தியாக வேலைசெய்த போது அவரது இரண்டாவது மகள் எழினினியைக் காதலித்தவன். பரஞ்சோதி பெரும் வர்த்தகர். நாவுக்கரசனை ஆள் வைத்து அடிப்பித்தவர். இப்ப அவரே சிதம்பரநாதனிடம் சென்று மாப்பிளை கேட்கிறார். அத்துடன் சிதம்பரநாதனின் எதிரிகள் எல்லோரும் சிதம்பரநாதனுடன் சேர்ந்து விட்டனர். பணம் எதையும் செய்யும். செய்ய வைக்கும்'' என்று நகுலன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.**

**760. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்**
**ஏனை இரண்டும் ஒருங்கு.**

''நவராசா, அரிதான செல்வத்தை மிகுதியாகத் தேடியவனுக்கு அறமும் இன்பமும் தேடிவந்து சேரும். நாவுக்கரசன் தனக்கேற்பட்ட அவமானத்தைத் தாங்க முடியாததால் தான் வெளிநாட்டுக்குச் சென்றவன். அத்துடன் அறச் செயல்களைச்செய்வதன் மூலம் மக்களின் பேராதரவைப் பெறலாம் என்று தெரிந்தவன். இப்போ ஊரில் அவனது கதையைத்தானே மக்கள் கதைக்கிறார்கள். வெட்கம், மானம், ரோசம் அவமானம் யாவும் பணம் வந்ததும் நீங்கிவிடும். செல்வம், செல்வாக்கையும் புகழையும் தேடிக் கொடுக்கும்'' என்று நகுலன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

“பணம் என்றால் பிணமும் வாய் திறக்குமாம். இதில் பரஞ்சோதி எம் மாத்திரம்’’ என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 79 நட்பு**

**781. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு.**

“நவராசா, நகுலனிடம் வந்து சொன்னான்; “நகுலா, நான் நர்மதாவைத் திருமணம் செய்தபின் எனது வீட்டுக்காரர் நான் செய்த கமம் முழுவதையும் பொறுப்பேற்றுவிட்டனர். அதனால் எனக்கு இப்போ தொழில் இல்லை. வழமையாக எனக்கு நெல் தருவோர் இப்போதும் தரத்தயாராக உள்ளனர். அதற்குப் பொருளுதவி நீதான் செய்ய வேண்டும்’’ என்ற போது நகுலன் சொன்னான்; “நான் உனது உயிர் நண்பன் உனக்காக எதுவும் செய்வேன். பயப்படாமல் தொழிலைத் தொடங்கு. உனது தொழிலுக்கு வேண்டிய பாதுகாப்பு முழுவதையும் நான் தருவேன். உனது தந்தை நேற்று வந்து உனக்கு உதவிகள் எதுவும் செய்யக்கூடாது. என்று கோபமாகச் சொன்னவர். நீ பயப்படாதே வேண்டிய உதவிகள் செய்யாவிட்டால் எமது நட்புக்குப் அது பெருமையாகுமா? என்று கேட்டவன்’’ என்றது குமரன் எலி.
தற்போதைய நட்பு, தேவையை மட்டும் இலக்காகக் கொண்டது. நகுலனும் நவராசாவினதும் நட்பு அபூர்வமானது’’ என்றது லட்சுமி எலி.

**782. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்நீர பேதையார் நட்பு**

“நவராசா நாம் சிறுவயதிலிருந்தே நண்பர்கள். நான் துன்பப்பட்ட வேளைகளில் நீ எவ்வளவு உதவிகள் செய்தாய். காண்டீபனோடு சேர்ந்து குடித்து விட்டுக் கலகம் செய்தபோது எனக்கு அடித்தாய். அதனால் நான் கோபப்பட்டேன். காண்டீபனும் உருத்திரகுமாரனும் என்னை ஏவி விட்டு உன்னை அடிப்பித்தனர். அவ்வேளையில் கோபப்படாது அழுதாய். அன்று நீ இல்லையானால் நான் கெட்டுச் சீரழிந்திருப்பேன் . நீ பண்டிதருக்கு எல்லாவற்றையும் சொல்ல அவர் அறிவுரை கூறி எனது கண்களைத் திறந்தவர். எமது நட்பு வளர்பிறையைப் போன்றது. தேய்ந்தாலும் வளரும், அறிவற்றவர்களின் நட்பு தேய்பிறையைப் போன்றது’’ என்று நகுலன் கலங்கியவன்’’ என்றது குமரன் எலி.
“உண்மையான நண்பன் கண்டித்துத் திருத்துவான்’’ என்றது லட்சுமி எலி.

**783 நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு**

“நான் ஆராயாது தவறுகள் செய்த போதும் நீ எனது நட்பைத் தூண்டிக்கவில்லை. மாறாக வீட்டில் சென்று புகாரிட்டாய். பண்டிதரிடமும் கதிரேசனிடமும் சொன்னாய்.பண்டிதர் கண்டிக்கவில்லை. அறிவுரை கூறினார். ஆனால் கதிரேசன்; நீ தலைக்கு மேல் வளர்ந்து விட்டாய். நான் கிழவன் என்று எண்ணி விட்டாய். உடலால் தான் நான் கிழவன். மனதால் இளைஞன். தைரியசாலி என்று கூறி எனக்குப் பலமாக அடித்து விட்டுச் சொன்னார்; “நகுலா நீ எனது இரத்த உறவினன். உன்னைக் கொன்றாலும் யாரும் கேட்கமாட்டார்கள். என்னை அந்த நிலைக்குட்படுத்தாதே.

என்றவர். அதை நினைக்க இப்பவும் உடல் நடுங்குகிறது. அதனால் தான் நான் திருந்தினேன். அதை நான் மறப்பானா? நீ ஒரு நூலகம். உன்னோடு பழகுவது நல்ல நூல்களைப் கற்பதைப் போன்றது. உனது நட்பு பழகப் பழகப் இன்பம் தருகிறது'' என்று நகுலன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''இப்போ நண்பர்கள் அப்படியா இருக்கிறார்கள். குடிப்பவனுடன் சேர்ந்து குடிப்பர். பெண்களுடன் சேர்ந்து பழகுவார். என்னென்னமோ நடக்கிறது'' என்றது லட்சுமி எலி.

**784. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தற் பொருட்டு.**

''நகுலா, நட்பு என்பது சிரித்து மகிழ்வதற்காக ஏற்பட்டதல்ல. நண்பர் நிலை தவறும்போது கண்டித்து அறிவுரை கூறித்திருத்துவதற்கும் உரிமை உடையது. அதனால் தான் கதிரேசனிடம் சென்று நீ செய்யாத பலவற்றை நீ செய்ததாகக் கூறி அவரது கோபத்தை அதிகரிக்கப் பண்ணினேன். கதிரேசன் பலமாகப் பேசவே மாட்டார். அவர் அடித்தாரென்றால் எப்படிச் சொல்லியிருப்பேன் என்று நினைத்துப்பார். எதைச் செய்தென்றாலும் உன்னைத் திருத்தவிரும்பினேன்''. என்றான் தவராசா'' என்றது குமரன் எலி.

''இப்போதய நண்பர்கள் சேர்ந்து குடிக்கவும், அடாவடித்தனங்களில் ஈடுபடவும் தான் நண்பர்களாக உள்ளனர்'' என்றது லட்சுமி எலி.

**785. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**
**நட்பாம் கிழமை தரும்.**

''நகுலா நட்புக்கொள்வதற்கு நேரில் சந்திக்கவும் தேவையில்லை. அடிக்கடி கதைக்கவேண்டும் என்றில்லை. ஒரே தன்மையான உணர்வு நட்புக்கொள்ளக் காரணமாகும். என்னோடு கற்ற அருந்தவப் பாலன் என்பவன் பத்திரிகையில் இருந்த பேனா நண்பனுக்கு பெண்களின் பெயரில் கடிதம் எழுதினான். பலவருடங்கள் தொடர்ந்து எழுதினான். இருவரும் சந்தித்துப் பேச விரும்பினர். அப்பெண்விரும்பவில்லை. அருந்தவ பாலனின் அன்புத்தொல்லை தாங்க முடியாது நேரில் சந்தித்தாள். அவள் ஒரு போராளி. வலதுகால் இல்லை. இருந்தும் இருவரும் திருமணம் செய்து மிகவும் இன்பமாக வாழ்கின்றனர். அதற்குக்காரணம் ஒத்த உணர்ச்சி தான்'' என்று நவராசா கூறினான். என்றது குமரன் எலி.

'' சீதனபாதனம் கேட்காது நடந்த திருமணம் அது. இப்படி எல்லோரும் வாழ்ந்தால் தமிழர் அனைவரும் எந்நாளும் சொர்க்கத்தில் தான் வாழ்வர்'' என்றது லட்சுமி எலி.

**786. முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு.**

''நகுலா, நான் உன்னோடு சிரித்துப் பேசுவதற்காக நட்புக் கொள்ளவில்லை. மனதால் உன்னை விரும்பி, உள்ளன்போடு உண்மையாகப் பழகுகிறேன். எமது நட்புத் தெய்வீகமானது, உரிமையானது. தட்டிக் கேட்கும் தன்மையுடையது. அதனால் தான் இக்கட்டான நேரத்தில் உன் உதவியை நாடுகிறேன்'' என்றவன் என்றது குமரன் எலி.

“இப்படியானவர்கள் நூல்களில் தான் வாழ்கிறார்கள்” என்றது லட்சுமி எலி.

**787. அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண் அல்லல்**
**உழப்பதாம் நட்பு**

“நவராசா அழிவு வரும்போது அதிலிருந்து காப்பாற்றி நல்லவழியில் வாழச்செய்து
அழிவு வந்தாலும் கூட உடனிருந்தும் துன்பப்படுவது தான் உண்மையான நட்பு. உனக்கு இப்போ அழிவு வந்துள்ளது. அதை நான் நீக்குவேன். அத்துடன் உனது துன்பம் எனது துன்பமாகும். உனது தந்தையும் உறவினர்களும் உனக்கு உதவி செய்யக் கூடாதென்று என்னை மிரட்டியுள்ளனர். இதற்கெல்லாம் பயப்பட்டால் நட்பு என்ற உறவுக்குக் களங்கம் உண்டாகும் பயப்படாதே” என்று நகுலன் சொன்னவன் என்றது குமரன் எலி.

“காதலென்றால் சாவன், மருந்து குடிப்பன் என்று வெருட்டுவது இயல்பு. இப்ப நண்பனை வெருட்டினை. காலம் தான் பதில் சொல்லும்” என்றது லட்சுமி எலி.

**788. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு**

“நவராசா, எமது உடை அவிழும்போது எமது கை உடன் செயற்பட்டு அதைத்தடுக்கும். அதுபோல நண்பனுக்குத் துன்பம் வந்தால் அதைத்தடுத்து நிறுத்துவது நண்பனது கடமை. உனது தந்தை என்னை வெருட்டிப்பார்த்தார். நான் மசியவில்லை. அதனால் எனது அப்பாவிடம் சென்று மிரட்டுவது போல கதைத்துள்ளார். அப்பா நீயும் அவனும் பட்டபாடு. என்னை இதில் தலையிட வைக்காதே. நிலமை மோசமானால் நான் என்ன செய்வேன் என்று ஊருக்குத் தெரியும்” என்றவர். என்று நகுலன் சொன்னவன்”. என்றது குமரன் எலி.

“நகுலனின் தந்தையின் குணம் தெரியாமல் கதைக்கிறார். அவர் ஒரு சண்டியன். சண்டித்தனம் செய்யாமல் வியாபாரம் செய்யமுடியா என்று கூறுபவர்” என்றது லட்சுமி எலி.

**789. நட்பிற்கும் வீற்றிருக்கை யாதெனின் கொட்புஇன்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**

“நண்பன் என்றால் அவன் உயிருள்ளவரை உதவவேண்டும். அது தான் நட்பின் சிறந்த நிலை. இதை அறியாத உனது தந்தை எனது தந்தையிடம் சென்று கதைத்துப் பிரச்சினையைப் பெருப்பித்துள்ளார். அப்பா சொன்னால் ஊரவர்கள் கேட்பார்கள். இவ்வளவு காலமும் அவர் ஊரவர்களின் பொருளைத தன் பொருளாக நினைத்தவர். அது ஊரவர்களுக்குத் தெரியும். இதையறியாத உனது தந்தை அவருடன் பிரச்சினைப்பட்டு உனக்கு உதவி செய்துள்ளார்” என்று நகுலன் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“இப்ப உள்ளவை தாம் தாம் விண்ணர்கள் என்று நினைத்து ஆழம் தெரியாது காலை விட்டு விட்டு அவதிப்படுகின்றனர்” என்றது லட்சுமி எலி.

**790. இனையர் இவர்எமக்கு இன்னம் யாம் என்று**

**புனையினும் புல்லென்னும் நட்பு**

“நண்பர்கள் என்றால் மனதால், உறவால், நட்பால் சமமானவர்களாக இருத்தல் வேண்டும். என்னிடம் நிறையப் பணம் இருக்கு. அதைப் பயன்படுத்தும் உரிமை உனக்கிருக்கு. இவர் எனக்கு இளையவர், எனக்குச் சமமான பணமோ, அறிவோ இல்லாதவர் என்று நினைத்தால் நட்புத்தன் பெருமையை இழந்து விடும். அதனால் உனக்கு வேண்டிய உதவிகள் யாவற்றையும் நான் செய்கிறேன். எமது வீட்டுக்கு அருகில் இன்னொரு வீடு எமக்குண்டு. அதனால் உனது மனைவியை அழைத்துக்கொண்டுவா” என்றவர் என்றது குமரன் எலி.

“பாவம் நவராசா. அவனது உழைப்பைப் பறித்தால் அவன் துன்பப்படுவான் என்று நினைத்தவையை நினைக்கப் பாவமாக இருக்கு” என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் 80 நட்புஆராய்தல்**

**791. நாடாது நாட்டலிற் கேடில்லை நட்பின்**
**வீடில்லை நட்புஆள் பவர்க்கு**

“நவராசாவின் தந்தை சண்முகநாதன் நகுலனுக்குச் சொன்னார்; “நகுலா, நவராசாவை அவள் மயக்கிக் கைக்குள்ப் போட்டுவிட்டாள். அவன் பாவம் மருத்தீடு என்று கோவில் குருக்கள் சொல்கிறார். நான் அவர்களைப் பிரிக்கலாமென்று நினைத்துத் தீவிரமாகச் செயற்படுகிறேன்… நீ அவனின் நண்பன். அவனுக்கு உதவியாக இருந்து அவனை உற்சாகப்படுத்துகிறாய். அதைவிட்டுவிடு. இல்லாவிட்டால் பிரச்சினைப்படுவாய்” என்றவர். அதற்கு நகுலன் சொன்னான்; “ நவராசா என்னுடைய உயிர் நண்பன். நல்ல நண்பர்களுக்கிடையே பிரிவென்பது இல்லை. நான் அவனுடன் சிறுவயதிலிருந்தே பழகி வருகிறேன். அவனது நட்புத் தூய்மையானது; சிறப்பானது; பெருமைக்குரியது. இடையில் ஆராய்ந்து பாராமல் காண்டீபனுடனும் உருத்திர குமாரனுடனும் நட்புப்பூண்டு பெருந்துன்பப்பட்டேன். அதிலிருந்து என்னைக் காப்பாற்றியவன் நவராசா. நீங்கள் எதைச் சொன்னாலும் நான் கேட்கமாட்டேன்” என்று நகுலன் சொன்னவன்” என்றது குமரன் எலி.

“வெளிநாட்டவன் சந்திரனில் ஆராய்ச்சியை முடிந்து விட்டுச் செவ்வாயை ஆராயுறான். இவை செவ்வாய் தோஷம்பற்றி ஆராயினை” என்றது லட்சுமி எலி.

**792. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை**
**தான்சாம் துயரம் தரும்**

“ஐயா, நான் ஆராய்ந்து பாராமல் காண்டீபன் மீது கொண்ட அன்பின் நிமிர்த்தம் உருத்திரகுமாரனோடு சேர்ந்து பல தீய செயல்களைச் செய்தேன். அவனது பேரனார் பராமரித்த சிதம்பரக்காணியில் கதிர்காமர் தோட்டம் செய்தவர். அதை அவன் தனது பெயருக்கு எழுதிவிட்டு சாட்சிக் கையெழுத்திடச் சொன்னான். நான் குடித்திருந்தால் எதையும் ஆராயாது கையெழுத்து வைத்துவிட்டேன். அதனால் பெருந்துன்பங்கள் பல வந்தன. சாவதற்குச் சமமான

துன்பங்கள் வந்தன. அதிலிருந்து என்னைக்காத்தவன் நவராசா. அவனுக்காக நான் எதையும் செய்வேன்'' என்று நகுலன் கூறியவன்'' என்றது குமரன் எலி.

''கள்ள உறுதி முடிப்பவன் நிலைமை தெரியாதபடி ஆட்களை வைத்தே காரியத்தைச் சாதிப்பான்'' என்றது லட்சுமி எலி.

**793. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா**
**இனனும் அறிந்துயாக்க நட்பு**

''நவராசாவைப் பற்றி நன்கு தெரிந்த பின்பு தான் அவனை என் உயிர் நண்பனாக ஏற்றுக் கொண்டேன். ஒருவனின் குணத்தையும் அவனது குடிப்பிறப்பையும், அவனிடம் உள்ள குறையையும், அவனைச்சேர்ந்தவர்களின் இயல்பையும் அறிந்த பின்பு தான் நட்புக்கொண்டேன். நீங்கள் மிகவும் நல்லவர். இப்ப ஏன் இப்படி மாறினீர்கள். ஒரு பெண்ணைக் காதலிப்பது தவறா…? அப்படியானால் நீங்களும் காதலித்தது தவறுதானே. அவன் உங்களுக்கு எவ்வளவு உழைத்துத் தந்தவன். அவற்றையெல்லாம் எடுத்து விட்டீர்கள். இனி அவனை நிம்மதியாக வாழவிடுங்கள்'' என்று நகுலன் சொன்னவன்'' என்றது குமரன்எலி.

''பிள்ளை மீதுள்ள அன்பிலா கதைக்கிறார்கள். வருமானம் போய்விட்டதே என்ற ஆத்திரத்தில் கத்துகிறார்கள். பிள்ளை எப்பாடுபட்டாவது தந்தால் சரி என்பது அவையின் விருப்பம்'' என்றது லட்சுமி எலி.

**794. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்**
**கொடுத்துங் கொளல்வேண்டும் நட்பு**

''நவராசாவின் குடிப்பிறப்பில் களங்கமில்லாததால் தான் அவனை நான் நண்பனாக்கினேன். அவனது குடிப்பிறப்பில் களங்கமிருந்தால் அது உங்களையே சாரும். உங்கள் தகப்பனாரும் உங்கள் பேரனாரும் உங்களது காதலை ஏற்றமையால் தான் நீங்கள் இன்று மதிப்போடு வாழ்கிறீர்கள். அத்துடன் தனக்கும் தனது குடிக்கும், நண்பர்களுக்கும் அஞ்சுபவன் நவராசா. அப்படியானவன் வரும் பழிக்கு காதலித்து விட்டான் என்று அவனை ஒதுக்குகிறீர்கள். நர்மதாவின் தந்தை குடிகாரன். அதற்கு அவள் என்ன செய்வாள்? நீங்கள் குடிப்பதில்லையா..? மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்'' என்று நகுலன் கேட்டவன்'' என்றது குமரன் எலி.

''உவன்ரை குடியைப்பற்றி நாகராசாவைக் கேட்கவேண்டும். அவன் தான் இரகசியமாகக் குடி வகைகளை வாங்கிக் கொடுத்து விட்டு மடத்தில் இருந்து இன்னொருக்கு இவ்வளவு வாங்கிக் கொடுத்தேன்'' என்றது லட்சுமி எலி.

**795. அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய**
**வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்**

''நன்மைக்குப் புறம்பான செயல்களைச் செய்யும் போது பெற்றோரும் நண்பர்களும் இனத்தவர்களும் கண்டித்துத் திருத்தவேண்டும். அப்படித் திருத்துபவர் அந்தத் தவறைச் செய்யக்கூடாது. நீங்கள் காதலித்துத் திருமணம் செய்து விட்டு இப்போ காதலிக்கக் கூடாதென்று சொல்லலாமா..? நான் குடிக்கும்போது நவராசா குடிப்பதில்லை. அவன் கண்டித்தான். நவராசா புத்திசாலி. உலகநன்மை தீமைகளை அறிந்தவன். குடிக்காதவன். அதனால் தான் அவன் மீது

நட்புக்கொண்டேன். இனிமேல் அவனுக்குத் தீமைவரநான் விடமாட்டேன்'' என்று நகுலன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''எல்லாரும் குற்றம் செய்கிறவர்கள் தான். தருணத்திற்கு அவற்றை மறந்து ஞானிகளாகி விடுகிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**796. கேட்டினும் உண்டுஓர் உறுதி கிளைஞரை**
**நீட்டி அளப்பதோர் கோல்**

''கேடு உண்டாவதிலும் ஒரு நன்மை இருக்கிறது. கேடுதான் நண்பனின் குணங்களை அளக்கும் அளவு கோலாக இருக்கிறது. நான் குடித்துக் கொண்டு திரியும் போது நவராசாவும் என்னுடன் சேர்ந்து குடிக்கிறான் என்று அவனை நீங்கள் கண்டிக்காதீர்கள்.. தினமும் உங்கள் வீட்டில் இருப்பவனை ஆராயாது கண்டிக்கலாமா..? நவராசா நர்மதாவைக் காதலித்தது தவறென்றால் நீங்கள் வணங்கும் முருகன் வள்ளியைக் காதலித்தது சரியா..? அவரைக் குலம் கோத்திரம் பார்த்தா வணங்குகிறீர்கள்'' என்று நகுலன் கேட்டவன்'' என்றது குமரன் எலி.

''உங்கை ஒவ்வொரு குடும்பத்தையும் ஆராய்ந்து பார்த்தால் எல்லாக்குடும்பங்களுக்குள்ளும் எல்லாச் சாதியும் இருக்கு. சிலது பரகசியமாக இருக்கு. சிலது ரகசியமாக இருக்கு'' என்றது லட்சுமி எலி.

**797. ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்**
**கேண்மை ஒரீஇ விடல்**

''ஒருவனது சிறந்த செல்வம் என்னவென்றால், அவன் தீயவர்களின் நட்பிலிருந்து விடுபடுவதேயாகும். நான் காண்டீபனுடனும் உருத்திர குமரனுடனும் நட்பாய் இருந்தபோது நவராசா எவ்வளவு சிரமமப்பட்டு என்னை அவர்களின் பிடியிலிருந்து விடுவித்தவன். இல்லா விட்டால் நானும் காண்டீபனைப்போலக் குடித்து விட்டு வீதிகளில் விழுந்து கிடப்பேன். அதனால் தான் என்னால் நவராசாவுக்குத் தீமைகள் செய்ய முடியாது. ஒரு நல்ல மகனைப் பெற்றிருக்கிறீர்கள்.. அவனை நல்ல முறையில் வாழவையுங்கள்'' என்று நகுலன் சண்முகநாதனுக்குச் சொன்னவன்'' என்றது குமரன்எலி.

''பணத்தாசை பிடித்தவைக்கு எந்த ஆலோசனைகளையும் சரிவராது. சின்னத்துரையின்ரை பேர்த்தியாரோடு ஒருவனுடன் ஓடியவள். சின்னத்துரை அவளைப் பிரித்துக்கொண்டு வர சண்முகநாதனின் அண்ணனின் மகன் திருமணம் செய்தவன். மாப்பிளையை வெளிநாட்டிற்கு அனுப்புறன் என்றவுடன் சண்முகநாதன் முன்நின்று செய்து வைத்தவர்... நர்மதாவின் தகப்பன் காசு கொடுத்தால் ஏற்பினை'' என்றது லட்சுமி எலி.

**798. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க**
**அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு**

''நவராசாவின் ஊக்கம் குறைவதற்கான செயல்களைச் செய்யாதீர்கள். துன்பம் வந்தபோது எனக்குதவிய நவராசாவின் நட்பை விடமுடியாது. துன்பம் வந்தபோது உதவவேண்டும் என்ற நினைவோடு தப்பிச் சென்றவர்களின் நட்பைத் தான் தொடரக்கூடாது. நீங்கள் எவ்வளவு பாசமாக நவராசாவை வளர்த்தீர்கள்... இப்போ ஏன் வெறுக்கிறீர்கள். நவராசாவின் கடின உழைப்புத்தான்

உங்கள் குடும்பத்தை முன்னேற்றியது. அவனில்லாவிட்டால் உழைப்பில்லை… என்றுதானே பிரிக்க விரும்புகிறீர்கள்'' என்று சண்முகநாதனை நகுலன் கேட்டவன்'' என்றது குமரன் எலி.

''நவராசா உழைக்கேக்கை காலுக்குமேல் கால்போட்டுக் கொண்டிருந்து கவலையில்லாமல் சாப்பிட்டவர். எப்படி மனம் மாறுவார்'' என்றது லட்சுமி எலி.

**799. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை**
**உள்ளினும் உள்ளம் சுடும்.**

''துன்பம் வரும்போது விட்டுப்பிரிகின்றவரின் நட்பை இறக்கும் நேரத்தில் நினைத்தாலும் அது பெரும் துன்பத்தைத் தரும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அப்படியானதொரு துன்பத்தைக் கொடுக்க நான் விரும்பவில்லை. அதனால் தான் அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துள்ளேன்… செய்து வருகிறேன். இத்தகைய எனது மனம் மாறுபாடு அடையாது. அதனால் பயனில்லாத கதைகளை கதைப்பதை விடுத்துச்சென்று வாருங்கள்'' என்று நகுலன் கூறியவன்'' என்றது குமரன் எலி.

''நகுலனின் நட்பு நவராசாவுக்கு இரும்புத்திரை போன்றது. எதிரிகளால் நவராசாவை எதுவும் செய்யமுடியாது'' என்றது லட்சுமி எலி.

**800.மருவுக மாசற்றார் கேண்மைஒன்று ஈத்தும்**
**ஒருவுக ஒப்பிலார் நட்பு**

''எனக்கும் நவராசாவுக்கும் இடையே பலமுறை மனக்கசப்பு ஏற்பட்டுள்ளது. '' உனது சகவாசமே வேண்டாம்'' என்று கூறிவிட்டுச் செல்லும் நவராசா மறுநாள் திரும்பிவந்து என்னோடு கதைப்பான்.. தவறு செய்வது இயல்பு. அந்தத்தவறை மறக்காது பழிவாங்குவது தான் தவறு. இத் தன்மையைப் பகைவர்கள் கூட விரும்புவார்கள். வியாபாரத்தில் எனக்குப் பகைவர்கள் பலருண்டு. அவர்களைப் பகைத்தால் எனது வியாபாரம் தான் பாதிப்படையும். அதனால் பகைவரினதும் நட்புரிமையை விடுவதில்லை. நேற்றும் உருத்திரகுமாரன் வந்து கதைத்தவன். என்று நகுலன் சண்முக நாதனுக்குச் சொன்னவன்'' என்றது குமரன்எலி.

''அவையவையை அந்தந்த இடத்தில் வைத்தால் பிரச்சினைகள் எதுவும் வராது''. என்றது லட்சுமி எலி.

**அதிகாரம் - 81 பழைமை**

**801. பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்**
**கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.**

''அதிகாலையில் கதிரேசன் பண்டிதர் வீரகத்தியின் வீட்டுக்குவந்தார். இருவரும் உயிர் நண்பர்கள். பண்டிதரின் இளைய புதல்வி திருமகளுக்கு முப்பத்து மூன்றுவயது. இன்னும் திருமணமாகவில்லை.. பேசிவரும் மாப்பிளையும் மாப்பிளையின் தந்தையும் ஏராளமான சீதனம் கேட்பதால் குழம்பிக் கொண்டிருந்தன.. இது பணடிதருக்குமட்டுமல்ல கதிரேசனுக்கும்

மனவருத்தம்தான். பண்டிதர் ஆசிரியராக இருந்து இருபது வருடங்களுக்குக் முன் ஓய்வு பெற்றதால் ஓய்வூதியம் மிகமிகக்குறைவு. பண்டிதரின் மூன்று பெண்களும் ஆசிரியைகள். இருவர் காதலித்துத் திருமணம் செய்துகொண்டனர். திருமகளுக்கு உலகம் தெரியாது பண்டிதரைப் போல யாருக்கும் கடமைப்படாமல் வாழ்பவள். கதிரேசனைக் கண்டதும் அவரை வரவேற்று ஆசனத்தில் அமர்த்தி அவரது பாதங்களைப் பணிந்தார். பண்டிதர், ஏன் கதிரேசன் பொழுது விடியுமுன் வந்தார் என நினைத்தபடி வந்தார். பண்டிதர் ஐயா, திருமகளுக்கு நான் திருமணத்தை ஒழுங்கு செய்து முடிவெடுத்து விட்டேன். நீங்கள் சம்மதிக்க வேண்டும்''. பண்டிதருக்கு ஆச்சரியம். தான் செய்யவேண்டிய வேலைகள் பலவற்றைக் கதிரேசன் செய்து முடித்துவிட்டுத்தான் சொல்வார். அதற்கு ஒருபோதும் பண்டிதர் மறுப்புத்தெரிவிக்கமாட்டார். திருமணம் என்றால் திருமகளைச் கேட்காது எப்படிச் சம்மதிப்பது என்று நினைத்தார் பண்டிதர். ஆனால் சொல்ல முடியவில்லை. யோசித்தபடி இருந்தார்'' என்றது குமரன் எலி.

''இருவரும் உயிர் நண்பர்கள். உயிர் நண்பர்கள் இப்படித்தான்'' என்றது லட்சுமி எலி.

**802 நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு**
**உப்பாதல் சான்றோர் கடன்..**

''என்னயோசிக்கிறாய்? திருமகள் எனக்கும் மகள் போன்றவள். நான் உனக்குக் கெடுதல் செய்யமாட்டேன். திருமகளைத் தான் கேட்க வேண்டும். அவளுக்குச் சம்மதம்'' என்று கதிரேசன் கூறிய போது; பிறகேன் என்னைக் கேட்பான். மாப்பிளை யாரென்று சொல்லு'' மகிழ்வுடன் கேட்டார் பண்டிதர் . '' உனது மாணவன் சரவணபவன். அவன் சௌமியாவைக் காதலித்துத்திருமணம் செய்தவன். அவள் விபத்தில் காலமாகி எட்டுவருடங்கள் கழிந்தும் ஒழுக்கமாக அவளின் நினைவோடு வாழ்பவன். நான் தான் வற்புறுத்திச் சம்மதிக்க வைத்தேன். அவன் பொறியலாளன். எனது சொல்லை தட்ட முடியாத ஏற்றுக்கொண்டான். உனக்குச் ஏற்றுக் கொண்டான். உனக்குச் சம்மதம் தானே'' என்று கதிரேசன் கேட்ட பண்டிதர் சொன்னார்; '' நண்பா, நான் சொல்வதை நீ மறுத்ததில்லை. அதுபோல நீ சொல்வதை நான் மறுத்ததில்லை. நட்பின் உரிமை காரணமாக நான் உனக்கு விருப்பமில்லாதவற்றைச் செய்தாலும் நீ மகிழ்வோடு ஏற்றுக்கொள்வாய். எனக்குப் பூரண சம்மதம்'' என்று மகிழ்வுடன் பண்டிதர் சிரித்தவர்''. என்றது குமரன் எலி.

''அன்பை மனதில் வைத்துக் கொண்டு வாழ்வை மகிழ்வுடன் வாழவேண்டும். சரவணபவனுக்குப் பெற்றோர் இல்லை. இன்பமாகவாழ்வதை விட்டுவிட்டு குன் துன்பப்படுவான்'' என்றது லட்சுமி எலி.

**803. பழகிய நட்புஎவன் செய்யும் கெழுதகைமை**
**செய்தாங்கு அமையாக் கடை**

''நீ எனது உயிர் நண்பன். நீ முன்பு செய்தவற்றை மகிழ்வுடன் ஏற்ற நான் இதை ஏற்காது விடுவேனா..? உனது விருப்பப்படி எல்லாவற்றையும் செய்'' என்று பண்டிதர் கூறினார். கதிரேசனுக்குச் சரியான மகிழ்ச்சி. சரவணபவனுக்கு ஒரு சகோதரி வெளிநாட்டில் இருக்கிறாள். அவள் நெடுக ரெலிபோனில் அவனைச் சமாதானம் செய்து ஒரு திருமணத்தைச் செய்து வையுங்கோ என்று சொல்வாள். நான் கேட்கும் போதெல்லாம் மறுத்துத் தனது காதலின் தெய்வீகத்தைப் பற்றிச் சொல்லும் சரவணபவன் இன்று

சம்மதித்து விட்டான். அதைச் சகோதரிக்குச் சொல்லி விட்டேன். அவளுக்குத் தாங்கமுடியாத மகிழ்ச்சி. அடுத்த வாரம் ஊருக்குவாறாள்'' என்று கதிரேசன் சொன்னவர்''என்றது குமரன் எலி.

''காதல் தெய்வீகமானது தான். அதற்காகத் தனது சுகதுக்கங்களைக் கட்டுப்படுத்துறதே. ஊரிலை காதலித்துத் திருமணம் செய்த சிலர் வேறு சிலருடன் உறவு வைத்திருக்கிறார்கள்'' என்றது லட்சுமி எலி.

**804. விழைதகையான்வேண்டி இருப்பர் கெழுதகையான்**
**கேளாது நட்டார் செயின்.**

''கதிரேசு, எனது பொறுப்பை நீக்கி விட்டாய். இனி நான் நிம்மதியாகச் சாவேன். நீ என்னைக்கேட்கு முன் திருமகளைக் கேட்டது தான் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. மனைவி இறந்தால் கட்டாயம் மறுமணம் செய்தல் வேண்டும். நீ என்னைக் கேட்டால் நான் உயிர் போனாலும் மறுக்கமாட்டன். ஆனால் திருமகள் அப்படியல்ல. அவள் கன்னிப்பெண். திருமணம் செய்து ஒரு பிள்ளையுள்ளவனை விரும்புவளோ என்று நான் பயப்பட வேண்டும். அது எமது நட்பிற்கு இழுக்காகும். நீ அறிவுள்ளவன் . அதனால் தான் இப்படி நடந்தய்'' என்று மகிழ்ந்தார்'' என்று கூறியது குமரன் எலி.

''வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். அதை விட்டுவிட்டுப் பழையதை எண்ணித்துயரப்படுவதால் என்ன பயன்'' என்றது லட்சுமிஎலி.

**805. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க**
**நோதக்க நட்டார் செயின்**

''கதிரேசு, அவன் திருமணமானவன். ஒரு பிள்ளைக்குத் தந்தை. அது தான் எனக்கு மனவருத்தமாக இருக்கிறது. இருந்தும் யாரும் எனது மகளைத் திருமணம் செய்ய முன்வரவில்லை. அவள் வாழவேண்டும். எனது குலம் தழைக்க வேண்டும். இப்பவே அவளுக்கு முப்பத்து மூன்று வயது. எனது மனைவிக்குப் பத்தொன்பது வயது நடக்கும்போது அவளை நான் திருமணம் செய்தேன். நீ யாவும் அறிந்தவன். என்னில் உள்ள அன்பைவிட உரிமை தான் உனக்கு அதிகம். அதனால் தான் இந்த முடிவை எடுத்தாய்... நன்றி.. மிகவும்நன்றி என்று பண்டிதர் தழுதழுத்தவர்'' என்றது குமரன் எலி.

''சீதனம் இல்லாமல் கலியாணம் செய்யவேண்டுமென்று மேடையில் பேசுவார்களே தவிர செயற்படமாட்டார்கள். செயற்படும் வேளை வந்தால் பெற்றோரையும் தாயையும் சாட்டுவார்'' என்றது லட்சுமி எலி.

**806. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்துத்**
**தொல்லைக்கண் நின்றார் தொடர்பு**

''அப்போது அங்கே வந்த திருமகள் சொன்னாள்; ''அப்பாவின் உயிர் நண்பர் நீங்கள். அதனால் ஒரு போதும் அப்பாவுக்குத் தீமை செய்ய மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும்.. அதுபோல அப்பாவுக்குத் தீமையயானவற்றைச் செய்தாலும் ஒருபோதும் உங்களைத் தவறாக நினைக்கமாட்டார். நட்பைத் துண்டிக்கவும் மாட்டார் என்றும் தெரியும். அதனால் தான் எது

விதமான சிந்தையும் இன்றி ஒப்புக்கொண்டேன். தற்போதய தம்பதியினர் வாகனத்தில் ஒன்றாகப் பயணிக்கும்போது எனது மனம் ஏங்கும். இப்போ மகிழ்கிறது'' என்று சொன்னவள்'' என்றது குமரன்எலி.

''வாழத் தெரிந்த பிள்ளை. அவள் ஒருபட்டதாரி ஆசிரியை துணிந்து முடிவெடுத்தவள் என்று சொல்ல முடியாது. வேறு வழியின்றிச் சம்மதித்தவள் என்று தான் நான் சொல்வன்'' என்றது லட்சுமி எலி.

**807. அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்**
**வழிவந்த கேண்மை யவர்.**

''நண்பன் என்ற முறையில் பண்டிதர் சம்மதிதாலும் அவரின் மனதில் ஒரு வலி இருக்கத்தான் செய்தது. எவ்வளவு கஷ்டப்பட்டுத் தன் எதிர்கால நல்வாழ்வுக்காகப் படித்தவள். கடைசியில் இப்படியாகிவிட்டது. அவள் எனக்காகவும், எனது நட்புக்காகவும் தான் ஒப்புக் கொண்டவள். வேறு வழியில்லாததால் தான் கதிரேசன் இந்த முடிவை எடுத்தவர். இப்போதய ஆண்கள் உரிய வயது வருமுன்பே எப்படியோவெல்லாம் வாழ்கிறார்கள். சரவணபவன் உத்தமன் . ஒழுக்கமானவன் இந்த வகையில் கதிரேசன் எனக்குப் பெரும் உதவி செய்துள்ளார்'' என்று நமசிவாயாகத்திற்குப் பண்டிதர் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''வெளி நாட்டவர் பெற்றோர் பிள்ளை குட்டிகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வாழ்கிறார்கள். ஆனால் எம்மவர் பாசம் உள்ளது போலப் பாசாங்கு காட்டிப் பெற்றோரை வருத்துகின்றனர்'' என்றது லட்சுமிஎலி.

**808. கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு**
**நாள்இழுக்கம் நட்டார் செயின்**

''திருநாவுக்கரசு பண்டிதரிடம் வந்து சொன்னார்; ''பண்டிதர் ஐயா, நீங்கள் அவசரப்பட்டு விட்டீர்கள். ஒருபட்டதாரிப் பெண்ணுக்கு ஒரு பிள்ளையுள்ளவனைத் திருமணம் செய்து கொடுக்கலாமா..?'' என்று கூறும்போது பண்டிதர் சொன்னார்; ''எது சரி எது பிழை என்று என்னால் தீர்மானிக்க முடியாதவாறு எனது நண்பன் தீர்மானித்து விட்டாள். இனி அதைப்பற்றிப் பேசுவதால் பயனில்லை. தயவு செய்து பேசாதீர்கள். கதிரேசன் எனக்குத் தீமை செய்ய மாட்டான். அப்படித் தீமை செய்தால் அது பயனுள்ள தீமையாகவே இருக்கும் என்று சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''சரவணபவனுக்கு முப்பத்தைந்து வயது தானே. அவன் சந்தோசமாக வாழட்டன். அவனது மனைவி இருந்தால் இன்னும்இரண்டு பிறந்திருக்கும்'' என்றது லட்சுமி எலி.

**809. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை**
**விடாஅர் விழையும் உலகு.**

''நமசிவாயகம் வந்து திருநாவுக்கரசுவுகக்குச் சொன்னார்; ''கதிரேசன் நல்ல வேலை செய்துள்ளார். அவர் பிரச்சினையைத் திருமகளுக்குச் சொல்லி, அவளிடம் சம்மதம் பெற்ற பின்னே சரவணபவனோடு கதைத்துச் சம்மதம் பெற்றவர். அதன் பின்பு தான் பண்டிதருக்குச் சொன்னவர். பண்டிதர் திருமகளின் விடயத்தில் படும் துயரம் கதிரேசனுக்குத் தெரியும்.

பிள்ளை இருந்தால் என்ன ஒரு நல்ல வாழ்வு இருவருக்கும் அமைந்து விட்டது. இனி நான் நிம்மதியாகச் சாகலாம்'' என்று பண்டிதர் கூறுமளவிற்குக் கதிரேசன் நல்லதைச் செய்துள்ளார் என்று நமசிவாயகம் கூறியவர்'' என்றது குமரன் எலி.

''தலைவலி தன்னும் தனக்கு வந்தால் தான் தெரியும். கதைக்கிறவை எதையும் யோசிக்காது கதைப்பினை'' என்றது லட்சுமி எலி

**810. விழையார் விழையப் படுப பழையார்கண்**
**பண்பின் தலைப்பிரியா தார்.**

''உருத்திரகுமாரனுக்குக் கதிரேசனைப் பிடிக்காது. இன்று மாலை பண்டிதரைக் கோவிலில் சந்தித்த உருத்திரகுமாரன் சொன்னார்; ''பண்டிதர் ஐயா, கதிரேசன் எதைச் செய்தாலும் சரியாகத் தான் செய்வார். நான் அவரது எதிரி தான். ஆனால் உங்கள் மகளதும் வாழ்வு சீரடைய அவர் உதவியுள்ளார். எனது மகள் உங்களின் மகளோடு படித்தவள். அவள் படும் துன்பம் கணக்கில்லாதது. அத்துடன் ஊரவர்களும் துன்புறுத்துகின்றனர். நான் சரவணபவனைக் கேட்ட போது அவன் மறுத்து விட்டான். என்று உருத்திரகுமாரன் பண்டிதருக்குச் சொன்னவர்'' என்றது குமரன் எலி.

''தலைவலி தன்னும் தனக்கு வந்தால் தான் தெரியும். கதைக்கிறவை எதையும் யோசிக்காது கதைப்பினை'' என்றது லட்சுமி எலி

## அதிகாரம் - 82 தீ நட்பு

**811. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை**
**பெருகலின் குன்றல் இனிது**

''காலைப் பூசைக்காகச் சரவணபவன் கோவிலுக்கு வந்த போது நவராசாவின் தந்தை சண்முகநாதன் சரவணபவனுக்கு அருகில் வந்து சொன்னார்; ''சரவணா, நீ திருமணம் செய்யப் போவதாக என்னிடம் சொல்லியிருந்தால் நான் நல்ல இடத்தில் கொழுத்த சீதனத்துடன் அழகான இளைமையான பெண்ணைத் திருமணம் செய்து தந்திருப்பேன். நீ கதிரேசனின் ஏமாற்றுக் கதையை நம்பி மோசம் போய் விட்டாய். பண்டிதரின் பென்சன் அவரின் மருத்துவச் செலவுக்குத் தான் போதும்'' என்று சொன்ன போது சரவணபவன் இடை மறித்துச் சொன்னான்; ''எனது தந்தை கதிரேசனைக் கடவுளாக மதிப்பவர் அவர் சொல்வார் கதிரேசனை நம்பி நான் எதுவும் செய்வேன். அவர் நஞ்சைத் தந்தாலும் அது நஞ்சாக மாறாது. அதனால் வாங்கி உண்டு விடுவேன். பலர் தாம் அன்புடையவர்களாக நன்மைகள் செய்வது போல நடிப்பார்கள். அவர்களின் நட்பை உடனே நீக்கி விட வேண்டும். கதிரேசன் அப்படியானவர் அல்ல என்பார். அதனால் தான் சம்மதித்தேன்'' என்று சொன்னவன்'' என்றது குமரன் எலி

''சண்முகநாதன் நாதன் நன்மை செய்பவரைப் போல நடித்து ஏமாற்றுபவர் என்று சரவணபவன் சொல்லாமல் சொல்லியிருக்கிறான். அவன் கற்றவன்''என்றது லட்சுமி எலி

**812. உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை**
**பெறினும் இழப்பினும் என்.**

''சௌமியாவுக்கு வயது கூட தலை கூட நரைத்து விட்டது. என்று சண்முகநாதன் கூறும் போது சரவணபவன் குறுக்கிட்டுச் சொன்னான்; ''நான் அழகை ரசிக்கவோ கவர்ச்சியைக் காணவோ திருமணம் செய்யவில்லை. கதிரேசன் கூறிய அறிவுரைகள் நியாயமாக இருந்தன. என்னால் எனது மகளைப் பராமரிக்க முடியவில்லை. அவள் அன்பில்லாமையால் விரக்தியுற்று தாகாத செயல்களில் ஈடுபட்டு விடுவாளே என்று பயமாக இருந்தது. அதனால் சௌமியாவுடன் எனது நிலையை விளக்கிக் கதைத்தேன். ஏறக் குறைய அவளும் எனது நிலையில் தான் இருந்தாள். பண்டிதர் மிகமிகச் சிறந்த மனிதன். ஒழுக்க சீலன் அவருக்குப் பிறந்த சௌமியா அன்பே உருவானவள். எனறு பாடசாலையில் கூறுகின்றனர். எனது தந்தை உயிரோடு இருக்கும் போது என்னைத் திருமணம் செய்யும் படி வற்புறுத்தியவர். கதிரேசனுக்கு அடிக்கடி சொல்பவர். கதிரேசன் தனது சுயநலம் கருதி எதையும் செய்வதில்லை. சிலர் பயன் கருதி நட்பாக இருப்பர். பயனில்லாத போது விலகிவிடுவார். அப்படியானவர்கள் உலகில் வாழ்கின்றனர். அதனால்தான் ஒப்புக் கொண்டேன்என்று சரவணபவன் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''சரவணபவனின் தந்தை நகுலேஸ்வரன் சண்முகநாதனைப் பற்றிச் சொல்லியிருப்பார். அவரிடம் வாங்கிய ஐம்பதாயிரம் ரூபா இன்னும் கொடுபடவில்லை'' என்றது லட்சுமி எலி.

**813. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது**
**கொள்வாரும் கள்வரும் நேர்.**

''நான் உனது தந்தையிடம் ஐம்பதாயிரம் ரூபாவைக் கடனாகப் பெற்றேன். அதைத் திருப்பிக் கொடுத்த போது அவர் அதை வாங்க மறுத்து உன்னை நல்ல முறையில் கவனிக்கச் சொன்னவர். அது உனக்குத் தெரியும் என்று சண்முகநாதன் கூறிய போது எனக்கு நகுலேஸ்வரன் கதிரேசனுக்குக் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. ''ஐயா சண்முகநாதன் கெட்டவன். ஒழுக்கமில்லாதவன். ஒரு மாதத்தில் திருப்பித் தருவதாகக் கூறி ஐம்பதனாயிரம் வாங்கி ஐந்து வருடங்கள் ஆச்சு. நான் கேட்டுக் கேட்டு அலுத்துப் போய்விட்டேன். அன்பினை நினைக்காது பொருளை மட்டும் நினைக்கும் விலைமாதைப் போன்றவன் சண்முகநாதன் என்று கூறியவர்'' என்றது குமரன் எலி.

''அப்படியானவர்களைத் தான் உலகம் மதிக்குது. எப்படியும் வாழலாம். என்று நினைப்பவன் தான் மகிழ்ச்சியுடன் வாழ்கிறான்'' எனறது லட்சுசுமி எலி.

**814. அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா வன்னார்**
**தமரின் தனிமை தலை**

‘‘உலகம் கெட்ட உலகம் அதில் நல்லவர்கள் பலர் வாழ்கிறார்கள். அவர்கள் துன்பங்களோடும் துயரங்களோடும் தான் வாழ்கிறார்கள். நல்லவனால் தீயவற்றை செய்ய முடியாது. தீயவர்களால் நல்லவற்றைச் செய்ய முடியாது. தீயவர்களால் நல்லவற்றை நினைத்துப் பார்க்க முடியாது. போர் நடக்கும் போது போர் வீரனைக் களத்தில் கீழே தள்ளி விட்டு ஓடும் அறிவற்ற குதிரையைப் போன்றவன் சண்முகநாதன். அவன் பணம் தரவிட்டாலும் பரவாயில்லை அவனின் நட்பை நீக்க வேண்டும். என்று நீக்கி விட்டேன்’’ என்று நகுலேஸ்வரன் கதிரேசனுக்குச் சொன்னவர்’’ என்றது குமரன் எலி.

‘‘சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தத் தெரிந்தவர்கள் சிலர் தமக்குச் சாதகமாகச் சந்தர்ப்பத்தை உருவாக்குவார்கள்’’ என்றது லட்சுமி எலி.

**815. செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை**
**எய்தலின் எய்தாமை நன்று**

‘‘சரவணன் சண்முகநாதனுக்குச் சொன்னான். ‘‘கதிரேசன் தூய்மையானவர். தீயதை நினைக்கத் தெரியாதவர். ஒரு முறை மகிழ்வுடன் கதைத்தாலே வாழ்க்கை முழுவதும் நட்பு வைத்திருப்பவர். அவரது நட்பை இறக்கும் வரை கைவிடக் கூடாது. எப்படித் தான் பாதுகாத்தாலும் பாதுகாக்க முடியாத இழிந்தவர்களோடு நட்புக் கொள்ளக் கூடாது. அவர்களை விலக்கி விட வேண்டும்’’ என்றவர். அதனால் கதிரேசனை எனது தந்தையாக நினைத்து ஒத்துக் கொண்டேன். என்றவன்’’ என்றது குமரன் எலி.

‘‘தனது மகனின் நல் வாழ்வையே தனது சுயநலத்துக்காக விரும்பாதவர். பிறரில் கரிசனை கொள்கிறாரானால் எதையோ பெறத்தான்’’ என்றது லட்சுமி எலி.

**816. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்**
**எதின்மை கோடி உறும்.**

‘‘கதிரேசன் பெரிதாகக் கற்காதவர். ஆனால் வாழ்க்கை என்ற தத்துவத்தை உணர்ந்தவர்.. அவர் ஒரு பல்கலைக்கழகம். அவர் சொல்வார், அறிவில்ல்லதவரிடம் கொள்கின்ற மிகப்பெரிய நட்பை விட, அறிவுடையவரின் பகை மேலானது என்றவர். இது மிகப்பெரியதொரு அருள்வாக்கியம். எனது நண்பன் காசிநாதன். அவன் வீட்டுக்குவந்து வேலைகள் செய்வான். கற்காதவன். அதனால் அவன் எனது நண்பனாக்கி அவனுக்கு உதவிகள் பலவும் செய்தேன். அவனின் பிள்ளைகள் எனது மகனுடன் விளையாடுவார்கள். அது எனது மகனாக விக்னேஷ்சிற்குப் பிடிப்பதில்லை. ஓயாமல் அவர்கள் அவனுக்குத் தேவையில்லாமல் அடிப்பார்கள். அத்துடன் விக்னேசின் வகுப்பாசிரியர் சௌமியா. அவள் என்னைச் சந்தித்துக் காகிநாதனது பிள்ளைகளின் பழக்க வழக்கங்கள் சரியில்லை’’ என்றவள். அதனால் அவர்களோடு சேரவிடாமல் தடுத்தேன். அதற்காகச் சௌமியாவின் வீட்டுக்கு அனுப்பினேன்.. இப்போ காசிநாதன் எனக்கும் சௌமியாவுக்கும் ஏற்கனவே தொடர்பிருப்பதாகக் கூறுகிறான். இது மிகப்பெரிய பொய். உண்மையானால் ஒப்புக்கொள்வதால் பிரச்சினை இல்லையே. எனது மேலதிகாரி எனது மகனில் மிகப்பெரிய

அன்பு வைத்துள்ளவர்.. அவரிடம் விக்னேஷ் சௌமியாவைப் பற்றிக் கூறுவான்….. சௌமியா நல்லதொரு ஆசிரியை. எல்லாப்பிள்ளைகளும் அவளை மிகவும் விரும்புகிறன. இதை அறியாத மேலதிகாரி அவனைத் திருமணம் செய்யச் சொன்னார். மேலதிகாரியை நான் ஏசிவிட்டேன். கோபப்பட்ட அவர் நேற்றுவந்து ''முன்பு நான் சொல்ல என்னை ஏசினாய் இப்ப என்ன நடந்தது?'' என்று கேட்டார்….. நான் எதுவும் பேசவில்லை'' என்று சரவணபவன் சண்முகநாதனுக்குச் சொன்னவன்'' என்றது குமரன் எலி.

''ஓர் ஆண் ஒருபெண்ணோடு சிரித்தாலும் பிரச்சினை, சிரிக்காவிட்டாலும் பிரச்சினை. இந்த மனிதர் எப்படி யெல்லாம் கதை கட்டுகிறார்கள். இதற்குத்தான் ஆறாம் அறிவு பயன்படுத்துகிறது'' என்றது லட்சுமி எலி.

**817. நகைவகைய ராகிய நட்பின் பகைவரான்**
**பத்தடுத்த கோடி உறும்.**

''வாழ்க்கை வெறுத்துப்போச்சு எதைச் செய்தாலும் பிரச்சினை செய்யாவிட்டாலும் பிரச்சினை. மேலதிகாரிக்கு என்னைப்பிடிக்காது. இந்தபோதும் நல்லவற்றைப் பாராட்டுவார். அவர் நேற்றுச்சொன்னார்; ''சரவணா, நீ படும் கஷ்டங்களுக்குச் காரணம் உனக்கு ஒரு பெண்துணையில்லாதது தான். நீ கெட்டிக்காரன். ஆனால் பலசமயங்களில் தவறுகள் விட்டுவிடுகிறாய். உனது மகன் மீதல்ல எனது மகள் மீதும் சௌமியா மிகப்பெரிய அன்பு வைத்துள்ளாள். அவள் ஒரு நல்லபெண்… அவளைத் திருமணம் செய்ததால் உனது வாழ்வு செழிக்கும் என்பதற்காகத் தான் அப்படிச்சொன்னேன். நீ அவளை விரும்பவில்லை என்று தெரியும் கதைகட்டிவிட்டால் நடக்கும் என்பதற்காகச் சொன்னேன்'' என்றவர் உள்ளத்தில் அன்பில்லாமல் பேசி மகிழும் போலியானவர்களின் நட்பை விட என்னைக்கண்டாலே வெறுப்படையும் மேலதிகாரியின் பகை நல்லது'' என்று சரவணபவன் சண்முகநாதனுக்குச் சொன்னவன்'' என்றது குமரன்எலி.

''நல்லவர்களின் பகை நன்மையைத் தான் கொடுக்கும். சரவணபவன் வீட்டுநினைப்பால் வேலை செய்யாது விடுவதால் தான் அவர் அப்படிச் சொன்னவர்'' என்றது லட்சுமி எலி.

**818. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை**
**சொல்லாடார் சோர விடல்.**

''சரவணபவன் கதிரேசனுக்குச் சொன்னான்; சண்முகநாதன் இப்போ அடிக்கடி என்னை வந்து சந்தித்துப் புத்திமதிகள் கூறுவது போல எனது செயல்கள் காலத்திற்கு ஒவ்வாதமை என்கிறார். எனது தந்தை சொல்வார்; ''முடியக் கூடிய செயல்களைக் கூடச் சிலர் முடியாதபடி செய்து கெடுத்து விடுவார்கள். சண்முகநாதன் அப்படிப் பட்டவன். அவனை வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் சேர்க்காதே'' என்றவர். இப்போ அவர் வருவதைப்பார்த்தால் சௌமியாவின் காரியத்தைக் கெடுத்து விடுவார் போலத் தோன்றுகிறது என்று சொல்லக் கதிரேசன் சொன்னார்; ''முடியக்கூடிய செயல்வேறு. முடிந்த செயல் வேறு பண்டிதர் ஒப்புக்

கொண்டதை உயிர்போனாலும் மறுக்கமாட்டார். நீ கவலை கொள்ளாமல் இரு'' என்றவர் என்றது குமரன் எலி.

''ஒரு பெண் கரை சேர்வதைக்கூட விட்டார்கள்'' என்றது லட்சுமி எலி.

**819. கனவினும் இன்னாத மன்னோ வினைவேறு**
**சொல்வேறு பட்டார் தொடர்பு**

''சிலரை நினைக்க வேதனையாக இருக்கிறது. சண்முகநாதன் இரண்டு நாட்களுக்கு முன்பு வந்து சௌமியாவை விட அழகான, இளமையான பணக்காரப் பெண்களைத் தான் செய்து தந்திருப்பன் என்றவர். இப்போ பண்டிதரிடம் சென்று எண்ணைப்பற்றி புகழ்ந்து கூறிக்கல்யாண ஏற்பாடுகளை செய்கிறார். சொல்லும் செயலும் வேறானவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள் என்று பண்டிதரிடம் சொல்லுங்கள்'' என்று சரவணபவன் கதிரேசனுக்குக் கூறக் கதிரேசன் சொன்னார்; ''மகனே, சண்முகநாதனின் நட்புக் கனவிலும் துன்பம் தரும்'' என்று பண்டிதருக்குத் தெரியும்'' என்றவர் என்றது குமரன் எலி.

''கண்டதையும் கற்றவன் தான் பண்டிதன். அவரை ஏமாற்ற முடியாது. திட்டத்தோடு பழகினாலும் அவரை வெல்லமுடியாது'' என்றது லட்சுமி எலி.

**820. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ**
**மன்றில் பழிப்பார் தொடர்பு**

''சண்முகநாதனுக்குப் பண்டிதர் சொன்னார்; ''சண்முகநாதா, தனியே உள்ளபோது உறவு கொண்டாடி மகிழ்வாகப் பேசும் நீ பலர் கூடியுள்ள இடத்தில் கேலி செய்வது உனது பொழுது போக்கு. சரவணபவன் மிகவும் நல்லவன். ஒழுக்கமானவன் என்று என்னிடம் கூறினாய். பின் மாலைநேரம் சனசமூகநிலையத்தில் சரவணபவனை இகழ்ந்து பேசினாய். இது கூடாதசெயல். உனது பாராட்டை யார் விரும்பினார்கள்? இல்லை உனது இகழ்ச்சியை யார் ரசித்தார்கள்? நீ கதைத்ததை அப்படியே வந்து எனக்கும் கதிரேசனுக்கும் பலர் சொன்னார்கள். இதை நான் நேரிற் சொல்வது ஏனென்றால் உன்போன்றவர்களது நட்புத்தீமையானது. இனிமேல் இங்கே வராதே'' என்றவர் என்றது குமரன் எலி.

''ரோசம் இல்லாதவன் இராசாவிலும் பெரியவன் என்பார்கள். இதெல்லாம் அவனுக்கு உறைக்காது'' என்றது குமரன் எலி.